# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள் - 28

விலை - 30ரூபா

சுடர் 34 கதிர் 321 புரட்டாதி 29ஆம் நாள் புதன்கிழமை 16 ஒக்ரோபர் 2019 வள்ளுவர் ஆண்டு 2050

## காட்டிக் கொடுத்தார் மைத்திரி - சந்திரிகா

கொழும்பு, ஒக்.16

கொலைக்காரக் கும்பலுடன் உடன்படிக்கை செய்து தனிப்பட்ட நலன்களுக்காகச் சிறிலங்கா சுதந்திரக் கட்சியைக் காட்டிக் கொடுத்து விட்டார் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன.

இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் தலைவியும் முன்னாள் அரச தலைவருமான சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க குற்றம்சாட்டியுள்ளார்.

சுதந்திரக் கட்சி ஆதரவாளர்களுக்கு அனுப்பியுள்ள பகிரங்க கடிதத்திலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

*விரிவு 17 ஆம் பக்கம்*

## வேட்பாளர்கள் அனைவருக்கும் அதியுச்ச பாதுகாப்பு

கொழும்பு, ஒக்.16

நடைபெறவுள்ள அரச தலைவர் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் அனைவருக்கும் உயர்ந்தபட்ச பாதுகாப்பை வழங்குவது என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்றுப் பிற்பகல் அரச தலைவர் செயலகத்தில் நடைபெற்ற தேசிய பாதுகாப்பு சபைச் கூட்டத்தின்போது தீர்மானிக்கப்பட்டது.

அரச தலைவர் வேட்பாளர்களால் கோரப்படும் வகையில் அவர்களுக்குத் தேவையான உயர்ந்தபட்ச பாதுகாப்பை வழங்க வேண்டும் என்று பாதுகாப்புத் துறை பிரதானிகளுக்கு அரச தலைவர் அவசர பணிப்புரை விடுத்துள்ளார் 25

# ஐ.நா. தீர்மானத்தை நிராகரித்தார் கோத்தா

### அது சட்டபூர்வமானதில்லை என்றும் தெரிவிப்பு

**கொழும்பு, ஒக்ரோபர்.16**

**ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானத்தைக் கட்சியாக நாம் ஏற்கனவே நிராகரித்து விட்டோம். எனது தனிப்பட்ட கருத்து சமர்ப்பிக்கப்பட்டுள்ள தீர்மானம் சட்டபூர்வமானதில்லை என்பதாகும்.**

**இவ்வாறு தெரிவித்துள்ளார் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ச.** 25

## கூட்டமைப்புடன் விரைவில் பேச்சு - மகிந்த

கொழும்பு, ஒக்.16

அரச தலைவர் தேர்தல் தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் விரைவில் பேச்சு நடத்தப்படும் என்று சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் 25

**கொழும்பில்:**

## காணாமல் ஆக்கப்பட்டோருக்கு புது விளக்கம் தந்தார் கோத்தா

கொழும்பு, ஒக்.16

காணாமல் போவது, இராணுவத்தில் சரணடைவது என்ற விடயங்கள் இரு வேறுபட்ட காரணிகளாகும். போர்க் களத்தில் பல சம்பவங்கள் இடம்பெறும். உடல்களைக் கூடப் பெற்றுக்கொள்ள முடியாத நிலைமை ஏற்படும். காணாமல் போனார்கள் எனக் கூறுபவர்களின் உடல்கள் அவர்களின் உறவுகளுக்குக் கிடைக்காமல் போவதன் காரணத்தால்தான் அவ்வாறு கூறுவார்கள். இது எமது தரப்பிலும் இடம்பெற்றது.

இவ்வாறு தெரிவித்துள்ளார் சிறி 04

**யாழ்ப்பாணத்தில்:**

## காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் 2 வருடங்களில் தீர்வு என்றார் நாமல்

யாழ்ப்பாணம், ஒக்.16

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சினை, சிறையில் உள்ள கைதிகளின் பிரச்சினை, காணிப் பிரச்சினை என்பவற்றுக்கு ஆட்சிக்கு வந்து இரு ஆண்டுகளில் தீர்வைப் பெற்றுத் தருவோம் என்று யாழ்ப்பாணத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுச் செய்தியாளர் சந்திப்பு நடத்திய சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ச, காணமல் போனார்கள் எனக் கூறு 25



## 41 ஆண்டுகளுக்குப் பின்னர் இறங்கியது இந்திய வானூர்தி

யாழ்ப்பாணம், ஒக்.16

யாழ்ப்பாணம் பன்னாட்டு வானூர்தி நிலையத்தில் 41 ஆண்டுகளின் பின்னர் இந்திய விமானம் நேற்றுத் தரையிறங்கியது.

பலாலி வானூர்தி நிலையம் தற்போது சீரமைக்கப்பட்டு யாழ்ப்பாணம் பன்னாட்டு வானூர்தி நிலையமா 25

## குடிவரவு-குடியகல்வு பணி நேற்றைய தினமே ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக்.16

யாழ்ப்பாணம் பன்னாட்டு வானூர்தித் தளத்தில் நேற்று இந்திய வானூர்தி தரையிறங்கிய நிலையில், அந்த வானூர்தியில் வந்தவர்கள் குடிவரவு குடியகல்வு திணைக்கள நடைமுறைக 25

## கோடரியால் தாக்கப்பட்டு குடும்பத் தலைவர் கொலை

யாழ்ப்பாணம், ஒக்.16

யாழ்ப்பாணம் அரியாலைப் பகுதியில் குடும்பத் தலைவர் ஒருவர் அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார் என்று யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.

மணியம்தோட்டம், 2ஆம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த கொன்ஸ்ரன் கலஸ்ரன் (வயது-33) என்பவரே கொலை செய்யப்பட்டுள்ளார். 25

## வான்படையினரின் தடையால் 6 மைல் தூரம் சுற்றும் நிலை

யாழ்ப்பாணம், ஒக்.16

வலிகாமம் வடக்கு, கட்டுவனில் 6 ஏக்கர் நிலத்தைத் தொடர்ந்தும் வான் படையினர் தமது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதால் யாழ்ப்பாணம் பன்னாட்டு வானூர்தித் நிலையத்துக்கு செல்வதற்கு 6 மைல் தூரம் சுற்ற வேண்டிய நிலமை ஏற்பட்டுள்ளது. இது தொடர்பில் உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. 04

## காணி உரிமையாளர்களுக்கு முன்னுரிமை வழங்க கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக்.16

யாழ்ப்பாணம் பன்னாட்டு வானூர்தி நிலையத்தின் உள்ளே அமைக்கப்படும் வானூர்தி நிலைய விற்பனை அங்காடிகளை அமைக்கும்போது அந்தப் பகுதி நில உரிமையாளர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்று நில உரி 25



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## அறிவித்தல்

**ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை**

**தரம் 6 அனுமதி (2020)**

எமது கல்லூரியில் தரம் - 6 அனுமதிக்கான விண்ணப்பங்கள் 16.10.2019 தொடக்கம் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது.

**விண்ணப்ப முடிவுதிகதி - 01.11.2019**

விண்ணப்பங்களை எமது காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**அதிபர்.** (C 11475)(14,17)

## வேலையாள்கள் தேவை

எமது ஸ்தாபனத்துக்கு கனரக வாகன ஓட்டுநர்கள் தேவை.

நேரில் சமுகம் தரவும்.

**தேனு களஞ்சியம்**

இல.29, நவின சந்தை உப்புறம், திருநெல்வேலி.

**077 889 3755**

(CS28723)(11,17)

## மரண அறிவித்தல்கள்



### சத்தியசீலன் இரத்தினம் (தவம்)

கைதடி தெற்கு, கைதடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சத்தியசீலன், இரத்தினம் கடந்த 13.10.2019 அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவலை சீதேவி தம்பதிகளின் புதல்வியும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் பொன்னி தம்பதிகளின் மருமகளும் சத்தியசீலனின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற மகாலிங்கம் மற்றும் பரமசாமி, பூமணி, பாக்கியம், அமுதலிங்கம், சுந்தரலிங்கம், அரியமலர், செல்வராணி, சந்திரலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் மற்றும் ராஜேஸ்வரி, யோகேஸ்வரி, விக்கினேஸ்வரன், விக்கினேஸ்வரி, மகேஸ்வரன், பரமானந்தன் ஆகியோரின் மைத்துனியும் கருணாகரன் (லண்டன்), ரமேஸ்குமார் (சுவிஸ்), சோபா, சங்கீதா(பிரதேச செயலகம், கோப்பாய்), கஜன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஜீவாதரன் (போதனா வைத்தியசாலை), றமேஸ் (பனை அபிவிருத்-திச் சபை), தர்ஜிகா (லண்டன்), அபர்ணா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் சுபஸ்தி (லண்டன்), டஸ்மிகா (லண்டன்), அஸ்னி (சுவிஸ்), பேரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.10.2019) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11.00 மணியளவில் கைதடி ஊரியான் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கைதடி தெற்கு,**
**கைதடி.**
(CS 28715)(14.17)
**தகவல் :**
**குடும்பத்தினர்.**

### லூ. அன்ரன் விமலதாசன் (நெல்சன்)



மலர்வு 04.02.1963 உதிர்வு 14.10.2019

கொய்யாத்தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்புத்துறை விதானை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட லூ. அன்ரன் விமலதாசன் (நெல்சன்) 14.10.2019 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான லூக்கேஸ்பிள்ளை (நல்லையா) - அந்தோனியாப்பிள்ளை (சொர்ணம்மா) தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான குருசுமுத்து அந்தோனிப்பிள்ளை - பங்கிராசம்மா தம்பதிகளின் மருமகனும், ஜெனற் கிளசிற்றசின் (ஆசிரியர், யா/புனித சாள்ஸ் ம.வி) அன்புக் கணவரும், கீர்த்தனாவின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான அருமைத்துரை லலிதா, வைமன் மற்றும் லீலா, சுசிலா, வையலா ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான பொன்கலதாஸ், சின்னையா மற்றும் ஜெறால்ட் பாமா, லலிதா, புஸ்பகுமார் ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற லவ்ளி, லக்ளி மற்றும் பேபி, மொர்ளி, சூட்டி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், மேரிஅஞ்சலா, பவுலீனா, பெலிஸ்ரஸ், ஸ்பிரீத்தம்மா, இயேசுமலர் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.10.2019) புதன்கிழமை மாலை 3 மணியளவில் கிறிஸ்து அரசர் ஆலயம் கொய்யாத்தோட்டத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுத்து அன்னாரின் பூதவுடல் யா/கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல. 10A, விதானை வீதி,**
**கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.**
**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**076 843 1234**

# உயிர் வாழ உணவு அவசியம்!



- எல்லா உயிரினமும் உயிர் வாழ உணவு என்பது அவசியமாகும்.
- அனைவருக்கும் உணவு கிடைக்கவேண்டும், உணவுகளை வீணாக்கக்கூடாது என்பதை வலியுறுத்தும் நோக்கத்தில் உலகம் முழுவதும் ஒக்ரோபர் 16ஆம் திகதி உலக உணவு தினம் கொண்டாடப்பட்டு வருகிறது.
- கடந்த 33 ஆண்டுகளாக இந்த நிகழ்வானது நடந்து வருகிறது.
- போதிய உணவுகள் இன்றி உலகில் 765 மில்லியன் மக்கள் வாழ்வதாக ஒரு ஆய்வு கணக்கெடுப்பு கூறுகிறது.
- உலகில் அதிகரித்து வரும் மக்கள் தொகை பெருக்கத்தால் தான் வறுமையும், உணவு தட்டுபாடும் நிகழ்கிறது.
- மக்கள் தொகை வள்ர்ச்சியை ஒப்பிடும் போது உணவு பொருள்களின் உற்பத்தி குறைவாகவே உள்ளது.
- விவசாய நிலங்கள் குறைவு, வறட்சி, வெள்ள பெருக்கு, விவசாயம்செய்வதில்அக்கறையின்மைபோன்றவைகள் தான் விவசாயத்தைப் பாதிக்கிறது.
- விவசாயத்தின் தேவை குறித்தும், உணவு உற்பத்திகள் குறித்து எம்மை ஆளும் அரசுகள் தான் மக்களுக்கு விழிப்புணர்வையும் ஏற்படுத்தவும், உணவுக்கு தேவையான உற்பத்திகளை பெருக்கவும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.
- தனி ஒருவனுக்கு உணவில்லையெனில் ஜகத்தை அழித்திடுவோம் என்றார் பாரதியார். அதற்கேற்ப உலகில் பட்டினி சாவே ஏற்படாமல் இருக்க அரசுடன் சேர்ந்து நாமும் இந்தநாளில் சபதம் ஏற்போம்.

## பெயர்மாற்றம்

**இராசநாயகம் ஹரிஹரன்**
என்னும் எனது பெயர் இன்றிலிருந்து
**இராசநாயகம் கோபிநாத்**
என மாற்றப்படுகின்றது.

**கோபிநாத்**

CS28731(16/17)

## யா/நெல்லியடி மத்திய கல்லூரி

**தேசிய பாடசாலை**

**சிற்றுண்டிச்சாலையை குத்தகைக்கு விடுதல்**

யா/ நெல்லியடி மத்திய கல்லூரியின் சிற்றுண்டிச்சாலையை 01.01.2020 முதல் 31.12.2020 வரை குத்தகைக்கு விடுவதற்கு பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான விண்ணப்படிவத்தை 15.10.2019 முதல் கல்லூரி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் ஏற்கப்படும் இறுதித் திகதி 15.11.2019

அதிபர்

## பிளாஸ்ரிக் அரைத்துக் கொடுக்கப்படும்

பாவிக்கப்பட்ட கழிவு பிளாஸ்ரிக் வகைகள் அனைத்தும் மீள் சுழற்சிக்கு உகந்தவாறு அரைத்து தூளாக கொடுக்கப்படும்.

**தொடர்பு - 077 956 1525**

## கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவனத்தின் பணிப்பாளர் கந்தையா மகாதேவசிவம் அவர்களின் அன்பு மாமியார்

**திருமதி சரவணமுத்து வள்ளியம்மை**

அவர்கள் நேற்று (15.10.2019) செவ்வாய்க்கிழமை காலமானார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பணியாளர்களும், ஊழியர்களும்
Sivan malikai
No:- 166,K.K.S Road, Jaffna.

பணியாளர்களும், ஊழியர்களும்
No: 28, Mariamman Road,
Thirunelvely, Jaffna.

## எல்லாவற்றுக்கும் ஒரு திறமை உண்டு



விவசாயி ஒருவருக்கு மலை அருகே தோட்டம் ஒன்று இருந்தது. அதில் பயிர் செய்து இருந்தார். பயிர்ச் செடிகளுக்கு இடையே முளைக்கும் களைகள், முட்செடிகள் ஆகியவற்றைப் பிடுங்கி எடுத்து பயிர் செடிகளைக் கண்ணும் கருத்துமாகப் பாதுகாத்து வளர்த்து வந்தார்.

ஒரு நாள் பயிர் செடிக்கு இடையே வளர்ந்து இருந்த ஒரு முட்செடி செடி ஒன்றை பிடுங்கி எறிந்தார். உடனே அந்த முட்செடி கண்ணீர் விட்டு அழுதது. விவசாயி அந்த முட்செடியிடம் சென்று போது அது சொன்னது, "நான் தான் யாருக்குமே பயன்பட போவதில்லையே. எந்த திறமையும் இல்லாத என்னை ஏன் கடவுள் படைத்தார்?" என வருத்தப்பட்டது.

"கடவுள் யாரையும் காரணம் இல்லாமல் படைப்பதில்லை. எல்லோருக்கும் திறமையும், பலத்தையும் கொடுத்து இருக்கிறார். அதை நாம் தான் கண்டுபிடித்து பயன் படுத்த வேண்டும்" என்று விவசாயி சொல்ல..

"என்ன திறமை இருக்க போகிறது எங்கிட்ட?, நானோ முட்செடி பிறரைக் காயப்படுத்துவேனோ தவிர, வேரு யாருக்கும் உதவியாக இருக்க மாட்டேன்" என்று தன்னை நினைத்து நொந்து கொண்டது.

மறுநாள் விவசாயி தன் தோட்டைத்திலிருந்தது பிடுங்கி எறிந்த முட்செடி களை எல்லாம் ஒன்று சேர்த்து தோட்டைத் தைச் சுற்றி வேலி அமைத்தார்.

பின்பு அந்த முட்செடியிட்ம் சென்று, "நீ முட்செடி தான் பிறரைக் காயப்படுத்துபவன் தான். ஆனால் உன்னிடமும் திறமை இருக்கிறது பலமும் இருக்கிறது. அதனால் தான் இன்று இந்த தோட்டைத்தையே பாதுகாக்கும் காவல்கார வேலியாக உயர்ந்துவிட்டாய்" என்று விவசாயி சொல்ல..

கடவுள் படைத்த எல்லா உயிர்களுக்குமே திறமையும் பலமும் உண்டு என்பதை உணர்ந்தது முட்செடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1612
சீட்டிழுப்பு திகதி 15.10.2019
வெற்றி இலக்கங்கள்
24 38 48 55 R
அடுத்த வியாழக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ.39, 223, 520/=

சுப்பர் போல் (SUPER BALL)
சீட்டிழுப்பு வாரம் 1058
சீட்டிழுப்பு திகதி 2019.10.14 திங்கட்கிழமை
R 02 11 16 29
அடுத்த சுப்பர் ஜக்பொட்
ரூ. 79,133,476/-
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 762
வர்ணம் : இளநீலம்
சீட்டிழுப்பு திகதி: 2019.10.15
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 54,627,885/-
வெற்றி இலக்கங்கள்
06 15 46 53 C
விசேட வெற்றி இல.
7842

ராசி அதிர்ஷ்டம்
திகதி 15.10.2019
வெற்றி வாரம் 2648
வர்ணம் சிகப்பு
மகரம்
வெற்றி இலக்கங்கள்
01 29 43 59
புதன் கிழமை வெற்றிப் பொதி
ரூ. 2, 383, 070/=
16.10.2019 ம் திகதி புதன் கிழமை பச்சை நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

## வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் இயங்கும் முன்னணி Hotel ஆன Tilko Jaffna City Hotel ற்கு பின்வரும் பணியாளர்கள் தேவைப்படுகின்றார்கள்.

- **கணக்காளர்** - Accountant (CIMA/ Charted finalist, Minimum one Year experiance for annual report & Monthly P&L )
- **சிரேஷ்ட அறை பராமரிப்பாளர்** - Senior Housekeeping attendant
- **செலவின கட்டுப்பாட்டாளர்** - Cost Conroller
- **சிரேஷ்ட உணவு பரிமாறுபவர்** - Senior Waiter

அனுபவம் மற்றும் வயதிற்கு ஏற்ப சம்பளம் தீர்மானிக்கப்படும்.

உணவு மற்றும் தங்குமிட வசதிகள் செய்துதரப்படும்

தங்களது சுய விபரக்கோவையை 25.10.2019 ற்கு முன்னர் நேரில் அல்லது கீழ்க்காணும் முகவரிக்கு/ மின்னஞ்சலிற்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

தொடர்புகளுக்கு - 021 720 0707/ 076 149 8964

**info@tilkohotels.com/ anthony52777@yahoo.com**

**Tilko Jaffna City Hotel**
**70/6, K.K.S Road, Jaffna**

## விற்பனைக்கு

சில மாதங்கள் பாவிக்கப்பட்ட சீற் (கூரைத் தகடுகள்), கன்வஸ் மரங்கள், கொங்கிறீட் தூண்கள், கோழிக்கூட்டுநெற், ஓட்டமெற்றிக் தண்ணீர் கான்கள், சாப்பாட்டு தட்டுக்கள் என்பன விற்பனைக்கு உண்டு.

**தொடர்புகளுக்கு:- 076 232 6951**

## வாடகைக்கு உண்டு

281 ½ மணிக்கூட்டு வீதியில் 2800 சதுர அடி விஸ்தீரணமுள்ள மேல்மாடிப்பகுதி பாவனைக்கு வாடகைக்கு உண்டு. மருத்துவர்கள் மற்றும் மருத்துவ பீட மாணவர்களுக்கும் ஏற்ற அறைகளுடன் கூடிய வீடாகவும் அலுவலகமாகவும் பாவிக்கலாம்

**071 805 2281**

## கடை வாடகைக்கு தேவை

பலாலி வீதி, கே.கே.எஸ். வீதியில் கோண்டாவிலுக்கு இடைப்பட்ட பிரதேசத்தில் நன்னீர் வசதியுடன் கடை வாடகைக்கு தேவை.

தொடர்பு: நிரோஷன்
**077 959 7159**

## யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலகம்
## பழைய புத்தகங்களைக் கொள்வனவு செய்யும் நிறுவனங்களைப் பதிவுசெய்தல்

பாடசாலைகளில் பயன்படுத்தப்பட்டு தற்போது பாவிக்க முடியாத நிலையிலுள்ள புத்தகங்களை விற்பனை செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளதால் இவற்றைக் கொள்வனவு செய்ய விரும்பும் நிறுவனங்கள் உரிய விண்ணப்பப் படிவத்தினை எமது அலுவலக நிதிக் கிளையில் அலுவலக நேரத்தில் பெற்றுப் பூரணப்படுத்தி 30.10.2019 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

செ.சந்திரராஜா
வலயக்கல்விப்பணிப்பாளர்,
யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலகம்
செம்மணி வீதி, நல்லூர்.

உதயன் விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com, 021 493 1111

STUDY , WORK & SETTLE IN
CANADA
GERMANY
FRANCE
LATVIA
EUROPE
செல்ல வழிகாட்டல்
ESL +
BUSINESS ADMINISTRATION
JOURNALISM & MEDIA
HUMAN RESOURCES
TOURISM & HOSPITALITY
BANK BALANCE
(NO IELTS)
SCHENGAN VISA
FULL IN ENGLISH MEDIUM
ROYAL EDUCATION SERVICE
Jampettah street , Colombo 13
0777 911 649 / 0777 216 291
குறைந்த செலவில், விரைவில் பயணம்.


சம்பத்
சமாச்சார
அரச ஓய்வூதியம் பெறுநர் கடன் திட்டம்

அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றிருந்தாலும் உங்கள் கடமைகள் இன்னும் எஞ்சியிருக்கலாம்.

அதனால்தான், அரச சேவையிலிருந்து ஓய்வுபெற்ற உங்களுக்கு, சம்பத் சமாச்சார ஓய்வூதியதாரர்களுக்கான கடன் திட்டத்தை வழங்குகிறோம்.

- 2 மில்லியன் ரூபாய் வரை கடன் தொகை
- குறைந்த வட்டி வீதம்
- 10 வருடங்கள் வரையான மீள் செலுத்தும் தவணை
- ஒரே நாளில் கைக்கு பணம்
- பிணை நிற்பவர்கள் அவசியம் இல்லை

உங்கள் ஓய்வூதிய கணக்கை இன்றே சம்பத் வங்கிக்கு மாற்றிடுங்கள்.
வாழ்வின் அழகிய நாட்களை வாழத் தொடங்குங்கள்.



மேலதிக விபரங்களுக்கு 0112 30 30 50 அல்லது அருகிலுள்ள சம்பத் வங்கிக்கு வாருங்கள்.

சம்பத் வங்கி
எதிர்காலத்தின் முன்னோடிகள்

www.sampath.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணாமல்...

லங்கா பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ச.

அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ச கொழும்பில் நேற்று உள்நாட்டு, வெளிநாட்டுச் செய்தியாளர்களைச் சந்தித்தார். அவர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இந்தச் செய்தியாளர் சந்திப்பில் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் தலைவர் மகிந்த ராஜபக்ச, சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் கூட்டணிக் கட்சிகளின் தலைவர்கள் ஆகியோரும் இதில் கலந்துகொண்டனர்.

கோத்தபாய ராஜபக்சவிடம் ஊடகவியலாளர்கள் கேட்ட கேள்விகளுக்கு அவர் அளித்த பதில்கள் வருமாறு:

**கேள்வி:** பொறுப்புக்கூறல் விடயத்தில் நீங்கள் ஆரம்பத்தில் முன்னெடுத்த நகர்வுகள் என்ன?

**பதில்:** காணமல் போனோர் தொடர்பான விடயத்தை தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரவியல் திணைக்களத்தின் மூலமாக ஆராய்ந்தோம். விடுதலைப் புலிகள் மற்றும் பொதுமக்கள் தொடர்பாக ஆராய்ந்தோம். பன்னாட்டுக் கண்காணிப்பு அமைப்புகள் எமது விடயங்களைக் கவனத்தில் கொள்ளாது அவர்கள் நினைத்த எண்ணிக்கைகளை முன்வைத்தனர். வடக்கு, கிழக்கு மக்களுக்கு மிகவும் முக்கியமான பிரச்சினைகள் உள்ளன. அவர்களுக்குக் கல்வி, அபிவிருத்தி, வேலைவாய்ப்புகள் வேண்டும் என்ற முக்கியமான தேவைகள் உள்ளன. கடந்த கால விடயங்களை காவிக் கொண்டு செல்ல அவர்கள் விரும்பவில்லை. கடந்த கால குற்றச் சாட்டுக்களை கைவிட்டு இப்போது தேவையான விடயங்களை மக்கள் எதிர்பார்க்கும் விடயங்களை முன்னெடுக்க வேண்டும்.

**கேள்வி:** இராணுவத்திடம் சரணடைந்த தமது உறவுகள் எங்கே என்ற கேள்வியை வடக்கு, கிழக்குத் தமிழ் மக்கள் கேட்கின்றனர். நீங்கள் தான் இராணுவத்தை வழிநடத்தினீர்கள். என்ன நடந்தது அவர்களுக்கு? எங்கே அவர்கள்?

**பதில்:** நீங்கள் தவறாக விளங்கிக்கொண்டுளீர்கள். நான் இராணுவத்தை வழிநடத்தவில்லை. இராணுவத் தளபதிதான் இராணுவத்தை வழிநடத்தினார்.

**கேள்வி:** இராணுவத்தில் சரணடைந்தவர்கள் எங்கே?

**பதில்:** அப்போது இராணுவத்தில் 13 ஆயிரத்து 784 பேர் சரணடைந்தனர் என நினைகின்றேன். இவர்கள் மறுவாழ்வுக்கு உட்படுத்தப்பட்டு அவர்களில் சிலருக்கு இராணுவத்திலேயே வேலைகளும் பெற்றுக் கொடுக்கப்பட்டன. அனைவரும் சமூகத்துடன் இணைக்கப்பட்டனர். உலகத்தில் எந்தவொரு நாடும் செய்யாத மிகச் சரியான மறுவாழ்வு வேலைத்திட்டத்தை நாம் முன்னெடுத்தோம். எமது மறுவாழ்வு வேலைத்திட்டங்களை பன்னாடுகள் அங்கீகரித்தன. நாம் யாரையும் தொடர்ந்தும் தடுப்புக் காவலில் வைத்திருக்கவில்லை. பயங்கரவாதத்தில் ஈடுபட்டவர்களுக்கு ஆறு மாதம், ஒரு வருடம் மற்றும் உயரிய காலமாக இரண்டு ஆண்டுகள் என மறுவாழ்வு வழங்கப்பட்டு அவர்களை விடுவித்தோம். இதுவே வெற்றிகரமான வேலைத்திட்டம் என நினைக்கின்றேன்.

**கேள்வி:** எவரும் காணாமல் போகவில்லை என்றா கூறுகின்றீர்கள்?

**பதில்:** காணாமல் போவது, இராணுவத்தில் சரணடைவது என்ற விடயங்கள் இரு வேறுபட்ட காரணிகளாகும். இராணுவத்தில் கூட 4 ஆயிரத்துக்கும் அதிகமான இராணுவ அதிகாரிகள் காணாமல் போயுள்ளனர். போர்க் களத்தில் பல சம்பவங்கள் இடம்பெறும். உடல்களைக் கூடப் பெற்றுக்கொள்ள முடியாத நிலைமை ஏற்படும். யாழ்ப்பாணப் போரில் நான் நேரடியாக எனது கண்களால் இவ்வாறான சம்பவங்களைக் கண்டேன். கண் முன்னே உடல்கள் நாசமாவதை நான் அவதானித்தேன். போரில் பலர் காணாமல் போவார்கள். காணாமல் போனார்கள் எனக் கூறுபவர்களின் உடல்கள் அவர்களின் உறவுகளுக்குக் கிடைக்காமல் போவதன் காரணத்தால்தான் அவ்வாறு கூறுவார்கள். இது எமது தரப்பிலும் இடம்பெற்றது. நீங்கள் கேட்டதற்கு அமைய இராணுவதில் சரணடைந்த பொதுமக்கள் மறுவாழ்வுக்கு உட்படுத்தப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளனர்.

**கேள்வி:** வடக்கில் மக்கள் கூறுவது பொய்யா?

**பதில்:** இல்லை, சிலர் அவ்வாறு கூறமுடியும். ஆனால், அவை அனைத்துமே குற்றச்சாட்டுக்கள் மட்டுமே. இவற்றை ஆராய ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. ஆனால், அவ்வாறு எந்தத் தகவலும் இல்லை.

**கேள்வி:** பரணகம ஆணைக்குழு அவ்வாறு கூறியதே?

**பதில்:** இல்லை.

**கேள்வி:** நீங்கள் பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுத்தீர்கள் என்று கூறினீர்கள். எவ்வாறான வேலைத் திட்டங்களைக் கையாண்டீர்கள்?

**பதில்:** நீங்கள் கடந்த காலத்தைப் பற்றியே கேட்கின்றீர்கள். எதிர்காலம் குறித்துக் கேளுங்களேன். நான் எதிர்கால வேலைத் திட்டங்கள் குறித்தே சிந்திக்கின்றேன் - என்றார்.

(எ-22)

# மரண அறிவித்தல்கள்

## சரவணமுத்து வள்ளியம்மை



ஏழாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து வள்ளியம்மை நேற்று (15.10.2019) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆசிரியர் முருகேசு இராசம்மா தம்பதிகளின் மகளும் காலஞ்சென்றவர்களான வைரமுத்து தெய்வானை தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்ற ஆசிரியர் சரவணமுத்துவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, தெய்வானை, லக்சுமி, கந்தையா மற்றும் பாலசுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச்சகோதரியும் கலாவதி, லோகேஸ்வரன் (டுபாய்), சறோஜினிதேவி, சந்திரவதி ஆகியேரின் அன்புத்தாயாரும் உதயகுமார் (மஸ்கென் கொம்பனி - கொழும்பு) யோதினி, மகாதேவசிவம் (வவா-சிவன் மாளிகை லிமிற்டெட்), சற்குணம் (ஏழாலை), ஆகியோரின் மாமியாரும் யதுகுலன் , விதுஷா, லோஜினி, அனோஜினி, மனோசங்கர், யதுசங்கர், தனுசங்கர், சிவசங்கர், பங்கஜன், சாரங்கா, கார்த்திகா ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் யாதவ்வின் அன்புப்பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.10.2019) புதன்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கடாகடம்பை இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

ஏழாலை கிழக்கு,
ஏழாலை

தகவல்: குடும்பத்தினர்
077 462 3228, 077 549 8903

---

மலர்வு
06 . 07 . 1945



உதிர்வு
10 . 10 . 2019

## திருமதி நாகரத்தினம் நாகேந்திரம்

(ஓய்வு பெற்ற நெசவு போதனாசிரியர்)

யாழ். கைதடி மேற்கைப் பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகரத்தினம் நாகேந்திரம் 10.10.2019 வியாழக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலாயுதர் - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், கோவிந்தர் - ராசமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், நாகேந்திரம் அவர்களின் பாசமிகு மனைவியும், உதயமதி, தர்சினி ஆகியோரின் அன்புத் தாயும், ஸ்ரீதரன், ஸ்ரீகாந்தன் ஆகியோரின் அன்பு மாமியும், தபனியா, ஹமிஷா, பிரதீஷா, கிருஸ்ணா ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவும், பொன்னுத்துரை, மகேஸ்வரி, பாலசுப்பிரமணியம், காலஞ்சென்ற கோபாலகிருஷ்ணன், தனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஸ்ரீரஞ்சனதேவி, சண்முகரத்தினம், ரதிதேவி, காலஞ்சென்ற கமலாதேவி மற்றும் ஜெயபாலசந்திரன், தேவராஜா - இராஜேஸ்வரி, புவனேஸ்வரி - பாண்டியர், பூமணிதேவி - முத்துராசா, மனோன்மணிதேவி - பாலராஜன் ஆகியோரின் அன்பு மைத்துனியும், மகிந்தினி சுகந்தன், பகீரதி முரளிதரன், மயூரி, சுபவண்ணன், மயூரன் ஜெனனி ஆகியோரின் அன்புப் பெரியம்மாவும், பிரசாந், பானுஜா, பானுஜன், பிரணவன் கமலலேஜினிதேவி, சேந்தன் வசந்தறோகினி, சிவகங்கா கிரிதரன், துர்க்கா சிவதாஸ், சாம்பவி தர்மேந்திரா, தேனுகன் திவ்வியா, தேனுஜா ஆகியோரின் அன்பு மாமியும், கஜானன், வைஷ்ணவி, சாய்ராம், டிவேஸ், கிருஸ்ணிதா, டமிதா, கோபணா, அக்ஷிதா, அஸ்விதா, கிரிசன், நிகர்ஷான், பிரணிஸ்கா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 17.10.2019 வியாழக்கிழமை லண்டனில் உள்ள 28 Carlyle Rd, Manor Park London, E12 6 BN, United Kingdom எனும் இடத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக Aldesbrook Rd, London E 12 5DS. UK இடத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
உதயமதி (மகள் - +4420 8550 5525)
தர்சினி (மகள் - +124 8481 8208 )
V.பொன்னுத்துரை (தம்பி - 021 205 7010)

தகவல்:
V.பொன்னுத்துரை

(cs.28718)(13.17)

## வான்படையினரின்...

யாழ்ப்பாணத்தில் இருந்து செல்லும் மக்கள் தெல்லிப்பழைச் சந்தி ஊடாகக் கட்டுவன் சந்தியை அடைந்து, மயிலிட்டி ஊடாக வானூர்தித் தளத்துக்கு இலகுவாகச் செல்லலாம். வானூர்தித் தளத்துக்கான முதன்மை நுழைவாயில் கட்டுவன் - மயிலிட்டி வீதியிலேயே தற்போது அமைக்கப்பட்டுள்ளது.

தெல்லிப்பழைச் சந்தி ஊடாக வானூர்தி நிலையத்தைச் சென்றடைய படையினரின் வசமுள்ள 6 ஏக்கர் நிலம் தடையாகவுள்ளது. அதனால் காங்கேசன்துறைச் சந்தியை அடைந்து, பொன்னாலை - பருத்தித்துறை வீதி வழியாக மயிலிட்டிச் சந்தியை அடைந்து, பின்னர் கட்டுவன் சந்தி நோக்கிச் சென்றே வானூர்தி நிலையத்துக்குச் செல்ல முடியும். 6 மைல் தூரம் சுற்றியே வானூர்தி நிலையத்துக்குச் செல்ல வேண்டியுள்ளது.

இந்த நிலமைகளைக் கருத்தில் கொண்டு வான் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள இந்த 6 ஏக்கர் நிலத்தை விடுவிப்பதற்குச் சம்பந்தப்பட்ட தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தற்போது கட்டுவன் மயிலிட்டி வீதியில் கட்டுவன் சந்தியில் இருந்து ஒரு கிலோமீற்றர் தூரம்வரை தார்ப்படுக்கை வீதியாகச் செப்பனிடப்பட்டுள்ளது. எதிர்ப்பக்கத்தில் இருந்து கிராமக் கோட்டுச் சந்தியை அண்மித்த தூரம் வரையில் தார்ப்படுக்கை வீதியாகச் செப்பனிடப்பட்டுள்ளது. படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள இடைப்பட்ட வீதி செப்பனிடப்படவில்லை. இந்த வீதியைத் திறந்து தார்ப்படுக்கை வீதியாகச் செப்பனிடுவதற்கு பிரதேச செயலர், சிவில் வானூர்திப் போக்குவரத்து அதிகார சபையினர், தலைமை அமைச்சர், வான் படையினர் ஆக்கபூர்வமான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இந்த 6 ஏக்கர் நிலத்தை விடுவிப்பதன் மூலமாகவே வானூர்தி நிலையத்தின் பயனை மக்கள் நேரடியாகப் பெற்றுக்கொள்ள முடியும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(த-105)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெறுகை அறிவித்தல்
# வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்
# 2019

01. தவிசாளர், பெறுகைக்குழு, வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம் அவர்களினால் தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து கீழ்க்குறிப்பிடப்பட்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வேலைகளுக்காக பொறியிடப்பட்ட பெறுகை மனுப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

02. பெறுகையானது பொதுநிதிச்சுற்றறிக்கை 04/2016(ii) இற்கமைவாக வடமாகாணத்தில் தகுதியுடைய வியாபார அல்லது கம்பனிப்பதிவுகளை கொண்டுள்ளதும் அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் இக்ராட் பதிவுள்ளவராகவும், கறுப்புப்பட்டியலில் பெயரிடப்படாததுமான கேள்வியாளர்களுக்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

03. தேவையானதகைமைகள் பெறுகைஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.

04. ஆர்வமுள்ள பெறுகைதாரர்கள் வலிகாமம் தெற்கு பிரதேசசபை தலைமையலுவலகத்தில் மேலதிக தகவல்களைபெற்றுக்கொள்ளலாம். அத்துடன் ஆங்கிலமொழியில் மட்டும் உள்ள பெறுகை ஆவணங்களை கே.கே.எஸ்.வீதி சுன்னாகத்தில் அமைந்துள்ள வலிகாமம் தெற்கு பிரதேசசபையில் 16.10..2019 தொடக்கம் 30.10.2019ஆம் திகதி வரை அலுவலகநாட்களில் மு.ப 9.00 மணிமுதல் 15.00 மணிவரையான மீளளிக்கப்படாத பணமாக ரூபா.3000/- (NBT,VATதவிர்ந்த )செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

05. பெறுகை ஆவணங்களினை இருபிரதிகளில் தயாரித்து 31.10.2019ம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியவாறு தவிசாளர், பிரதேசசபை பெறுகைக்குழு, வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம் எனும் முகவரிக்கு பதிவுத்தபாலிலோ அல்லது அலுவலகத்திலுள்ள பெறுகைப்பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட பெறுகைகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் பெறுகைதாரர் அல்லது பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும்.

06. பெறுகை தொடர்பான முதற் கூட்டம் வலிகாமம் தெற்கு பிரதேச சபை, தலைமை அலுவலகத்தில் 24.10.2019 ஆம் திகதியன்று மு.ப 10.00 மணிக்கு நடைபெறும்

07. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| இல | வேலை விவரம் | மதிப்பீட்டு தொகை மில்லியனில் (VAT நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப் படும் தரம் | கேள்வி பிணை வைப்பு ரூபா | கேள்விப் பிணை செல்லுபடியாகும் காலம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | யாமா தலைவாசல் வீதித் திருத்தம் | 1.034 | 2 மாதம் | C9 & C8 | 10500.00 | 16.01.2020 |
| 2 | சுன்னாகம் மீன் சந்தை கழிவுநீர் தொட்டிக்கான மூடி அமைத்தல் & சுன்னாகம் உபஅலுவலக கூரைதிருத்தம் | 0.256 | 2 மாதம் | C9 & C8 | 3000.00 | 16.01.2020 |
| 3 | தபாலக புனரமைப்பு மிகுதிவேலை | 0.175 | 2 மாதம் | C9 & C8 | 2000.00 | 16.01.2020 |
| 4 | சுன்னாகம் நூலக வேலைகள் & Supplying &Fixing iron grill at Peoples Bank Building at Chunnakam | 0.844 | 2 மாதம் | C9 & C8 | 9000.00 | 16.01.2020 |
| 5 | Supply of Executive Chair high back, Visitor chair Hybrid With Out Arms, Executive chair Low Back, , Display cupboard , Computer table & Study desk | 0.616 | 1 மாதம் | தகுதி வாய்ந்த நிறுவனத்தினர் | 7000.00 | 16.01.2020 |
| 6 | Supply and installing Lap top computer | 0.1 | 1 மாதம் | | 1500.00 | 16.01.2020 |
| 7 | Supply and installing laser colour printer | 0.1 | 1 மாதம் | | 1500.00 | 16.01.2020 |
| 8 | Supply and installing computer | 0.84 | 1 மாதம் | | 8500.00 | 16.01.2020 |
| 9 | Construction of Boundary Wall Compost yard | 5.88 | 4 மாதம் | C7 & C6 | 60,000.00 | 13.02.2020 |

க.தர்சன்
தவிசாளர்
பிரதேசசபைபெறுகைக்குழு
வலிகாமம் தெற்குபிரதேசசபை
சுன்னாகம்.

(10)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலையைச் சேர்ந்த
செல்வன்
**சுசீதரன் கவிதன்**
2019 ஆம் ஆண்டு
தரம் - 5 புலமைப்பரிசில்
பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்கு
மேல் 157 புள்ளிகளைப் பெற்று
சித்தியடைந்துள்ளார்.
இவரைப் பாராட்டி வாழ்த்துவதுடன் மேலும்
பரீட்சைக்குத் தோற்றிய
மாணவர்களில் 70 புள்ளிக்கு மேல் பெற்ற

| | | | |
|---|---|---|---|
| க. சாளினி | - 147 | வி.ஜயானி | - 125 |
| சு. ஷரனியா | - 143 | வி.ஜானுகா | - 116 |
| சி.காவியா | - 132 | வ.விதுஷன் | - 116 |
| பா.அபிசனா | - 132 | அ.சஞ்சயன் | - 84 |
| அ.அபிராமி | - 131 | | |

Congratulations

இவர்களையும் பாராட்டி வாழ்த்துவதுடன் இவர்களை கற்பித்த
**ஆசிரியை திருமதி யூட் உதயகுமாரன்**
அவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: அதிபர், ஆசிரியர்கள்,
யா/எழுதுமட்டுவாழ் ஸ்ரீகணேச வித்தியாலயம்
எழுதுமட்டுவாழ்.

(ex465) (13.17)

# நன்றி நவிலலும்
# 31ம் நாள் நினைவஞ்சலி அழைப்பும்



## அமரர் நடராசா சிவராசா

கடந்த 18.09.2019 அன்று இறைவனடி சேர்ந்த எங்கள் குடும்பத் தலைவன் அமரர் நடராசா சிவராசா அவர்களின் 31ம் நாள் அந்திரெட்டிக் கிரியைகள் 17.10.2019 வியாழக்கிழமை அன்று அதிகாலை 6மணியளவில் கீரிமலை அந்தியெட்டி மண்டபத்தில் நடைபெறும் கருமக்காரிய நிகழ்விலும் அன்னாரின் இல்லத்தில் 18.10.2019 வெள்ளிக்கிழமை மதியம் 11 மணியளவில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிராத்தனையிலும், வீட்டுக்கிரியையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியப் போசனத்திலும் கலந்துக் கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். மேலும் அன்னாரின் மறைவுச் செய்திக் கேட்டு உடன் வீட்டிற்கு விரைந்து ஆறுதல் கூறி உதவி புரிந்த நண்பர்கள், உறவினர்கள், அயலவர்கள் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு எமது துயரில் பங்கு கொண்ட மற்றும் மலர்வளையம் சாத்தி இறுதி மரியாதை செலுத்திய அனைத்து நல் உள்ளங்களுக்கும் எமது குடும்பத்தினர் சார்பில் இதய பூர்வமான நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

நன்றி
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி

தகவல்
குடும்பத்தினர்
Tel : 0242224837 / 0772252804
No - 186/11A, மன்னார் வீதி குரும்மன்காடு வவுனியா

# வலிகாமம் வடக்கு பிரதேச சபை காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)
# பொதுச் சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகள் என்பன குத்தகைக்கு/வாடகைக்கு விடுவதற்கான
# மீள்கேள்வி அறிவித்தல் 2020

கேள்விப் பத்திரம் வழங்கும் இறுதித் திகதி :- 22.10.2019 செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணிவரை
கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி :- 22.10.2019 செவ்வாய்க்கிழமை நண்பகல் 01.00 மணிவரை
கேள்விகள் திறக்கப்படும் திகதி :- 22.10.2019 செவ்வாய்க்கிழமை பி.ப 3.00 மணி

| இல | குத்தகை விவரம் | மாத வாடகை | ஆகக் குறைந்த கேள்வித் தொகை | கேள்விப் பிணைப் பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப் பத்திரப் பணம் (மீளளிக்க முடியாதது) |
|---|---|---|---|---|---|
| | மல்லாகம் உப அலுவலகம் | | | | |
| 01 | அளவெட்டி மலைவேம்படிச் சந்தை | - | 44,550.00 | 1,000.00 | 1,000.00 |
| 02 | அளவெட்டி மலைவேம்படி கோழிக்கடை இல—06 | 1,000.00 | 44,550.00 | 1,000.00 | 1,000.00 |
| 03 | அளவெட்டி மலைவேம்படி ஆட்டிறைச்சிக்கடை இல—07 | 1,000.00 | 21,900.00 | 1,000.00 | 1,000.00 |
| 04 | மல்லாகம் பொதுச்சந்தை | ...... | 109,080.00 | 1,000.00 | 1,000.00 |
| 05 | மல்லாகம் பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 2,250.00 | 653,400.00 | 10,000.00 | 1,000.00 |
| 06 | மல்லாகம் பொதுச்சந்தை கோழிக்கடை | 2,250.00 | 527,040.00 | 10,000.00 | 1,000.00 |
| 07 | கும்பலை மாட்டிறைச்சிக்கடை | 1,500.00 | 595,170.00 | 10,000.00 | 1,000.00 |
| | மயிலிட்டி உப அலுவலகம் | | | | |
| 01 | வீமன்காமம் பொதுச்சந்தை கோழிக்கடை | 1,050.00 | 566,280.00 | 10,000.00 | 1,000.00 |
| 02 | வீமன்காமம் பொதுச்சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 1,050.00 | 18,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 03 | குரும்பசிட்டி சந்தை | .......... | 9,000.00 | 1000.00 | 1000.00 |
| 04 | குரும்பசிட்டி கோழிக்கடை | பிரதேச சபையால் தீர்மானிக்கப்படும் தொகை | 18,000.00 | 1000.00 | 1000.00 |
| 05 | குரும்பசிட்டி மாட்டிறைச்சிக்கடை | பிரதேசசபையால் தீர்மானிக்கப்படும் தொகை | 22,500.00 | 1000.00 | 1000.00 |

குறிப்பு : மேலதிக விவரங்களை 28.09.2019 ஆம் திகதி (சனிக்கிழமை) பிரசுரமான வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாட்டுக் கடைகள் என்பன குத்தகைக்கு / வாடகைக்கு விடுவதற்கான கேள்வி அறிவித்தல் விளம்பரத்தில் பார்வையிடவும்.

**திரு.சோமசுந்தரம் சுகிர்தன்.**
**தலைவர்**
**உள்ளூர் அதிகாரபெறுகைச்சபை**
**வலிகாமம் வடக்குபிரதேச சபை, காங்கேசன்துறை.**

16.10.2019

(10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## VACANCIES
## UNIVERSITY OF JAFFNA, SRILANKA

This is with reference to the advertisement dated 22.08.2019 calling applications for the Vacancies for the Academic / Academic support Posts at the Faculty of Arts and Faculty of Hindu studies. It is hereby notified that the **closing date** for entertaining applications for all Posts has been extended upto 30.10.2019.

**REGISTRAR**
**UNIVERSITY OF JAFFNA**
**SRI LANKA**
**15.10.2019**

(C 11477)(14.17)

ஓம் சக்தி

## வேலணை - பெருங்குளம்,
## அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்

### ஆலய பொதுச்சபை அங்கத்தவர் (2019 - 2020) பதிவு

ஆலயத்தின் வருடாந்த அங்கத்தவர் பதிவு இன்றிலிருந்து (08.10.2019) எதிர்வரும் 20.10.2019 வரை பதிவு. திருத்தம் செய்யப்பட ஆலயத்தின் பரிபாலன சபையிடம் பதிவுகளை மேற்கொள்ளவும்.

(cs.28713) (13.17) **ஆலய பரிபாலனசபை.**

## வாடகைக்கு உண்டு

"Guest House" செய்வதற்கு பொருத்தமான வீடு 02 AC, 06 Non AC, Rooms with Attach Bathrooms, Kandy Road, Ariyalai.
வாடகைக்குண்டு. (தளபாடங்களுடன்)

**077 712 6859**

(N 13553)(14.17)

ஓம் சக்தி

## வேலணை - பெருங்குளம்,
## அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்

### பழைய இரும்பு, மர பொருள்கள் விற்பனை

மேற்படி ஆலயத்தின் பாவனையில்லாத பழைய இரும்புப் பொருள்கள். மரத்தாலான சகடை என்பன விற்பனை செய்யப்பட உள்ளது. பெறவிரும்புவோர் ஆலய முகாமையாளருடன் தொடர்புகொள்ளவும்.

(cs.28713) 913.17) **ஆலய பரிபாலனசபை.**

## VACANCIES
## UNIVERSITY OF JAFFNA, SRILANKA

This is with reference to the advertisement dated 08.08.2019 calling applications for the Vacancies for the Academic / Academic support Posts at the Faculty of Medicine, Unit of Allied Health Sciences and the Faculty of Technology. It is hereby notified that the closing date for entertaining applications for all Posts has been extended upto 30.10.2019.

**REGISTRAR**
**UNIVERSITY OF JAFFNA**
**SRI LANKA**
**15.10.2019**

(C 11476)(14.17)

## பெயர் மாற்றம்

டச்சு வீதி, மானிப்பாயை சேர்ந்த திருநாவுக்கரசு றஜீஞ ஆகிய நான். (பிறப்பு அத்தாட்சி பத்திர இல.3824) இனிவரும் காலங்களில் றஜீனா என எனது பெயரை மாற்றி உள்ளேன் என்பதனை சகலருக்கும் அறியத் தருகின்றேன்.

றஜீனா (8)

## பதினோராம் ஆண்டில் பாசமுடைய நினைவுகளுடன்

மலர்வு 29 . 06 . 1940



உதிர்வு 17 . 09 . 2008

**அமரர் கந்தையா சந்திரசேகரா**
**(ஓய்வுபெற்ற அதிபர்-யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி)**

**திதி: திருதியை (16.10.2019)**

*பத்தோடு ஒன்று சேர்ந்து*
*பதினோராண்டு ஆனது*
*நேற்று நம்முடன் சேர்ந்திருந்த பொழுதுகள்*
*காற்றோடு பறந்தது போல் ஆனதுவோ?*

*என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும்*

அல்லாரை தெற்கு, கொடிகாமம்.

**குடும்பத்தினர்.**

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

### 2020 ஆம் ஆண்டிற்கான கேள்வி அறிவித்தல் (திருத்தம்)

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட மரக்கறிச் சந்தைகள். மீன் சந்தைகள். கருவாட்டுக் கடைகள், இறைச்சிக்கடைகள் என்பனவற்றை 2020.01.01ஆம் திகதி தொடக்கம் 2020.12.31ஆந் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்கான 10.10.2019 ஆம் திகதிய பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கேள்வி அறிவித்தலில் ஏழாலை உப அலுவலகத்திற்குட்பட்ட ஏழாலை மயிலங்காடு ஆட்டிறைச்சிக் கடை (தொடர் இலக்கம் 03) இற்கான அறிவித்தல் கீழ்வருமாறு திருத்தம் செய்யப்படுகின்றது.

| தொ இ | விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரத் தொகை (VAT,NBT தவிர) | மீளளிக்க கூடிய கேள்வி வைப்பு | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (VAT,NBT தவிர) | மாத வாடகை (VAT,NBT தவிர) |
|---|---|---|---|---|---|
| 1 | ஏழாலை மயிலங்காடு ஆட்டிறைச்சிக் கடை | 750.00 | 7500.00 | 40500.00 | 250.00 |

**க.தர்சஷன்**
**தவிசாளர்**
**வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்.**

(C 11474)(14.17)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லூர் பிரதேச சபை
### கொக்குவில்
### 2020 ம் ஆண்டிற்கான கேள்வி அறிவித்தல்

நல்லூர் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்க்காணும் சந்தைகள், இறைச்சிக்-கடைகள், என்பவற்றை 2020ம் ஆண்டு தை மாதம் 1ம் திகதி தொடக்கம் மார்கழி 31ம் திகதி வரை குத்தகைக்கு விடுவதற்கான கேள்விகள் கோரப்பட்டுள்ளன.


கேள்விப் பத்திரம் வழங்கும் இறுதித் திகதி :- 30.10.2019 ம் திகதி புதன்கிழமை நண்பகல் 12.00
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி :- 30.10.2019 ம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2.00
கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி :- 30.10.2019 ம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3.00
கேள்விப்பத்திரம் திறக்கப்படும் இடம் :- கலந்துரையாடல் மண்டபம், தலைமை அலுவலகம், நல்லூர் பிரதேசசபை

01. கேள்விப்பத்திரங்கள் மூன்று பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, மூலப்பிரதியுட்பட இரு பிரதிகளை தவிசாளர், நல்லூர் பிரதேச சபை, 14/5,கருவப்புலம் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில் என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு, பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடுதல் வேண்டும். மூன்றாவது பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும்.
02. கேள்விப்பத்திரங்கள் மீளளிக்கப்படாத படிவக்கட்டணமும், மீளளிக்கப்படக்கூடிய வைப்புப் பணமும் செலுத்திப் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்களை பெறுபவர்கள் தமது அடையாள அட்டையையும் கிராம அலுவலரினால் வழங்கப்படும் வதிவிடச் சான்றிதழையும் கொண்டு வருதல் வேண்டும்.
03. கேள்விப்படிவக்கட்டணம், கேள்வித் தொகை, மாத வாடகை என்பவற்றுக்கு 15% பெறுமதிசேர் வரியும் 2% தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியும் காலத்திற்குக் காலம் அரசாங்கத்தினால் விதிக்கப்படும் வரியும் செலுத்தப்பட வேண்டும்.
04. கூட்டுறவுச்சங்கங்கள் தவிர்ந்த, தனிப்பட்டவர்கள் திருநெல்வேலிச்சந்தை, கொக்குவில் சந்தை என்பவற்றுக்குரிய விண்ணப்பப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ள விரும்பின், ஏதாவதொரு வங்கியில் தங்கள் பெயரில் முறையே ரூபா 1,500,000.00 இற்கும் ரூபா 200,000.00 இற்கும் குறையாது வைப்பில் உள்ளமைக்கான ஆதாரங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
05. உள்ளூராட்சி மன்றங்களினால் "தவறுனராக" கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரம் வழங்கப்படமாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்ட பின் அறியும் பட்சத்தில் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.
06. மரக்கறிச் சந்தைக்கான கேள்வியில் சித்தியடையும் கேள்விக்காரர் உள்ளூராட்சி ஆணையாளரின் 03/2015 இலக்கமும் 09.11.2015 திகதியும் உடைய சுற்றுநிருபத்திற்கு அமைவாக இணங்குதல் வேண்டும்.
07. மரக்கறிச் சந்தையைக் குத்தகைக்கு எடுப்பவர்கள் உற்பத்தியாளர்கள் கொண்டுவரும் பொருட்களின் விற்பனை விலையில் 4% ற்கு மேல் வரி அறவிடக்கூடாது.
08. இறைச்சிக்காக வெட்டப்படும் கால்நடைகள் கொக்குவில் கொல்களத்தில் வெட்டப்படுதல் வேண்டும். இறைச்சிக்காக மறி ஆடுகள், பசு மற்றும் கன்றுகள் அறுக்கப்படுவது அனுமதிக்கப் படமாட்டாது. இறைச்சிக்காக கொள்வனவு செய்யப்படும் கால்நடைகளுக்கு அப்பகுதி கால்நடை வைத்திய அதிகாரியின் நோய்த்தொற்று இல்லை என்ற சுகாதாரச் சான்றிதழ் பெறப்பட்டிருக்க வேண்டும். மேலும் சுகாதார வைத்திய அதிகாரியினால் கால்நடைகளுக்கான நோய்த்தாக்கம் தொடர்பாக பிரகடனப்படுத்தப்படும் பொழுது கொல்கள செயற்பாடுகள் நிறுத்தப்படும். அத்துடன் சபையால் விதிக்கப்படும் மேலதிக நிபந்தனைகளுக்கும் கட்டுப்படுதல் வேண்டும்.
09. இறைச்சிக் கடைகளுக்கான கேள்வியில் சித்திபெறும் கேள்விதாரர் சுகாதார வைத்திய அதிகாரியால் அறிவிக்கப்படும் சுகாதார மேம்பாட்டு விடயங்களைக் கருத்திற்கொள்ளத் தவறு மிடத்து குத்தகை ஒப்பந்தத்தினை இரத்துச் செய்வதற்கு தவிசாளருக்கு அதிகாரம் உண்டு.
10. திருநெல்வேலிச் சந்தையில் விசேட பண்டிகை நாட்களில் நடைபாதை மற்றும் வீதியோர வியாபார நடவடிக்கைகள் அனுமதிக்கப்பட மாட்டாது என்பதுடன் சபையினால் ஒதுக்கப்பட்ட இடங்களில் மட்டும் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வரி அறவிட அனுமதிக்கப்படும்.
11. எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.
12. ஏற்றுக்கொள்ளக் கூடிய குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர் களின் கேள்வி வைப்புப்பணம் மீளளிக்கப்பட மாட்டாது.
13. கேள்வி திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் கேள்விதாரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.
14. தெரிவு செய்யப்படும் கேள்விக்காரர் கேள்வித்தொகையின் 1/3 பகுதியை 01.12.2019 ம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்து கொள்ள வேண்டும்.
15. கேள்வி தொடர்பான மேலதிக விபரங்களை தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

### 2020 ம் ஆண்டுக்கு சந்தைகள், இறைச்சிக்கடைகளுக்கான குத்தகை அட்டவணை

| இல | சந்தைகள் (துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையங்களுடன்), இறைச்சிக்கடைகள் | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த தொகை (வற்வரி தவிர்ந்த) ரூபா. |
|---|---|---|---|---|
| நல்லூர் உப அலுவலகம் | | | | |
| 1. | திருநெல்வேலிச்சந்தை (துவிச்சக்கர வண்டிப்பாதுகாப்பு நிலையத்துடன்) | 1,000.00 | 15,000.00 | 28,063,200.00 |
| 2. | திருநெல்வேலிச்சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 500.00 | 5,000.00 | 729,300.00 |
| 3 | திருநெல்வேலிச்சந்தை கோழியிறைச்சிக் கடை இல 01. | 500.00 | 5,000.00 | 111,012.00 |
| 4 | திருநெல்வேலிச்சந்தை கோழியிறைச்சிக் கடை இல 02. | 500.00 | 5,000.00 | 178,777.50 |
| கொக்குவில் உப அலுவலகம் | | | | |
| 1. | கொக்குவில் குளப்பிட்டிச் சந்தை (துவிச்சக்கர வண்டிப்பாதுகாப்பு நிலையத்துடன்) | 1,000.00 | 10,000.00 | 1,285,790.00 |
| 2. | கொக்குவில் சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 500.00 | 5,000.00 | 513,810.00 |
| 3 | கொக்குவில் சந்தை கோழியிறைச்சிக் கடை | 500.00 | 5,000.00 | 388,520.00 |
| 4 | கொக்குவில் உப அலுவலக ஆட்டிறைச்சிக் கடை | 500.00 | 5,000.00 | 639,100.00 |
| 5 | கோண்டாவில் ஸ்ரேசனடி ஆட்டிறைச்சிக் கடை இல 01 | 500.00 | 5,000.00 | 156,420.00 |
| 6 | கோண்டாவில் ஸ்ரேசனடி ஆட்டிறைச்சிக் கடை இல 02 | 500.00 | 5,000.00 | 156,420.00 |
| 7 | கொக்குவில் உப அலுவலக மாட்டிறைச்சிக் கடை | 500.00 | 5,000.00 | 2,062,610.00 |
| 8 | கோண்டாவில் ஸ்ரேசனடி மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 5,000.00 | 886,600.00 |

**திரு தா.தியாகமூர்த்தி**
**தவிசாளர்,**
**நல்லூர் பிரதேச சபை,**
**கொக்குவில்.**
**16.10.2019**

O/L யில் 5 S தகைமையுடன்,
மருத்துவ துறையில்
நீங்களும் ஒரு தாதி (Nurse) ஆகலாம்
Hotline : 071 0770770
071 7140000
இதோ !!!
அய்வா தாதியர் பாடசாலை
உடனடியாக விண்ணப்பியுங்கள்
16 தொடக்கம் 35 வயதுக்கு உட்பட்ட
ஆண், பெண் இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்
சர்வதேச அங்கீகாரம் பெற்ற
சான்றிதழ் வழங்கப்படுவதுடன் சிறந்த
சம்பளத்துடன் உறுதியான வேலை
வாய்ப்பும் எங்களினால் பெற்றுத்தரப்படும்
வெளிநாட்டு வேலை வாய்ப்பு
பணியகத்தால் உறுதிப்படுத்தக்கூடிய
சான்றிதழ்

TVEC
Foreign Ministry of Sri Lanka
தொடர்புகளுக்கு.......
அய்வா தாதியர் பாடசாலை
இல: 154, A/01, நாவலர் வீதி
யாழ்ப்பாணம்.
071 8722351
070 2705370 - 071 8722350 - 071 8722352

## மரண அறிவித்தல்



# மகேஸ்வரன் வாகீசன்

*(A/L 2011. சென்ஜோன்ஸ் கல்லூரி. பழைய மாணவன்*
*Design Engineer, 2G Energietechnik GMBH Benzstra Be 3/ D- 48619 Heek)*

நீதவான் வளவு. கோப்பாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் ஜேர்மன் . Heek ஐ வதிவிடமாகவும் கொண்ட மகேஸ்வரன் வாகீசன் 07.10.2019 திங்கட்கிழமை அன்று அகாலமரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கமுத்து மயில்வாகனம் - முத்துப்பிள்ளை . காலஞ் சென்ற சிவசுப்பிரமணியம் - இராசாம்பிகை தம்பதிகளின் அன்புப் பேரனும் மகேஸ்வரன் (ராசா) - உதயகுமாரி தம்பதிகளின் பாசமிகு மகனும் விதுனன் (Director, KUM Quality Engineering (Pvt)Ltd). சாருஷா (QA, NAVOTAR Soft Ware (Pvt)Ltd) ஆகியோரின் அன்புச் சகோதரனும் முத்துமயில்வாகனம் - அம்பிகை (ஜேர்மனி). இரத்தினமுத்து மயில்வாகனம் - இந்திராணி (கனடா). Dr. மனோகரன் - அகிலினி(நோர்வே). மயூரகுமார் - செல்வரூபி (கொழும்பு) ஆகியோரின் பெறாமகனும் சுகுமார் - காலஞ்சென்ற நந்தினி(கொழும்பு). காலஞ்சென்ற ஜெயக்குமார். விஜயகுமார் - தேசிங்கராணி(கட்டார்). இந்திரகுமார் - யோகேஸ்வரி (கொழும்பு). செல்வச்சந்திரன் - ஜெயப்பிரசாந்தி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் மருமகனும் மகிந்தன். அபிராமி. மதுரா. ஆதித்தன். மகிஷா. மித்திரன். மயூரி. தர்சனா. ஆதவன். ஆரணி ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரனும் ஆஷா. அஜந்தன். விஜிராம். பவித்திரன். துஷியந்தன். றதிகன். யதுஷன். அஸ்வினி. அபிலாஷ். அத்மிகா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.10.2019) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்துக்கு பி.ப 2.00 மணியளவில் எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
**தந்தை - மகேஸ்வரன் (ராசா)**
**077 615 1266**
**077 728 7615** (CS 28721) (14.17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# ரியோவுக்கு ஜோடியான ரம்யா நம்பீசன்

'நெஞ்சமுண்டு நேர்மையுண்டு ஓடுராஜா' படத்தின் வெற்றியைத் தொடர்ந்து ரியோ ராஜ், தற்போது பத்ரி வெங்கடேஷ் இயக்கும் படத்தில் நடிக்க ஒப்பந்தமாகியிருக்கிறார். இந்தப் படத்தில் கதாநாயகியாக ரம்யா நம்பீசன் நடிக்கவிருக்கும் இந்தப் படத்துக்கு யுவன் சங்கர் ராஜா இசையமைக்கிறார்.

ஒக்ரோபர் 17ஆம் திகதியிலிருந்து இந்தப் படத்தின் படப்பிடிப்புதொடங்கஇருக்கிறது. இந்தப்படத்தில்நடிக்கும்இதர நடிகர், நடிகையர் குறித்து அதிகாரபூர்வமான அறிவிப்பு விரைவில் வெளியாக இருக்கிறது.

படித்ததில் பிடித்தது









### அன்று

ரணில் மீது நம்பிக்கை உள்ளது!
ரணில் எம்மை ஏமாற்றிவிட்டார்!

மைத்திரி மீது நம்பிக்கை உள்ளது!
மைத்திரி ஏமாற்றிவிட்டார் !!

### இன்று

சஜித் மீது நம்பிக்கை உள்ளது.
நாளை சஜித்தும் ஏமாற்றுவார்!

---

ஐ.தே.க ஜெயிச்சிட்டா மகிந்த பழிவாங்கலாம் என்று நினைச்சிருக்கிறீங்கள் போல...

அவையளும் ஏமாத்தி பழகிட்டினம்.
இவையளும் ஏமாந்து பழகிட்டினம்... **தமிழர்கள்**

---

சேர் தீபாவளி நெருங்கிடுச்சி போனஸ் கொடுங்க...!
சேர் தீபாவளி நெருங்கிடுச்சி போனஸ் கொடுங்க....!




மனிதனின் துன்பங்கள் நிரந்தரமானவை என்று நான் நம்பவில்லை. அவன்தான் ஒரு கட்டத்தில் செத்துவிடுகிறானே.

---

நேரம் இருக்கும் இடத்தில்தான் பொறுமையும் இருக்கும்.

**சிலந்தியும் நாமும் ஒன்றுதான் ஏனென்றால் அதிக நேரம் 'நெட்'லேயே இருக்கிறோமே..!**



**பரவாயில்லை என்ற வார்த்தைக்குள் அடங்கி இருக்கிறது, பல வலிகளும் சில சோகங்களும்..!**



சப்பாணி @manipmp

சிறையிலிருந்து விடுதலையடைவது போலத்தான் சிக்னலிலிருந்தும்..

சப்பாணி @manipmp

காலம் காலமாய் தோற்றாலும் தனது முயற்சியில் பின் வாங்காமல் ஓடுகிறது

பெரிய முள்ளை வென்றுவிட வேண்டுமென்று **சிறிய முள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்று உலக உணவு தினம்



# உணவு
# உலக ஓட்டத்தின் இயக்கம்

உலகில் உள்ள அனைத்து உயிர்களுக்கும் பொதுவான தேவை 'உணவு'. பசி என்ற இயற்கை உணர்வுக்கு இயற்கையே உணவுப் பொருள்களையும் கொடுக்கிறது. ஆனால் அந்த உணவுப் பொருளை உற்பத்தி செய்வதில் தொடங்கி அவை ஒருவரது வயிற்றுக்குள் செல்வது வரையிலான பிரச்சினைகள் மிக நீண்டவை... நெடியவை.

**உணவுப் பஞ்சத்துக்கான காரணங்கள் என்னென்ன?**

உலகின் வேகமாக வளரும் நாடுகளில் ஆசிய நாடுகள் பல உள்ளன. இலங்கையையும் அவற்றில் ஒன்றாகக் குறிப்பிட முடியும். இலங்கை போன்ற நாடுகளுக்கு மிகப்பெரிய அச்சுறுத்தலாக இருப்பவை விளைநிலங்களின் எண்ணிக்கை குறைந்து வருவதும், விண்ணை முட்டும் விலைவாசி உயர்வு போன்ற காரணங்கள். இவை இரண்டுமே எம்மைப் போன்ற பல நாட்டு மக்களின் உணவுத் தேவையையும், பசியையும் கேள்விக்கு உள்ளாக்குகின்றன. தங்கள் அதீத வசதியால் ஆடம்பர நட்சத்திர உணவகங்களில் அடிக்கடி உணவு சாப்பிட்டு டிப்ஸ் கொடுக்கும் வர்க்கத்தினரும் எம் நாட்டில் இருக்கின்றனர். அதேவேளையில் ஒருநாளைக்கு ஒரு வேளை உணவாவது கிடைக்காதா? எனத் தவிப்போரும், கோவில் வாசலிலும் கடைத்தெருக்களிலும் யாசகம் கேட்பவர்களும் இருக்கிறார்கள். உலகம் முழுக்க அன்றாடம் பலர் பட்டினிச்சாவால் உயிரிழக்கின்றனர். இயற்கை, இலவசமாகக் கொடுக்கும் உணவுப் பொருள்கள் ஒரு ஏழையின் பசியைப் போக்குவதற்குள் உயிர்வலியும் சாவு வலிகளும் கண்முன் வந்து சென்று விடுகின்றன. விடயம் அவ்வளவு தீவிரமானதுதான். ஆனால் இப்போது அல்ல. காலம் காலமாக.

**ஏழு தசாப்த முயற்சி**

1945ஆம் ஆண்டு 16ஆம் திகதி ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு ஆரம்பிக்கப்பட்டது. இந்த நாளை நினைவுகூரும் விதமாகவும், அனைத்து உயிர்களும் ஆரோக்கியமாக வாழ வேண்டும், அனைவருக்கும் உணவு கிடைக்க வேண்டும், பசியால் யாரும் வாடக்கூடாது, உணவு குறித்த விழிப்புணர்வு மக்களிடம் சரியாகச் சென்றடைய வேண்டும் போன்ற காரணங்களுக்காக 1979ஆம் ஆண்டு ஐநா சபையின் 20ஆவது பொது மாநாட்டில் ஒக்ரோபர் 16ஆம் திகதி உலக உணவு தினமாக அறிவிக்கப்பட்டது. 37 ஆண்டுகளை கடந்துவிட்டாலும் உலகின் அனைத்து மக்களுக்கும் பொதுவாக, சரிவிகிதமான உணவு கிடைப்பது இன்று வரையில் உறுதி செய்யப்படவில்லை. உற்பத்தி, பகிர்வு, நுகர்வு இவை அனைத்தும் சரிவிகித அளவில் இல்லாமல் இருப்பதே உணவு சார்ந்த பலபிரச்சினைகளுக்குக் காரணமாக இருக்கின்றது. "தனி ஒரு மனிதனுக்கு உணவில்லை எனில் ஜகத்தினை அழித்திடுவோம்" எனப் பாடினார் பாரதி. ஆனால் அவர் வாழ்ந்த இந்தியாவில் மட்டும் தினமும் 30 கோடி மக்கள் இரவு உணவு இல்லாமல் தூங்குகிறார்கள். ஏமன், லிபியா, சிரியா போன்ற மத்திய கிழக்கு நாடுகளில் இன்று உணவு என்பது பலருக்குக் கனவாகவே மாறிவிட்டது.



பெருகி வரும் மக்கள் தொகை பெருக்கத்துக்கு ஏற்ப அனைவருக்கும் தேவையான உணவு கிடைக்கவும், உணவு உற்பத்தியை அதிகரிக்கவும் தேவையான நடவடிக்கைகளை அரசுகள் சரியாகச் செய்வதில்லை. அதோடு வசதி படைத்த பெரும் பணக்காரர்களால் உயர்த்தப்படும் விலைவாசி உயர்வு, கச்சா விலையேற்றத்தால் நடுத்தர, ஏழை மக்கள் மட்டுமே கடுமையான சிக்கல்களைச் சந்திப்பதுடன் வறுமையில் தள்ளப்படுகின்றனர்.

இப்படி பல நாடுகளில் பல உணவுப் போராட்டங்கள் தினமும் நிகழ்ந்து கொண்டேதான் இருக்கிறது.

விளைச்சல் குறைவு, தண்ணீர் பற்றாக்குறை, விவசாய வேலைக்கு ஆள்கள் பற்றாக்குறை, உற்பத்தி பொருள்களுக்குப் போதிய விலை இல்லாதது என உணவு உற்பத்தி செய்யப்படும் இடத்திலேயே எண்ணற்ற பிரச்சினைகள். இதன் ஒருகட்டமாக விவசாய நிலங்கள் ரியல் எஸ்டேட் போடப்பட்டு கட்டடங்களாக மாற்றப்படுகின்றன. இயற்கை விவசாயிகளின் எண்ணிக்கை குறைந்து வருகிறது போன்ற வேதனையான நிகழ்வுகள் எம்மை சர்வ சாதாரணமாகவே கடந்து செல்கின்றன.

மறுபுறமோ நடுத்தர குடும்பத்தினர் ஆண்டுக்கு 100 கிலோ உணவை வீண் செய்கிறார்கள். திருமண மண்டபங்களில் சராசரியாக 10 100 நபர்கள் உண்ணும் அளவிலான உணவுப்பொருள் வீண் செய்யப்படுகின்றன. அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் வேலை செய்பவர்களும், பள்ளிக் கல்லூரி மாணவ மாணவிகளும் அன்றாடம் பல தொன் உணவுப் பொருள் தெரிந்தோ தெரியாமலேயே வீண் செய்கின்றனர். இவை அனைத்துக்குமே உணவுப் பொருள் குறித்த விழிப்புணர்வு இல்லாமல் இருப்பதே காரணமாக இருக்கின்றது.

இப்படி வீண் செய்யும் உணவுப் பொருள்களால் பசியால் வாடும் மக்களின் உணவுத் தேவையை கணிசமான அளவு பூர்த்தி செய்ய முடியும். ஆனால் எம்மிடம் உபரியாக இருக்கும் உணவுப் பொருள்களை மற்றவர்களுக்குப் பகிர்ந்து கொடுக்கும் எண்ணம் எம்மில் எத்தனை பேருக்கு இருக்கிறது என்பது தெரியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உணவு நாகரீகம் என்பது எது?**

ஆரோக்கியத்தைக் கொடுக்கும் தானிய வகைகளின் உற்பத்தி மிகக்குறைவாக இருப்பதால் அவற்றின் விலை அதிகமாக இருக்கிறதே என புலம்புகிறார்கள் நடுத்தர வர்க்கத்தினர். மறுபுறமோ குளிரூட்டப்பட்ட அறையில் பீட்சா, பர்கர் போன்ற துரித உணவுகளை உட்கொள்கிறார்கள் இன்னொரு வர்க்கத்தினர். இதில் படித்தவர் படிக்காதவர் என்ற பாகுபாடே இல்லாமல் போய்விட்டதுடன் உணவிலும் நாகரிகத்தை பார்க்க ஆரம்பித்து கூடவே உடல்நலத்தையும் கெடுத்துக் கொள்கிறார்கள். கல்சியம், புரோட்டின், விற்றமின், மினரல்ஸ் என அனைத்துவித சத்துகளும் நிறைய சரிவிகிதஉணவைஅன்றாடம்மிகக்குறைவானவர்களே உட்கொள்கிறார்கள். தொழில், படிப்பு என வெளியூர்களுக்குச் செல்பவர்கள் பலரும் நல்ல உணவின்றி தவிக்கிறார்கள். இப்படி பரமபத விளையாட்டுப்போல எண்ணற்ற நெழிவு சுளிவுகளைக் கொண்டதாக ஒவ்வொருவரின் வாழ்க்கைச் சூழலும் ஆரோக்கியமும் இருக்கின்றன.

**உணவு வீண்விரயமாவதை தவிர்க்க செய்யவேண்டியவை**

உணவுகள் வீணாகாமல் தடுக்க ஒவ்வொருவரும் எமது வீட்டில் இருந்து பல்வேறு செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். என்ன சமைக்கப் போகிறோம் என்பதை முன்கூட்டியே திட்டமிட்டு அதற்கேற்ற உணவுப் பொருள்களை மட்டுமே வாங்க வேண்டும்.

குளிரூட்டி இருக்கிறது என்பதற்காக பல நாளுக்கான பொருளை ஒரே நாளில் வாங்கி குவித்து வைப்பது. பின்னர் அதில் பலவற்றை தூக்கி எறிவது போன்ற செயல்களை பலர் செய்வதுண்டு. இதுபோன்ற செயல்களைத் தவிர்க்க, சில நாள்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களை மட்டும் வாங்கி வைக்கலாம். சாப்பிடும்போது உணவுகளைப் பரிமாறும் அளவு குறைவாக இருந்தால், மீதமான உணவை எச்சில் படாமல் மற்றவர்களுக்கு கொடுத்து உதவலாம்.

மக்களிடம் மீதமாகும் உணவுப் பொருள்களை சேமித்து பசியால் வாடும் மக்களுக்கு பகிர்ந்தளிக்கும் பொது நலன் சேவகர்கள் இன்று பெருகிவருவது வரவேற்கத்தக்க செய்தி. இன்னும் அதிகமான சேவகர்கள் உருவாகி பசியால் வாடும் மக்களுக்கு உதவ வேண்டும். அதேசமயம் நாம் வீணாகக்கும் உணவுப் பொருள்களின் அளவினையும் கட்டுப்படுத்தி பசியால் வாடுவோர் இல்லை என்ற நிலையை உருவாக்குவோம். ■

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# கோத்தபாயவின் ஆட்சி தமிழருக்கு சுடுகாடுதான்

ஊடகங்களுக்கு முகம் கொடுப்பதைத் தவிர்த்து வந்த, சிறிலங்காபொதுமக்கள்முன்னணியின்அரசதலைவர்வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ச நேற்று ஒருவாறு தனது படைபட்டாளத்துடன் பத்திரிகையாளர்களைச் சந்தித்தார். ஊடகவியலாளர்களின் கேள்விகளால் திக்குக் திணறாது கோத்தா பதிலளிப்பதற்கும் அவரைப் பாதுகாப்பதற்கும் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் என்ற கோதாவில், மகிந்த ராஜபக்ச, விமல் வீரவன்ச உள்ளிட்ட அணியினரும் கோத்தாவுடன் இணைந்து பத்திரிகையாளர்களைச் சந்தித்தனர்.

தமிழ் மக்களின் உணர்வுபூர்வமான பிரச்சினைகள் தொடர்பான கேள்விகள், இந்திய ஊடகங்களின் இலங்கைப் பிரதிநிதிகளால் எழுப்பப்பட்டது. காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் அதில் முதன்மையானது. பாதுகாப்புத் தரப்பினரிடம் சரணடைந்தவர்களுக்கு என்ன நடந்தது என்ற கேள்விக்கு, அவர்களுக்கு மறுவாழ்வு வழங்கினோம் என்று கோத்தா பதிலளித்தார். சரணடைந்து காணாமல் ஆக்கப்பட்டோர்தொடர்பில் கேள்வி எழுப்ப, இரண்டும் வேறுவேறானது என்றும், போரில் காணாமல் ஆக்கப்படுதல் நடைபெறுவது என்றும் கோத்தபாய குறிப்பிட்டார்.

போரின் இறுதியில் இராணுவத்தினரிடம் சரணடைந்தவர்கள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர் என்ற கேள்வியை ஊடகவியலாளர் மீளவும் எழுப்ப, அப்படியில்லை. அவை குற்றச்சாட்டுக்கள் மட்டுமே என்று கோத்தபாய பதிலளித்தார். தமது பிள்ளைகளை கையளித்த இராணுவ அதிகாரி தொடக்கம், எந்த இடம்? எந்த நேரம்? என்று விலாவாரியாக ஆதாரங்களை, ஆவணங்களை காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், பரணகம ஆணைக்குழு முன் வைத்தது ஊடகவியலாளர் சுட்டிக்காட்டியதும் கோத்தபாய அதை மறுத்தார். அந்த விடயத்திலிருந்து அவர் அடுத்த விடயத்துக்கு தாவினார்.

இன்றும் தமிழ் மக்களின் நீறுபூத்த நெருப்பான பிரச்சினையாக இருப்பது காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம். அதில் அவர் விட்டேத்தியாக பதிலளித்து தப்பித்துக் கொள்ள முனைகின்றார். பாதுகாப்புச் செயலராக இருந்து போரை நடத்தியது தானே என்று நெஞ்சை உயர்த்தி பதில் சொல்லி வந்தவர், தன்னால் வழிநடத்த படைகளிடம் கையளிக்கப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டோருக்கு என்ன நடந்தது என்று தெரியாது எனப் பதில் சொல்கின்றார்.

மகிந்த ராஜபக்சவின் காலத்தில் நியமிக்கப்பட்டது பரணகம ஆணைக்குழு. காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களிடம் அவர்கள்சாட்சியம்பதிவு செய்தார்கள். இந்தக்குழு மீது நம்பிக்கை இல்லை என்றாலும், ஆவணப் பதிவுக்காக தமது பிள்ளைகள் யாரால்காணாமல் ஆக்கப்பட்டார்கள் என்ற முழு விவரங்களையும் ஆணைக்குழு முன்னிலையில் ஒப்புவித்தார்கள். அப்படிப்பட்ட ஆணைக்குழுவில் முன்வைக்கப்பட்ட விடயங்களே தனக்குத் தெரியாது என்று மழுப்புகின்றார் கோத்தபாய. நேற்றைய பத்திரிகையாளர் சந்திப்பில் கோத்தபாயவிலிருந்து சில அடிகள் தள்ளியிருந்த டக்ளஸ் தேவானந்தாவுக்கு எதிராகவும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் முறைப்பாடு செய்திருந்தனர் என்பதும் நினைவில் கொள்ளவேண்டும்.

போரின் இறுதிக் கட்டத்தில் நடந்த கொடூரங்கள், மனிதாபிமானத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் பன்னாட்டு விசாரணைகள் தேவை என்று தமிழர் தரப்புக்கள் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றன. ஆனாலும் கலப்பு விசாரணையை வலியுறுத்தி ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை அரசின் அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்ட ஐ.நா. தீர்மானத்தைக்கூட, நிறைவேற்றமாட்டேன் என்று கோத்தபாய தூக்கிக் கடாசிவிட்டார். தற்போதைய அரசு அதில் உள்ள சில விடயங்களையாவது, காணாமல் ஆக்கப்பட்டோர்பணியகம், பலவந்தமாகக்காணாமல் ஆக்கப்படுதலைக் குற்றமாக அறிவிக்கும்சட்டம் உள்ளிட்டவற்றையாவது நிறைவேற்றியது. ஆனால் கோத்தபாயவோ, அதை எடுத்த எடுப்பிலேயே முழுமையாக தூக்கி எறிதுள்ளார்.

வடக்கு நிலவிடுவிப்பு தொடர்பில் கோத்தபாய நேற்றைய பத்திரிகையாளர்சந்திப்பில் உரிமை கோரினார். வடக்குத் தமிழ் மக்களின் 90 சதவீதமான காணிகளை தாமே விடுவித்தோம் என்றார். அதைப் பற்றி யாரும் பேசுவதில்லை என்று கவலையும் வெளியிட்டார். இதே கோத்தபாயதான், 2013 ஆம் ஆண்டு வடக்கில் காணிகளை நிரந்தரமாகச் சுவீகரிக்க அரசிதழ் அறிவித்தலை வெளியிட்டவர். வலி. வடக்கில் 6 ஆயிரத்து 384 ஏக்கர் நிலப் பரப்பை சுவீகரிக்கும் அறிவித்தலை வெளியிட்டவர். தேசிய பாதுகாப்பை காரணம் காட்டி அவர் சுவீகரிக்க அறிவித்தல் விடுத்த காணிகளில் 50 சதவீதத்தை தற்போதைய அரசு விடுவித்தது.

அரச தலைவர் வேட்பாளராக கோத்தபாய அறிவிக்கப்பட்டதும், அவர்கடந்தகாலத்திலிருந்ததைப் போன்று இப்போதில்லை என்று அவரைச் சந்தித்த தமிழ்த் தலைவர்கள் சிலர் அறிக்கைகள் விடுத்திருந்தனர். கோத்தபாய மாறவில்லை என்பதை அவரின் நேற்றைய பத்திரிகையாளர் சந்திப்பு தெளிவாக எடுத்துக் காட்;டுகின்றது. அவர் ஆட்சிக் கதிரைக்கு ஏறினால், தமிழர்கள் விடயத்தில் எப்படி நடந்து கொள்வார் என்பது இப்போது தெளிவாகத் தெரிகின்றது. தமிழ் மக்கள் சரியான முடிவை எடுப்பதற்கு அவரின் நேற்றைய பத்திரிகையாளர் சந்திப்புக் கருத்துக்களே போதும்.





# நாட்டினுடைய எதிர்காலத்தை ஒருகணம் சிந்தித்தால் என்ன?

இந்துமதி

அரச தலைவர் தேர்தல் நெருங்கிவரும் நிலையில் கட்சித் தாவல்கள் இடம்பெறுவதற்கான வாய்ப்பு அதிகரித்துக் காணப்படுவதாகவும் இதற்கான பேரம்பேசல்கள் இடம்பெறுவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஜனநாயகத்தைச் சீர்குலைக்கின்ற இந்தச் செயற்பாடுகள் நாட்டில் சாதாரண விடயங்களாக மாறிவிட்டன. இத்தகைய அரசியல்வாதிகள் தம்மை நம்பி வாக்களித்த மக்களுக்கு பெரும் துரோகத்தைப் புரிகின்றனர்.

> இலங்கையர் என்ற வகையில் இந்த நாட்டில் வாழ்கின்ற அனைத்து இன மக்களுக்கும் இந்த நாடு சொந்தமானது. அவர்கள் அனைவரும் இன, மத பேதமின்றி ஒருவரை இன்னொருவர் அரவணைத்து வாழ வேண்டும்.

**சஜித் கோத்தா இடையே மிகப்பெரும் அதிகாரப்போர்**

அரச தலைவர் தேர்தலில் சஜித் பிரேமதாஸ வுக்கும், கோத்தபாய ராஜபக்ஸவுக்கும் இடையே கடுமையான போட்டி நிலவுகின்ற நிலையில் இவர்களில் எவர் வெற்றி பெறுவார்கள் என்பதைக் கூறமுடியாதுள்ளது. கொழும்பு காலிமுகத்திடலில் முன்னெடுக்கப்பட்ட சஜித் பிரேமதாஸவின் முதலாவது பரப்புரைக் கூட்டத்தில் பெரும் திரளான மக்கள் கலந்து கொண்டனர். இதனால் ஐக்கிய தேசியக் கட்சியினர் தேர்தல் தொடர்பில் அதீத நம்பிக்கையுடன் உள்ளனர். எனினும் எந்த மாற்றமும் எப்போதும் ஏற்படலாம்.

இலங்கையர் என்ற வகையில் இந்த நாட்டில் வாழ்கின்ற அனைத்து இன மக்களுக்கும் இந்த நாடு சொந்தமானது. அவர்கள் அனைவரும் இன, மத பேதமின்றி ஒருவரை இன்னொருவர் அரவணைத்து வாழ வேண்டும். இந்த நிலையில் அண்மையில் இடம்பெற்ற தமிழ்ப் பத்திகைகளின் ஆசிரியர்களூடான சந்திப்பில் வேட்பாளர் சஜித் பிரேமதாஸ, சிறுபான்மை இனம் என்று ஒரு மக்கள் கூட்டத்தை அடையாளப் படுத்துவதை ஏற்கவில்லை என்று தெரிவித்துள்ளார்.

அரச தலைவர் தேர்தலில் நான் வென்றால் இலங்கையில் வாழும் அனைத்து இன மக்களும்ஒரேவகையில்செயற்படும்திட்டங்களையே கொண்டுவரவுள்ளேன். எல்லோருக்கும் ஒரே நீதி என்பதே எனது கொள்கை. இனவாத ரீதியான செயற்பாடுகளுக்கு நான் இடமளிக்கமாட்டேன் என்றும் ஆசிரியர்களிடத்தில் வலியுறுத்தியிருந்தார் சஜித். தேர்தலின் பின்னர் இந்த விடயத்தில் சஜித் அதீத அக்கறையுடன் செயற்பட வேண்டும்.

**இனவாதமற்ற தென்பகுதி சாத்தியப்படுமா?**

சகல இன மக்களும் சகோதரவுணர்வுடன் பேதங்கள் மறந்து வாழ்வார்களாயின் நாட்டின் நிலவரம் தலைகீழாக மாறிவிடும். தற்போதுள்ள பொருளாதார மந்தநிலை மறைந்து விடும். வறிய நாடு என்ற அடையாளக் குறியீடும் இல்லாமல் போய்விடும். அரசியல்வாதிகள்மனம்வைத்தால் மட்டுமே இவையெல்லாம் சாத்தியம். சஜித்கூறியவற்றைத் தென்பகுதி அரசியல் வாதிகள் ஏற்றுக் கொள்வார்களா? என்பதில் சந்தேகமே நிலவுகின்றது. ஏனென்றால் நாட்டையும் மக்களையும் விட பதவிக்கும் பணத்துக்கும்தான் அவர்கள் அதிக முக்கியத்துவம் அளிக்கின்றனர்.

விடுதலைப் புலிகள் பிளவைச் சந்திப்பதற்குக் காரணமாக இருந்தவர் அந்த அமைப்பின் தலைவர் பிரபாகரனுக்கு அடுத்த நிலையிலிருந்த கருணா என்பதை அனைவருமே அறிவார்கள். அவர் தமது செயலுக்குப் பிரதியுபகாரமாக அரசிடமிருந்து பதவிகளையும் சலுகைகளையும் பெற்றுக்கொண்டார். சுதந்திரக் கட்சியின் உப தலைவர்களில் ஒருவராகக் கூட அவர் நியமிக்கப்பட்டார். தமிழர்களைக் காப்பாற்றுவதற்கு மகிந்த ஆட்சி மீண்டும் வர வேண்டுமென அவர்கூறியுள்ளதை அவரின் சுயநலத்தின் வெளிப்பாடாகவே கருத வேண்டியுள்ளது. மகிந்த ஆட்சியில் நடந்ததை அவர் மறந்து விட்டாரா? மகிந்த ஆட்சியால் எவ்வாறு தமிழர்களைக் காப்பாற்ற முடியும்? போன்ற விளக்கங்களுக்கு அவரால் பதில் கூற முடியுமா? அதேவேளை இன்னொரு முஸ்லிம் அரசியல் வாதியான மையோன் முஸ்தபாவும் கருணாவின் கருத்துக்கு ஒத்ததாகவே தமது கருத்தை வெளியிடுகிறார். இவர்கள் இருவரும் தமது பிழைப்புக்கு வழி தேடுகின்றனர். இத்தகைய அரசியல் வாதிகள் இருக்கும் வரையில் நாட்டின் விடிவு சாத்தியமற்றது. இவர்கள் தாய்நாட்டைப்பற்றி ஒருகணம் சிந்தித்தால் என்ன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கோத்தாவின் வரவும் புலிக் காச்சலும்

திருக்குமரன்

அரச தலைவர் தேர்தலில் போட்டியிடும் ராஜபக்சாக்களிடம் எப்போதும் இருக்கும் அஸ்திரம் போர் வெற்றி. யாராலுமே அழித்தொழிக்க முடியாது என்கின்ற விடுதலைப் புலிகள் அமைப்பை இல்லாதொழித்தவர்கள் தாங்கள் மாத்திரமே என்று மார்தட்டிக் கொள்பவர்கள். 2009ஆம் ஆண்டு போரை முடிவுக்கு கொண்டு வந்த சூட்டோடு, இரண்டாண்டு பதவிக் காலம் எஞ்சியிருந்த நிலையிலும், 2010ஆம் ஆண்டு அரச தலைவர் தேர்தலை நடத்தி தங்கள் ஆட்சியை நிலைநிறுத்தியவர்கள் ராஜபக்சாக்கள்.

தமிழீழ விடுதலைப் புலிகள் ஒழிக்கப்பட்டதாக அறிவித்தாலும், புலிப் பூச்சாண்டி காட்டியே தென்னிலங்கை மக்களைப் பயப்பீதிக்கு உள்ளாக்கி ஆட்சியைப் பாதுகாத்துக் கொண்டவர்களும் ராஜபக்சாக்கள்தான். 2010ஆம் ஆண்டிலிருந்து 2015ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலத்தில் இந்தக் கதைகளை தமிழ் மக்கள் அதிகம் அறிந்திருந்தனர். தமிழீழ விடுதலைப் புலிகள் போன்று கட்டமைக்கப்பட்ட ராணுவம் தாயகத்தில் தோன்றுமா இல்லையா என்பது தமிழ் மக்களுக்கு நன்று தெரியும். ராஜபக்சாக்களால் எழுதப்பட்ட புலிப் பூச்சாண்டி நாடகத்தை தமிழ் மக்கள் நம்பவில்லையாயினும், சிங்கள மக்களிடத்தில் அது வெற்றி பெற்றது.

போர் முடிவின் பின்னர், தமிழீழ விடுதலைப் புலிகளின் மறுவாழ்வளிக்கப்பட்ட உறுப்பினர்களையே நம்ப முடியாத சூழல் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டது. அவர்கள் புலனாய்வாளர்களா? அவர்களுக்கு தகவல் வழங்குபவர்களா? என்ற சந்தேகத்துடனேயே நோக்கப்பட்டனர். கருணா போன்ற தளபதிகளே, துரோகிகளாக மாறும்போது இவர்கள் எம்மாத்திரம் என்பதே இந்தச் சந்தேகப் பார்வைக்குக் காரணம். இராணுவப் புலனாய்வுப் பிரிவினரிடம் சம்பளம் பெறுபவர்களாக சிலர் இருக்கின்றார்கள் என்பதும் உண்மை. அவர்கள், இத்தகைய புலிப் பூச்சாண்டிகளுக்கு மிகப் பொருத்தமானநடிகர்களாக இருந்தார்கள். இந்தப் புலிப் பூச்சாண்டி உள்ளிட்ட எல்லா போர் வெற்றி மாயையும் உடைத்தெறிந்துதான் 2015ஆம் ஆண்டு ஆட்சி மாற்றம் ஏற்படுத்தப்பட்டது. அதன் பின்னர் புலிப் பூச்சாண்டி கொஞ்சம் அடங்கிப் போனது.

2019ஆம் ஆண்டு நவம்பர் அல்லது டிசெம்பர் மாதம் அரச தலைவர் தேர்தல் இடம்பெறும் என்பது உறுதியாகியிருந்த சூழலில், திடீரென ஏப்ரல் 21ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு அன்று இலங்கையில் 6 இடங்களில் தற்கொலைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. பயப் பீதி நாடு முழுவதும் ஏற்படுத்தப்பட்டது. போர் வெற்றியை உரித்துக் கோருபவர்கள் ஆட்சியில் இல்லாவிட்டால் இப்படித்தான் நடக்கும் என்பதும், அவர்கள் ஆட்சிக்கு வந்தாலே இப்படி நடக்காமல் தடுக்க முடியும் என்பதும் மீண்டும் மீண்டும் சொல்லப்பட்டது. மக்களை மூளைச் சலவை செய்யும் பணி வேகமாக முன்னெடுக்கப்பட்டது.

புலிப் பூச்சாண்டிக்கு மேலதிகமாக, பயங்கர பூதாகரமான உயிர்ப் பயம் உருவாக்கப்பட்டது. இந்தப் பயத்தை வைத்து இப்போதும் பரப்புரை முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கும் சூழலில், முன்னாள் புலி உறுப்பினர்கள் கைதுப் படலம் வடக்கில் ஆரம்பமாகியுள்ளது. இதற்குச் சமாந்தரமாக மலேசியாவிலும் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவளித்தனர் என்ற குற்றச்சாட்டில் 12 பேர் கைதாகியுள்ளனர்.

மருத்துவர் சிவரூபன் தொடங்கி இப்போது கிளிநொச்சி சாந்தபுரத்தில் இளைஞர் கைது வரையில் புதிய புலிப் பூச்சாண்டிப் படத்துக்கான கைது நாடகங்களா என்று சந்தேகம் எழுகின்றது. தெற்கின் தேர்தல் வெற்றிக்காக வடக்கு இளையோர் பலிகொடுக்கப்படுகின்றனர்? மருத்துவர் சிவரூபனிடமிருந்து ஆயுதங்களை மீட்டதாகப் பொலிஸார் கூறினர். அவர் முக்கிய புள்ளி ஒன்றை இலக்கு வைத்து கொலைச் சதி முயற்சியில் ஈடுபட்டதாகவும் குற்றம் சுமத்தப்படுகின்றது.

கடந்த ஒரு வாரத்துக்குள் கிளிநொச்சியில் இரண்டு பேர் கைது செய்யப்பட்டனர். ஒருவர் அம்பாள்குளத்தைச் சேர்ந்தவர். மற்றையவர் சாந்தபுரத்தைச் சேர்ந்தவர்.

திருகோணமலை கந்தளாயில் வைத்து அம்பாள்குளத்தைச் சேர்ந்த குடும்பத் தலைவர் கைது செய்யப்பட்டார். அவரைக் கைது செய்யும்போது அவரிடம் ரி56 ரக துப்பாக்கி இருந்தாகவும், அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் அம்பாள்குளத்திலுள்ள வீட்டிலிருந்து மேலும் பல ஆயுதங்களும், யாழ்ப்பாணம் கோண்டாவிலில் கிளைமோர்களும் மீட்கப்பட்டன. அத்துடன் இவருடன் தொடர்பில் இருந்ததாகவும், ஒட்டிசுட்டானில் புலிக்கொடி மற்றும் ஆயுதங்களுடன் முச்சக்கர வண்டி ஒன்று பிடிப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையதாகவும் தெரிவிக்கப்பட்டு சாந்தபுரத்தில் மற்றொருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர்கள் இருவரும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் போராளிகள் என்று கூறப்படுகின்றது. அம்பாள்குளத்தைச் சேர்ந்தவர், புலனாய்வுப் பிரிவிடம் மாதாந்த சம்பளத்துக்குப் பணி புரிந்தவர் என்று ஊரவர்கள் கூறுகின்றனர். பொலிஸ் தகவல்களும் அதனை உறுதி செய்கின்றன. அவரை கந்தளாயில் மாட்டி விட்டதும் ராணுவப் புலனாய்வாளர்கள்தான் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்தக் கைது விவகாரங்கள் தென்னிலங்கை ஊடகங்களால் பெரிதுபடுத்தப்பட்டுள்ளன. தற்போதைய தேர்தல் பரப்புரைக்கு தெம்பூட்டும் வகையில் அமைந்துள்ளது. கோத்தபாய ராஜபக்ச ராணுவ நிலை சார்ந்து தனது பரப்புரைகளை முன்னெடுத்துச் செல்கையில், அதற்கு ஆதாரமாக இந்தக் கைதுகளும், புலிப் பூச்சாண்டிக் கதைகளும் இருக்கின்றன. கடந்த காலங்களைப் போன்று தேர்தலுக்காக மீண்டும் இந்தக் கைதுகள் தொடங்கப்பட்டுள்ளனவா என்ற சந்தேகம் பலமாக எழுகின்றது. அந்தச் சந்தேகத்தை வலுப்படுத்துவதைப் போன்றே கைதுகளும், கைதாகுபவர்களும் இருக்கின்றனர்.

இப்படிக் குறுக்கு வழியில் ஆட்சிக்கு வருபவர் தேவைதானா என்பதை ஒன்றுக்கு பலமுறை தமிழர்கள் யோசிக்க வேண்டும். யோசித்தே ஆக வேண்டியது கட்டாயம்.

## ஆசிரியருக்கான கடிதம்

# அரச தலைவர் தேர்தலில் வாக்களிப்பது அவசியம்

இலங்கை சுதந்திரமடைந்த காலம் முதல் சிங்கள அரசுகளும், சிங்களத் தலைமைகளும் தமிழ் மக்களையும், தமிழ்த் தலைமைகளும் தொடர்ச்சியாக அரசியல் தீர்வு விடயத்தில் ஏமாற்றி வருகின்றன.

புலிகள் காலத்தில் அன்று தேர்தலைப் புறக்கணித்ததால்தான் உரியவர்கள் அழிக்கப்பட்டு, தோற்கடிக்கப்பட்டு, விடுதலைப் போராட்டம் மௌனிக்கச் செய்யப்பட்டது. இதனால் இன்று தமிழ் பேசும் மக்கள் அரசியல் அநாதைகளாக, அடிமைகளாக, அரசை எதற்கும் கையேந்தி நிற்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

சிங்களத் தலைமைகளை நம்பமுடியாது என்றபோதிலும் தேர்தல் புறக்கணிப்பு என்பது சரியான முடிவொன்றல்ல. இருப்பவர்களில் ஓரளவு நம்பிக்கை வைக்கக்கூடிய வேட்பாளரை ஆதரித்து அவரிடம் தமிழர்கள் தமது கோரிக்கைகளை முன்வைக்க வேண்டும்.

தமிழர்களின் வாக்குகள் இல்லாமல் வெற்றி சாத்தியமில்லை என்றுள்ள இந்தக் காலத்தை புறக்கணிப்பு என்கின்ற பகட்டுக்குள் தள்ளவிடாது உரிய முறையில் பயன்படுத்துவோமாக.

- ஜெயபாலன்

## வாசகர்களே!

ஆசிரியருக்கான கடிதம் பகுதிக்கு வந்து[illegible]கின்ற பல கடிதங்கள் எழுதுபவரின் சுயவிவரங்கள் இல்லாத காரணத்தால் பிரசுரிக்க முடியாத நிலையில் இருக்கின்றன. ஆகையால் தாங்கள் ஆசிரியருக்கு எழுதுகின்ற கடிதத்தில் உங்களுடைய [illegible] பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் பயன்படுத்துபவராக இருந்தால் மின்னஞ்சல் முகவரி போன்றவற்றைத் தவறாது குறிப்பிட்டு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். [illegible] தங்களின் பெயர் விவரங்களை வெளிப்படுத்த வேண்டாம் என்றால் அது குறித்துக் குறிப்பிடுங்கள். மேற்குறித்த விடயங்கள் இணைக்கப்படாத கடிதம் பிரசுரிக்கப்படாது என்பதைக் கவனத்தில் கொள்க! எழுதுகின்ற விடயத்தை உறுதிப்படுத்தும் வகையிலான ஆவணங்கள் ஏதும் இருந்தால் அவற்றை இணைத்து அனுப்புவதும் சிறந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊர்காவற்றுறை - அனலைதீவுக்கு எழுதாரகைப் படகு மீளவரவுள்ளது

## பிரதேச செயலரிடம் அது ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 16

யாழ்ப்பாணத்தில் ஊர்காவற்றுறைக்கும் எழுவைதீவு ஊடாக அனலைதீவுக்கும் இடையில், சுமார் ஒரு வருடமாக பயணிகள் சேவையில் ஈடுபடாதிருந்த எழுதாரகைப் படகு, 1.37 மில்லியன் ரூபாவில் சீரமைக்கப்பட்டு ஊர்காவற்றுறை பிரதேச செயலரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.





தேசிய கொள்கைகள் பொருளாதார அமைச்சின் நிதிப்படுத்தலில், ஊர்காவற்றுறையில் இருந்து எழுவைதீவு மற்றும் அனலைதீவுக்கான பயணிகள் படகுச்சேவையை வசதிப்படுத்தும் முகமாக ரூபா 137 மில்லியனில் எழுதாரகைப் படகு அமைக்கப்பட்டு அங்கு பயணிகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டது. நவீனதொழில்நுட்பத்தில் வடிவமைக்கப்பட்டிருந்த இந்தப் படகில் ஒரே தடவையில் 100 க்கும் மேற்பட்ட பயணிகளை ஏற்றிச்செல்ல முடியும்.

பின்னர் சுமார் ஒரு வருடமாக அது பயணிகள் சேவையில் ஈடுபடுவதில்லை.

இந்த நிலையில் எழுதாரகை சீரமைக்கப்பட்டுள்ளது. அதை அமைச்சின் செயலர் வே.சிவஞானசோதி மாவட்ட மேலதிக செயலர் எஸ். முரளிதரன் ஊடாக ஊர்காவற்றுறை பிரதேச செயலர் திருமதி. மஞ்சுளாதேவி சதீஸனிடம் உத்தியோகபூர்வமாகக் கையளித்தார்.

நிகழ்வில் திட்டமிடல் பணிப்பாளர், உதவி திட்டமிடல் பணிப்பளர் மற்றும் பிரதேச மக்களும் கலந்து கொண்டனர்.

இவைமட்டுமன்றி, காரைநகர் பிரதேச செயலர் பிரிவுக்கு ஒதுக்கப்பட்ட 48 வீடுகளில் 21 வீடுகள் முடிவுறுத்தப்பட்டு எழுவைதீவு, அனலைதீவு மற்றும் ஊர்காவற்றுறை கிராம அலுவலர் பிரிவிலுள்ள பயனாளிகளுக்கு கையளிக்கப்பட்டன.

மேலும் மாதகல் காஞ்சிபுரம் வீதி (2200 மீற்றர்) 20மில்லியன் ரூபா செலவில் சீமைக்கப்பட்டு மக்கள் மயப்படுத்தப்பட்டது என்று அமைச்சின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)



# கால்நடை வளர்ப்பு பயிற்சிக் கருத்தரங்கு

வவுனியா,ஒக்.16

வவுனியா, மன்னார் மாவட்டங்களிலுள்ள சிக்கனக் கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்துவ பயனாளிகளுக்கு கால்நடை வளர்ப்பு தொடர்பான பயிற்சிக் கருத்தரங்கு நேற்று இடம்பெற்றது.

வடக்கு மாகாண சிக்கனக் கடனுதவு கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத்தால் வவுனியா மாவட்ட சிக்கனக் கடனுதவுக் கூட்டுறவுச் சங்க சமாச அலுவலக மண்டபத்தில் இடம்பெற்றது.

வடக்கு மாகாண சிக்கனக் கடனுதவுக் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத்தின் தலைவர் பொ. சண்முகசுந்தரம் தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில் விரிவுரையாளராக வவுனியா கால்நடை வளர்ப்பு சுகாதார சேவைத்திணைக்களத்தின் வைத்திய அதிகாரி திருமதி காயத்திரி சத்தியலிங்கம் கலந்து கொண்டார். (ஐ-222)



கோண்டாவில் சிவபூமி பாடசாலையில் ஆசிரியர் தின விழா சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் கலாநிதி. ஆறு.திருமுருகன் தலைமையில் கடந்த வாரம் இடம்பெற்றது. (க)

# பொது அறிவுவினாடிவினா இறுதிப் போட்டிகள் இன்று

வவுனியா,ஒக்.16

வவுனியா மாவட்ட முதியோர் சங்கங்களுக்கிடையில் மாவட்ட சமூக சேவை அலுவலகம் நடத்திவரும் பொது அறிவு வினாடிவினாப் போட்டியின் அரையிறுதி மற்றும் இறுதிப் போட்டிகள் இன்று நடைபெறவுள்ளன.

போட்டியில் வெற்றிபெறும் அணிகளுக்கான பரிசில்களும் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள முதியோர் தின நிகழ்வில் வைத்து வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# "வடக்கு வட்ட மேசை" கலந்துரையாடல் நாளை

"பாடசாலைகளில் மாணவர்களுக்கான அனுமதியும் ஆலோசனைகளும்' என்ற தலைப்பிலான 'வடக்கு வட்ட மேசை' கலந்துரையாடல் யாழ்ப்பாணம் பொது நூலகத்தில் நாளை வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

வடக்கு மாகாணத்தை அபிவிருத்திப் பாதையில் முன்கொண்டு செல்லும் வகையில் ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனின் எண்ணக்கருவுக்கு அமைவாக கல்வியலாளர்கள் மற்றும் துறைசார் அனுபவசாலிகளின் திட்டங்களையும் ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்ளும் வகையில் இந்த வட்ட மேசை கலந்துரையாடல் நடைபெறவுள்ளது. இது தொடர்பில் கருத்துக்களை தெரிவிக்க ஆர்வமுள்ளோர் நிகழ்வில் கலந்து கொண்டு தமது கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ள முடியும் என்று ஆளுநரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (க)



# வைரவபுளியங்குளத்தில் முதியோர் தின நிகழ்வு

வவுனியா,ஒக்.16

வவுனியா வைரவபுளியங்குளம் முதியோர் சங்கத்தின் முதியோர் தின நிகழ்வுகள் நேற்று நடைபெற்றன.

நிகழ்வில் முதியவர்கள் மதிப்பளிக்கப்பட்டதுடன், அவர்களுக்கான விளையாட்டு நிகழ்வுகளும் நடத்தப்பட்டன. வெற்றிபெற்றவர்களுக்குப் பரிசில்களும் வழங்கப்பட்டன.

"வடிவுறு மூப்பு" எனும் தலைப்பில் தமிழருவி சிவகுமாரனால் சிறப்புரை நிகழ்த்தப்பட்டதுடன், சிதம்பரேஸ்வரர் நடனாலயத்தின் ஏற்பாட்டில் நடன நிகழ்வுகளும் இடம்பெற்றன.

சங்கத்தின் தலைவர் ம. தேவராஜா தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக பிரதேச செயலர் கா.உதயராஜா, மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் ஸ்ரீனிவாசன், கிராம அலுவலர் க.விஜயகுமார், தமிழருவி த.சிவகுமாரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (க-110-ரி4)

# யாழ்.பெண்கள் சமாசத்தை இன்று சந்திக்கிறார் நாமல்

யாழ்ப்பாணம், ஒக். 16

யாழ்ப்பாணத்துக்கு நேற்று முன்தினம் வருகைதந்த நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச இன்று பெண்கள் சமாசத்துடன் கலந்துரையாடல் ஒன்றில் ஈடுபடவுள்ளார்.

இன்று காலை 8 மணியளவில் யாழ்ப்பாணம் திண்ணை விருந்தினர் விடுதியில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெறும் என நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் உதயனுக்குத் தெரிவித்தார்.

அரச தலைவர் தேர்தலுக்கான பரப்புரைகள் ஆரம்பித்துள்ள நிலையில் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் வேட்பாளராகக் களமிறங்கவுள்ள பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலர் கோத்தபாய ராஜபக்சவுக்கு ஆதரவாக, நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்து தேர்தல் பிரசாரங்களில் ஈடுபட்டுவருகிறார்.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வந்த அவர் பல தரப்புளை அழைத்துப் பேசினார். சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் யாழ்ப்பாண மாவட்ட, மற்றும் பிரதேச அமைப்பாளர்கள், ஈ.பி. டி.பி கட்சியினர், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்ப்பாண மாவட்ட அமைப்பாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன் ஆகியோர் நாமலுக்கு பக்க பலமாக இருந்து மக்களுடனான சந்திப்புக்களுக்கு ஏற்பாடுகளைச் செய்து கொடுக்கின்றனர். (ஐ-104)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கின் அடுத்த நிர்வாகப் பொறுப்பை பெண்ணிடம் ஒப்படைக்க வேண்டும்

## பிரிட்டன் தூதுவரிடம் ஆளுநர் எடுத்துரைப்பு

*யாழ்ப்பாணம், ஒக்.16*

வடக்கு மாகாணத்தில் எதிர்காலத்தில் முதலமைச்சரோ அல்லது ஆளுநரோ தெரிவு செய்யப்படும்போது அந்தப் பொறுப்புக்கு ஒரு பெண் தெரிவு செய்யப்பட வேண்டும். இதுவே எனது எதிர்பார்ப்பு என்று வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன், பிரிட்டன் தூதுவரிடம் எடுத்துக் கூறினார்.



இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் சாரா ஹல்டன். வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனை. ஆளுநர் செயலத்தில் நேற்று முன்தினம் சந்தித்தார்.

சந்திப்பில் ஆளுநர் பல்வேறு விடயங்களைத் தூதுவருக்கு எடுத்துக் கூறினார்.

போருக்குப் பின்னர் வடக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்படும் பணிகள், மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான தேவைகள், வடக்குக் கூட்டுறவு அபிவிருத்தி வங்கியின் தேவைகள் உள்ளிட்ட விடயங்களை தூதுவருக்கு ஆளுநர் தெரியப்படுத்தினார்.

கூட்டுறவு வங்கியின் வளர்ச்சிக்கு பிரிட்டன் அரசின் உதவியை எதிர்பார்ப்பதாகவும் ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன் வடமாகாணத்தில் பால்நிலை சமத்துவத்தைப் பேணுவதற்கு பிரிட்டன் தூதரகத்துடன் இணைந்து செயற்படத் தயாராக இருப்பதாகவும் ஆளுநர் தெரிவித்தார்.

"இந்தச் சந்திப்பு ஆக்கபூர்வமான சந்திப்பாக அமைந்தது. ஆளுநரின் செயற்பாடுகள் திருப்திகர மானதாக அமைந்துள்ளதைஉணர்ந்தேன். அவருக்கு எனது பாராட்டுக்கள். எதிர்காலத்தில் இணைந்து செயற்படுவதற்கு தயாராகவுள்ளோம்" என்று தூதுவர் தெரிவித்தார் என்று ஆளுநரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (க-7)



தேசிய மரம் நடுகை தினத்தை முன்னிட்டு மன்னார் வட்டார வனவளக்காரியாலயத்தின் ஒழுங்கமைப்பில் சிலாவத்துறை சவேரியார் புரம் சவேரியார் ஆலய வளாகத்தில் மரங்கள் நடுகை செய்யப்பட்டன. முசலி பிரதேச செயலர் எஸ்.வசந்த குமார் மற்றும் பிராந்திய வனவள அதிகாரிகள், கிராம அமைப்பினர், அருட்சகோதரிகள் கலந்து கொண்டு மரங்களை நடுகை செய்தனர். (க-213)



## சிறுவர், முதியோர் மற்றும் சிறப்புத்தேவையுடையோர் தின நிகழ்வுகள்

கொடிகாமம், ஒக் 16

கிளிநொச்சி பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலகத்தின் சிறுவர் முதியோர் மற்றும் சிறப்புத் தேவையுடையோர் தின நிகழ்வுகள் அண்மையில் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதேச செயலகத்துக்குட்பட்ட போக்குவரத்துத் தேவையுடையோரில் தெரிவு செய்யப்பட்ட 10 மாணவர்களுக்கு ஈருருளிகள் வழங்கி வைக்கப்பட்டன.

விருந்தினராகக் கலந்து கொண்ட தென்மராட்சிக் கிழக்கு அபிவிருத்தி ஒன்றியத்தின் பிரதி நிதியும், சமூக சேவையாளருமான ச.சாந்தகுமாரால் இந்த உதவிகள் வழங்கப்பட்டன. (ஜ-159)



## மன்னார் கடலில் மிதந்த கஞ்சாப் பொதிகள் மீட்பு

மன்னார், ஒக்.16

தலைமன்னார் கடற்பரப்பில் மிதந்து கொண்டிருந்த ஒரு தொகை கேரளா கஞ்சாப் பொதிகளைக் கடற்படையினர் நேற்று முன்தினம் மீட்டனர்.

கடற்பரப்பில் மிதந்து கொண்டிருந்த சந்தேகத்துக்கிடமான 2 பொதிகளை ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த கடற்படையினர் அவதானித்தனர்.

குறித்த இரண்டு பொதிகளையும் மீட்ட கடற்படையினர், அதனைச் சோதனைக்கு உட்படுத்திய போது அதில் கேரளா கஞ்சா இருந்தமை தெரியவந்தது.

மீட்கப்பட்ட கஞ்சா சுமார் 86 கிலோ 520 கிராம் என்று கடற்படையினர் தெரிவித்தனர். தலைமன்னார் கடலில் கடற்படையினரின் ரோந்து நடவடிக்கைகளின் காரணமாக, சந்தேக நபர்கள் கேரள கஞ்சா பொதிகளைக் கடலில் போட்டு விட்டுத் தப்பித்திருக்க முடியும் என்று கடற்படையினர் தெரிவித்தனர்.

மீட்கப்பட்ட கேரளா கஞ்சாப் பொதிகள் மேலதிக விசாரணைக்காக தலைமன்னார் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (க-56)

## யாழ். மாநகரப் பகுதிகளில் டெங்குத் தொற்று அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.16

யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு உட்பட்ட பகுதிகளில் டெங்குத் தொற்று திடீரென அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து அந்தந்த பொதுச் சுகாதாரப் பரிசேதகர் பிரிவுகளில் நுளம்புக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

நாவாந்துறைப் பிரதேசத்தின் பொதுச் சுகாதாரப் பிரிவில் டெங்குக் கட்டுப்பாட்டு மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் நேற்று இடம்பெற்றன.

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத் தொண்டர்கள், சமூக அமைப்புப் பிரதிநிதிகள் சுகாதாரப் பிரிவினர், பாடசாலை மாணவர்கள் இணைந்து குறித்த பகுதியில் துப்புரவு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

கொட்டடி நமசிவாயம் வித்தியாலயம், நாவாந்துறை றோமன் கத்தோலிக்கப் பாடசாலை, ஒஸ்மானியக் கல்லூரி மற்றும் கஜித கல்லூரி உட்பட மற்றும் பொது இடங்களில் துப்புரவு மற்றும் டெங்குக்கான விழிப்புணர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

நாவாந்துறைப் பிரதேசத்தில் இதுவரைக்கும் ஐந்து பேர் டெங்குத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். அதனையடுத்து டெங்கு ஒழிப்புச் செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை டெங்கின் தாக்கம் காணப்படும் மாநகரப் பிரதேசத்தில் குறிப்பிட்ட இடங்களில் நுளம்புக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (க-17)




## மதிப்பளிப்பு நிகழ்வு

மன்னார், ஒக.16

மடு வலயக் கல்விப் பணிமனையில் விஞ்ஞான உதவிக் கல்வி பணிப்பாளராகக் கடமையாற்றி ஓய்வு பெற்ற திருமதி வி.சூசை நாயகத்துக்கான மதிப்பளிப்பு நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வு மடு வலய விஞ்ஞான ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை அடம்பன் ம.வி பாடசாலையில் இடம்பெற்றது.

நிகழ்வில் சுமார் 35 வருடங்கள் அரச சேவையில் கடமையாற்றி. சுமார் 15 வருடங்கள் மடு வலயக் கல்விப் பணிமனையில் விஞ்ஞான உதவிக் கல்வி பணிப்பாளராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றமையை அடுத்து அவரது சேவையைப் பாராட்டி மதிப்பளிக்கப்பட்டது. (ஜ-56)



வடமாட்சிக் கிழக்கு நாகர்கோவில் பூர்வீக நாகதம்பிரான் ஆலய வரலாற்றைக் குறிக்கும் கப்பல் திருவிழா நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு இடம்பெற்றது. (க 173)

## விழிப்புணர்வு நிகழ்வு

உலக இதய மீளியக்க நாளை முன்னிட்டு "உலகிலுள்ள ஒவ்வொருவரும் ஒரு உயிரைக் காப்பற்ற முடியும்" எனும் தொனிப்பொருளிலான விழிப்புணர்வு நிகழ்வு இன்று புதன்கிழமை காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரை யாழ்ப்பாணம் காகில்ஸ் சதுக்கத்தில் இடம்பெறும். இதய நோய் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தல் நோக்குடன் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (க-105)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவசியாகுளம் மாணவர்களின் மாதிரிச் சந்தை நடைபெற்றது



வவுனியா,ஒக்.16
வவுனியா தவசியாகுளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்களின் இணைப் பாடவிதான செயற்பாடுகளில் ஒன்றான மாணவர் மாதிரிச்சந்தை பாடசாலை மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

ஆரம்பப் பிரிவு மாணவர்கள் தமது கணித அறிவையும், சமூகத்தில் தொடர்பாடல் விருத்தி, வியாபார நுணுக்கங்கள் என்பவற்றை பாடசாலையிலேயே கற்றுக் கொடுக்கும் முகமாக மாதிரிச் சந்தை நடைபெற்றது.

மாணவர்கள் தமது வீட்டுத்தோட்டத்தில்விளைந்த காய்கறிகள், தேங்காய், கீரைவகைகள், பழங்கள், கைப்பணிப் பொருள்கள் போன்றவற்றை காட்சிப்படுத்தி வியாபாரத்தில் ஈடுபட்டனர்.

சிறுவர்கள் மகிழ்ச்சியுடன் தமது விற்பனைப் பொருள்களை வியாபாரம் செய்வதில் ஈடுபட்டிருந்தனர். கிராம மக்களும் சிறுவர்களிடம் பணம் கொடுத்துப் பொருள்களைக் கொள்வளவு செய்தனர். (த-110)

## ஆயிரக் கணக்கானோர் காத்திருக்க 999 பேருக்கு மட்டுமே நியமனங்கள்

*சாடுகின்றார் தவிசாளர்*

யாழ்ப்பாணம், ஒக். 16
போர் முடிவுற்ற பின்னரும் எமது இளம் சமுதாயத்தினர் சகல வழிகளிலும் தொடர்ந்து பின்தள்ளப்பட்டு, ஓரம் கட்டப்பட்டே வருகின்றனர். பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் வேலை வாய்ப்புக்காக ஏங்கி நிற்கின்ற போதும் வெறும் 999 பேருக்கு மட்டுமே கருத்திட்ட உதவிகள் மற்றும் சில பதவிகள் வழங்கப்படுகின்றன.

இதனை சுகபோகத்துக்காக ஏங்கி நிற்கும் எமது தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எள்ளளவிலும் கருத்தில் கொள்ளாது அடுத்த கட்ட பதவிக்காக ஏங்கி நிற்கின்றனர்.

இவ்வாறு காரைநகர் பிரதேச சபைத் தவிசாளர் வீ. கேதீஸ்வரதாஸ் விடுத்த ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இனவாதத்துக்காகப் போராட்டம் நடத்தியவர்களின் நோக்கு, இலக்குக்கு அப்பால் இன்று அதே பாதையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையிலெடுத்து அரசுக்கு முட்டுக் கொடுத்து வருகின்றனர். எவரும் அக்கறை செலுத்துவதில்லை.

அரசதலைவர், தலைமைஅமைச்சர்கூட வடக்கு கிழக்கு இளைஞர்களின் அபிவிருத்தியிலோ, வேலைவாய்ப்பிலோ, அவர்களின் வாழ்வாதாரத்திலோ எவ்வித அக்கறையும் அற்று செயல்படுகின்றனர்.

எமது தமிழ்த் தலைவர்கள் இதுவரை எமது இளம் சமுதாயம் தொடர்பான ஆய்வை மேற்கொண்டார்களா? அவர்களுடைய வாழ்வு தொடர்பாக பகுப்பாய்வு செய்து கொண்டார்களா? இங்கு எதுவுமே இல்லாத சூழல் தான் அவதானிக்கப்படுகிறது.

அரசியல் தீர்வுகள், வேணவாக்கள், வேலைவாய்ப்பு, கைத்தொழில், விவசாய அபிவிருத்திகள், முன்னேற்றங்கள் குறித்து எழுத்து மூலமோ ? வாய்மொழி மூலமோ வழங்க முடியாத அரசதலைவர் வேட்பாளர்களுக்கு முட்டுக்கொடுத்து வாழும் பழக்கத்தை விடுத்து எமது சமுதாய நலன் நோக்கிச் செயற்படக்கூடியதாக புதிய தலைமைகள் உருவாக வேண்டும். எனவே எமது எதிர்கால சந்ததியினர் நீடித்த நிலைபேறான மக்களின் வாழ்வை மையப்புள்ளியாகக் கொண்டுசெல்லும் தமிழ் தலைமைகள் புதிய பரிமாணத்தில் செல்ல வேண்டும் அல்லது புதிய இளம் சமூகத்தின் கைகளில் மாற்றிவழங்க முன்வர வேண்டும் - என்றுள்ளது. (த)

## அறிவியல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஒக்.16
தமிழ் விக்கிப்பீடியா குழுமத்தின் 16 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, விக்கிப்பீடியா குழுமமும் யாழ்ப்பாணத்தமிழ்ச்சங்கமும் இணைந்து நடத்தும் அறிவியல் தமிழ் கருத்தரங்கு எதிர்வரும் 19 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்துக்கு அருகில் உள்ள சரஸ்வதி மண்டபத்தின் கம்சியா மகாலில் நடைபெறவுள்ளது.

விக்கிப்பீடியா குழுமத்தைச் சேர்ந்த பொறியியலாளர் மு. சிவகோசரன் தலைமையில் நடைபெறும் கருத்தரங்கில், தமிழ்ச்சங்கத் தலைவர் செந்தமிழ்ச்சொல்லருவி ச.லலீசன் தொடக்கவுரையையும், விக்கிப்பீடியா குறித்த அறிமுகவுரையை தமிழ் விக்கிப்பீடியா தொடக்குநர்களில் ஒருவராகிய இ.மயூரநாதனும் ஆற்றுவார்கள்.

அறிவியல் தமிழ் வளர்ச்சியில் ஈழத்தவர்களின் பங்களிப்பு என்ற பொருளில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விரிவுரையாளர் தி.செல்வமனோகரன் சிறப்புரை ஆற்றுவார். தமிழ்ச்சங்கப் பொருளாளர் பேராசிரியர் தி.வேல்நம்பி நிறைவுரையாற்றுவார்.

கருத்தரங்கில் தமிழ் விக்கிப்பீடியாவுக்கு பயனர்கள் எவ்வாறு பங்களிப்பது என்பது தொடர்பாக விக்கிப்பீடியா குழுமத்தினர் கலந்துரையாடல் மூலம் விளக்கங்களை வழங்குவர். (க)



மாகாண மட்டத்தில் நடைபெற்ற தரம் ஒன்றிற்கான விரலால் அச்சுப்பதித்தல் போட்டியில் யாழ்ப்பாணம் உடுவில் மகளிர் கல்லூரி மாணவி வினோத் நிஸானா இரண்டாமிடத்தைப் பெற்றுள்ளார் என்று பாடசாலை அதிபர் அறிவித்துள்ளார்.

இந்தப் போட்டி கடந்த சனிக்கிழமை இடம்பெறறது. (ஐ)

### இணக்கப்பாட்டுக் கலந்துரையாடலில் ஈடுபட

# முன்னணியினருக்கு அருகதையில்லை

*கூட்டமைப்பின் சிவமோகன் எம்.பி. தெரிவிக்கிறார்*

*மன்னார், ஒக். 16*

*அனைத்துக் கட்சிகளும் சேர்ந்து தீர்மானம் எடுப்பதாக இருந்தால் அனைத்துக் கட்சிகளோடும் ஒன்றுசேர்ந்து கதைக்கமுடியும் நீங்கள் (முன்னணியினர்) கட்சித் தீர்மானம் எடுத்துவிட்டீர்கள். தீர்மானம் எடுத்த நீங்கள் மீண்டும் கூடித் தீர்மானம் எடுப்போம் என்று எப்படிக் கூற முடியும்?*

எனவே பல்கலைக்கழக மாணவர்களின் பொதுக் கொள்கை இணக்கப்பாட்டுக்கலந்துரையாடலுக்குச் சென்று பேசும் அருகதை முன்னணிக்கு இல்லை என்பதை நான் பதிவு செய்கிறேன்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேர்தலில் ஈழவிடுதலைப் போராட்டத்தின் தொடர்ச்சியை எப்படி நகர்த்தலாம், எப்படியான நி லைப்பாட்டில் இனிவரப் போகும் அரசை வைத்துக் கொண்டு நன்மை பெறலாம் என்று ஆராயவேண்டும்.

**ராஜபக்சவினர் தீர்வை உருக்குலைத்தவர்கள்**

2015க்கு முன்னர் மிக மோசமான நிலையில் ஜனநாயகம் இருந்தது. 2009இல் போர் முடிவின் பின்னர் நேரடியாக அப்போதைய ஐ.நா. பொதுச் செயலர் பான்கிமூனுடன் செய்துகொண்ட கூட்டு அறிக்கையில் தீர்வைத் தெளிவாகச் சொல்லியிருக்கின்றார்.

பதின்மூன்றாம் திருத்தச் சட்டம் மட்டுமல்ல அதற்கும் மேலாகவும் சென்று தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்போம் என்று கூறியி ருந்தனர். ஆனால் அடிப்படைத் தீர்வைக்கூட உருக்குலைத்து விட்டார்கள்.

**தேசிய பாதுகாப்பு சிங்களவர்களுக்கு மட்டுமா?**

அனைவரும் தேசிய பாதுகாப்புப் பற்றி பேசுகிறார்கள். தேசிய பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும். அதில் மாற்றுக்கருத்துகள் இல்லை. ஆனால் தேசிய பாதுகாப்பு என்பது சிறுபான்மை இன மக்களின் மீதான அடக்குமுறையல்ல என்ற உண்மை விடயங்களை அனைவரும் புரிந்து



கொள்ள வேண்டும்.

சஹ்ரான் போன்றவர்களின் தாக்குதல் பின்னணி என்ன? உண்மையில் அது யாரால் நிகழ்த்தப்பட்டது? அதன் சூத்திரதாரி யார்? போன்ற கேள்விகளுக்கான பதிலை இந்த அரசு வெளிப்படுத்த முடியா மலுள்ளது. இந்த விடயத்தில் தேசிய பாதுகாப்பு கேள்விக்குறியாகியுள்ளது. ஞானசார தேரர் போன்ற தலைமைப் பிக்குகளால் தொடர்ச்சியாக தமிழ் மக்களுக்கு பிரச்சினை எழுந்த வண்ணமுள்ளது.

தேசிய பாதுகாப்பு என்பது சிங்கள மக்களுக்கு மட்டும்தானா?.

ஆட்சி மாற்றத்தைக் கொண்டுவந்து தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த விரும்பும் சிங்கள மக்கள், மீண்டும் இராணுவம் சார்பான ஆட்சிக்கு உட்படப்போகிறோமா அல்லது ஜனநாயக ரீதியாக நாங்கள் ஒரு ஆட்சியை ஏற்படுத்தி தமிழர் விடுதலையை முன்னகர்த்தப் போகின்றோமா? என்பது தமிழ் மக்களிடமுள்ள கேள்வி.

இந்த விடயத்தில் தமிழர்கள் நன்றாகச் சிந்தித்துச் செயற்படுவார்கள் என்று நம்பலாம்.

**முன்னணி மறைமுகமாக கோத்தாவுக்கு ஆதரவு**

கட்சிகளோ, தேர்தலில் இறங்கி நின்று தமிழர்களின் வாக்குகளைப் பிரிக்கநினைப்பவர்களோ, தேர்தலைப்புறக்கணிக்கச் சொல்லும் கஜேந்திரகுமார் தலைமையிலுள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரோ, தேர்தலைப் புறக்கணிப்பதன் ஊடாக நிச்சயமாக கோத்தபாயவின் ஆட்சியைக் கொண்டுவருவதற்கு வழி வகுக்கும்.

**சிவாஜிலிங்கத்தின் முடிவும் எதிரானதே**

சிவாஜிலிங்கம் தேர்தலில் போட்டியிட்டு தமிழ் மக்களின் வாக்குகளைப் பிரித்தால் அது தமிழ் மக்களுக்கு எதிரானதாகத்தான் அமையும்.

கிழக்கு மாகாணத்திலும் தமிழர் தரப்பினர் கடந்த காலங்களில் அநியாயங்களில் ஈடுபட்டவர்களின் பக்கத்தில் நின்று வாக்குகளைப் பிரித்துக் கொடுப்பதற்காகக் கங்கணம் கட்டிக்கொண்டு நிற்கி ன்றார்கள்.

யாழ்ப்பாணத்தில் தன்னிடமுள்ள அனைத்து வாக்குகளையும் வழங்குவதற்கு ஆயத்தமாக டக்ளஸ் தேவானந்தா இருக்கிறார்.

பல்கலைக்கழக மாணவர்கள் அனைத்துக் கட்சிகளையும் ஒருங்கமைத்து பொதுக் கொள்கையை உருவாக்க வேண்டும் என்ற அடிப்படையில் அனைத்துக் கட்சிகளுடனான பேச்சை ஒழுங்கு செய்திருந்தனர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் அதில் பங்குபற்றியிருந்தது.

பணிப்புறக்கணிப்புத் தான் ஒரே விடயம் என்ற அளவில்தான் அவர்களின் கருத்து இருந்துள்ளது.

அவர்களிடம் ஒன்றை நான் கேட்கின்றேன், நீங்கள் ஏற்கனவே எமது கட்சியின் தீர்மானம் புறக்கணிப்புத்தான் என்று தீர்மானித்துவிட்டால் நீங்கள் அங்கு செல்ல வேண்டிய தேவை என்ன? பல்கலைக்கழக மாணவர்கள் பொதுக் கொள்கையை உருவாக்கும் இடத்தில் எப்படி உங்களுக்கு இடம் கிடைத்தது? நீங்கள் அங்கு அனுமதிக்கப்பட்டிருக்கக் கூடாது - என்றார். (த-213)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீளிணக்கத்தை உருவாக்க இளையோருக்குச் செயலமர்வு



மன்னார், ஒக். 16
மீளிணக்கத்தை உருவாக்குவதற்கான அறிவுறுத்தல்கள், ஆலோசனைகள் வழங்கும் கலந்துரையாடல் மற்றும் செயலமர்வு நேற்று முற்பகல் நடைபெற்றது.
மன்னார் மாவட்ட கிராம அபிவிருத்தி நிறுவனத்தின் பொது மண்டபத்தில் இது நடைபெற்றது.
நிகழ்வில் மன்னார் மாவட்டத்தில் உள்ள ஐந்து பிரதேச செயலகங்களையும் உள்ளடக்கிய மும்மதங்களையும் சேர்ந்த இளையோர் கலந்து கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (த-56)

# மன்னாரில் கடும் மழை

### சில கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கின



*மன்னார்,ஒக்.16*
மன்னார் மாவட்டத்தில் தொடர்சியாகப் பெய்துவரும் கடும் மழை காரணமாக சில கிராமங்கள் மற்றும் தாழ் நிலப்பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கி யுள்ளன.

மன்னார் மாவட்டத்தில் கடந்த சில நாள்காளாகக் கடும் மழை பெய்து வரும் நிலையில் நேற்று செவ்வாய்க்கிழமை மாலை 2 மணியளவில் மழை வீழ்ச்சி இன்னமும் அதிகரித்தது.
இதனால் மன்னார்த் தீவுப் பகுதியில் உள்ள குளங்கள், கால்வாய்கள் மற்றும் நீரோடைகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ள. இதன் காரணமாக மேலதிக நீர் அனைத்தும் மக்கள் வசிக்கும் தாழ் நிலப்பகுதிகளுக்குள் சென்றுள்ளது. சில கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கியு ள்ளன. குறிப்பாக மன்னார் பிரதேச செயலர் பிரிவுக்கு ட்பட்ட சாந்திபுரம், ஜீவபுரம், ஜிம்றோன் நகர், எமில் நகர் உட்பட பல்வேறு கிராமங்கள் முழுவதும் வெள்ளம் சூழ்ந்து ள்ளது. தொடர்சியாக மழை பெய்து வருவதால் நானாட்டான், மாந்தை மேற்கு, முசலி மற்றும் மடுப் பிதேச செயலர் பிரிவுகளில் வயல் நிலங்கள் மற்றும் தோட்டச் செய்கை மேற்கொள் எப்படும் நிலங்களில் வெள்ளம் தேங்கியுள்ளது. அதே நேரத்தில் தொடர்சியாக மழை பெய்யுமானால் தாழ்வான பகுதிகளில் வசிக்கும் சில கிராம ங்களைச் சேர்ந்த மக்கள் இடம் பெயர வேண்டிய நிலை ஏற்படும் என்று எதிர்வு கூறப்பட்டுள்ளது. (க-56)

## கடற்றொழில் அபிவிருத்தி தொடர்பில் கலந்துரையாடல்



மருதங்கேணி,ஒக்.16
வடக்கு மாகாண கடற்றொழில் அபிவிருத்திக்கான மாகாண இணை முகாமைத்துவச் செயற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இடம் பெற்றது.
இந்த நிகழ்வு தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் யாழ்பாணத்தில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் முற்பகல் 10:30 மணியளவில் இடம்பெற்றது.
இதில் வரவேற்பு மற்றும் தலைமை உரைகளை தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்க வடக்கு, கிழக்கு இணைப்பாளர் அன்ரனி ஜேசுதாசன் நிகழ்தினார்.
தொடர்ந்து வடக்கு மாகாண கடற்றொழில் அபிவிருத்திக்கான இணை முகாமைத்துவ குழு தலைவராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பேராசிரியர் சூசை ஆனந்தன் ஏக மனதாக தெரிவு செய்யப்பட்டார்.
அதனைத் தொடர்ந்து வடக்கு மாகாணத்தில் காணப்படுகின்ற புலம் பெயர் மீன்பிடி பிரச்சினைகள் தொடர்பாக தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம் மேற்கொண்ட ஆய்வு தொடர்பாக யாழ்ப்பாண பல்கலைக்கழக பேராசிரியர் சூசை ஆந்தன் விளக்கமளித்தார்.
இதில் வடக்கு மாகாணத்தில் காணப்படுகின்ற சட்டவிரோத மீன்பிடி தொழில்களான ரோளர் மூலம் ஒளி பாய்ச்சி மீன் பிடித்தல், டைனமெற் வெடி மூலம் மீன்பிடித்தல், தடை செய்யப்பட்ட தங்கூசி வலை பாவித்தல், கடற்படையால் கரையோரங்களில் கடற்படை ஆக்கிரமித்த கரைவலை பாடுகள்.தென்னிலங்கை மீனவர்களின் வடமாகாண ஆக்ரமிப்புக்கள் உட்பட பல்வேறு விடயங்கள் இங்கு ஆரயப்பட்டன.
அடுத்த கட்ட நடவடிக்கைகள் எடுப்பது தொடர்பிலும் ஆராயப்பட்டது. இக் கலந்துரையாடலுக்கு யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களை சேர்ந்த கடற்றொழில் சங்கங்களின் சமாச தலைவர்கள், பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ஜ-160)



சாவகச்சேரி மகளிர் கல்லூரி சாரணர் படையில் இணைந்துள்ள மாணவிகளின் பெற்றோர்கள் கல்லூரி நிர்வாகத்தால் அண்மையில் மதிப்பளிக்கப்பட்டனர். தமது பிள்ளைகளை சாரணியத்தில் இணைக்கக் கோரிய 20 பெற்றோர்களே மதிக்கப்பட்டனர். (ஐ9)

## மழைக்கு மத்தியிலும் ஊழியர்கள் துப்புரவில்



மன்னார், ஒக். 16
மன்னார் நானாட்டான் கடை வீதியின் அருகிலுள்ள முதன்மையான குடிதண்ணீர்க் கிணற்றை, மழைக்கு மத்தியிலும் இறைத்துத் துப்புரவு செய்வதில் நானாட்டான் பிரதேச சபை ஊழியர்கள் நேற்று ஈடுபட்டிருந்தனர்.
குறித்த கிணற்றில் பறவைகள் இறந்து கிடந்தன என்று பொதுமக்கள் பிரதேச சபைக்கு முறையிட்டனர்.
தண்ணீர் அத்தியாவசிய தேவை என்பதால் அந்தக் கிணற்றை இறைத்துத் துப்புரவு செய்யும் பணியில் ஊழியர்கள் ஈடுபட்டிருந்தனர்.
கடும் மழைக்கு மத்தியிலும் துப்புரவுப் பணியில் ஊழியர்கள் ஈடுபட்டிருந்தனர். (த-213)



## போதைக்கு எதிராக விழிப்புணர்வு ஊர்வலம்

சாவகச்சேரி, ஒக்.16
போதைப் பொருளுக்கு எதிராக விழிப்புணர்வுச் செயற்றிட்டம் தென்மராட்சிக் கலைமன்றக் கலாசார மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.
தென்மராட்சிப் பிரதேச சமுர்த்தித் திணைக்கள சாவகச்சேரி பிரிவின் ஏற்பாட்டில் சமுர்த்திப் பயனாளிகளிடையே விழிப்புணர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.
பிரதேச சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் இ.அன்ரனி தலைமையில், சமுர்த்திப் பயனாளிகளுக்குக் கருத்தமர்வு நடத்தப்பட்டது. கியுடெக் நிறுவன உள நல சீராளர் எஸ்.யோசப் பாலா விளக்கக்குறிப்புகளுடன் கருத்துரைகளை வழங்கினார். கருத்தமர்வு ஆரம்பிப்பதற்கு முன்னர் சாவகச்சேரி சிவன் கோவிலிலிருந்து போதைக்கு எதிரான விழிப்புணர்வு ஊர்வலம் நடத்தப்பட்டது. (க-9)

## 20 குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள்

கிளிநொச்சி,ஒக்.16
தெரிவு செய்யப்பட்ட 20 குடும்பங்களுக்கு தலா 30 ஆயிரம் ரூபா பெறுமதியான வாழ்வாதார உதவிகள் வழங்கி வைக்கப்பட்டன.
தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தால் பூநகரியில் அமைந்துள்ள அலுவலகத்தில் வைத்து இந்த உதவிகள் நேற்றுமுன்தினம் வழங்கி வைக்கப்பட்டன.
பசு ,ஆடு மற்றும் கோழி வளர்ப்புக்காகவும், அதே வேளை மீன்பிடி உள்ளிட்ட வாழ்வாதார முன்னேற்றத்துக்கவும் குறித்த வாழ்வாதார உதவிகள் வழங்கி வைக்கப்பட்டன. (ஜ-6)



## ஆன்மிக சொற்பொழிவு

யாழ்ப்பாம்,ஒக்.16
தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவக்கலை பண்பாட்டு பேரவை வாரம் தோறும் நடத்தி வரும் ஆன்மிக நிகழ்வுகளில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கந்தபுரான தொடர்ச்சொற்பொழிவு சந்நிதியான் ஆச்சிரமத்தில் இடம்பெறவுள்ளது.
சொற்பொழிவை வட்டுகோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மூத்த விரிவுரையாளர் அ.குமாரவேல் நிகழ்த்துவார். (க-173)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்கு பரவும் சூழல் 50 பேருக்கு வழக்கு

வவுனியா, ஒக்.16

வவுனியா நகருக்குட்பட்ட வர்த்தக நிலையங்கள், விடுதிகள், தனியார் மருத்துவமனைகள் போன்றவற்றில் டெங்கு நுளம்பு பரவும் வகையில் சூழலை வைத்திருந்த 50க்கும் மேற்பட்டவர்களுக்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. நேற்று 8 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதுஎன்று வவுனியா நகரசபை பொது சுகாதாரப் பரிசோதகர் கிரிதரன் தெரிவித்தார்.





வவுனியா நகருக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு நோய்த் தாக்கம் அதிகரித்துக் காணப்படுகின்றது.

டெங்கு நுளம்பு பெருக்கமும் அதிகரித்து காணப்படுகின்றது. பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், சுகாதாரத் தொண்டர்கள் இணைந்து வர்த்தக நிலையங்கள், வீடுகள் உட்பட பல்வேறு பகுதிகளில் பரிசோதனையில் ஈடுபட்டுவருகின்றனர்.

நேற்று 8பேருக்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

அவர்களுக்கு நீதிமன்று 25 ஆயிரம் ரூபாவரை தண்டம் விதித்தது.

நீதிமன்றுக்குச் சமூகமளிக்காதவர்களுக்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. சில வர்த்தக நிலையங்களில் துப்புரவுப் பணிகளை மேற்கொள்ள கால அவகாசம் வழங்கி அவற்றின் நடத்துநர்களுக்கு பிணை வழங்கபட்டுள்ளது.

தண்ணீர் தேங்கும் இடங்களை இனங்கண்டு அவற்றைச் சீராக வைத்திருந்து டெங்கு பெருகாதவாறு ஒத்துழைப்பு வழங்குமாறு பொது சுகாதாரப் பரிசோதகர் கேட்டுள்ளார். (த-110)

## கல்விக் கண்காட்சியும் தொழிற் சந்தையும்

யாழ்ப்பாணம் தொழில்நுட்பவியல் கல்லூரியின் தொழிற் கல்விக் கண்காட்சியும், தொழிற் சந்தையும் நாளை மறுதினம் 18 மற்றும் 19 ஆம் திகதிகளில் கல்லூரி மண்டபதில் நடைபெறவுள்ளன.

பாடசாலை மாணவர்கள் பாடசாலைக் கல்வியை நிறைவு செய்த இளையோர் கண்காட்சியைப் பார்வையிடுவதுடன் கீழ்க்காணும் நிறுவனங்களுடன் தொழில்கள் தொடர்பான விவரங்களைப் பெற்றுக் கொள்ள முடியுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

தொழில்நுட்பவியல் கல்லூரி, பல்கலைக்கழக கல்லூரி,தொழிற்பயிற்சி அதிகார சபை, தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை, இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழக பிராந்திய நிலையம், இளைஞர் சேவைகள் மற்றும் ஜேர்மன் தொழில் பயிற்சி நிலையம் ஏனைய அரச உயர்கல்விநிறுவனங்கள் ஆகியவை இணைந்து இந்த நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளன. (ஐ-9)

## நாவந்துறையில் 5 குடியிருப்புக்களில் நுளம்புக் குடம்பிகள்

யாழ். மாநகர சபைக்கு உட்பட்ட பகுதிகளில்கடந்த வாரம்முன்னெடுக்கப்பட்ட டெங்குப் பரிசோதனை நடவடிக்கையின் போது 5 குடியிருப்புக்களில் நுளம்புக் குடம்பிகள் இருந்தமை அடையாளம் காணப்பட்டுள்ளன.

நாவாந்துறையில் ஜே 85 கிராம அலுவலர் பிரிவில் இடம்பெற்ற டெங்கு கட்டுப்பாட்டுப் பரிசோதனை நடவடிக்கையின் போது, 5 வரையிலான குடியிருப்புச் சுற்றாடல்களில் நுளம்புக் குடம்பிகள் இருந்தமை அடையாளம் காணப்பட்டது.

குறித்த குடியிருப்பு உரிமையாளர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

அத்துடன் போதிய சுகாதார வசதிகள் இன்றி நுளம்பு பெருக்கத்துக்கு ஏதுவாகக் காணப்பட்ட குடியிருப்புக்களின் உரிமையாளர்களுக்கு எச்சரிக்கைவிடுக்கப்பட்டதுடன், உடனடியாக சுற்றாடல்களைத் துப்புரவு செய்யுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (க-17)

## சிகிச்சைக்குச் சென்ற மூதாட்டியின் கைப் பை திருட்டு

தங்க நகைகள் பணம் அலைபேசி ஆகியவை வைத்திருந்த கைப்பையை மருத்துவரிடம் சிகிச்சை பெறுவதற்காக சுவர் ஓரம் வைத்துவிட்டு சென்ற மூதாட்டியின் கைப்பை திருட்டுப் போயுள்ளது. இந்தச் சம்பவம் சாவகச்சேரி மருத்துவமனை கிளினிக் அறையில்நேற்றுஇடம்பெற்றது.

மருத்துவமனையில்பிரதி செவ்வாய்க்கிழமைகளில் பொது மருத்துவ சிகிச்சை இடம்பெற்றுவருகிறது. நேற்றைய கிளினிக்கில் கலந்து கொள்ள நுணாவிலிருந்துவருகை தந்த மூதாட்டி வரிசையில் வந்து மருத்துவரிடம் பரிசோதிப்பதற்காக அதற்கான அறையில் காத்திருந்தார்.

மூதாட்டியை மருத்துவர் அழைத்தபோதுகையில் வைத்திருந்த கைப்பையை அங்குள்ள சுவர் ஓரமாக வைத்துவிட்டு மருத்துவரிடம்சென்றுள்ளார். சிகிச்சை முடிந்து வெளியே வந்து பார்த்த போது கைப்பையைக் காணவில்லை.அனைத்து இடங்களிலும்தேடிய பின்னர் இது தொடர்பாக மருத்துவமனை நிர்வாகத்திடம் முறைப்பாடு செய்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

## நிறுவுநர் நாளும் பரிசளிப்பும்

யாழ்ப்பாணம் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் 90 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு நாளை வியாழக்கிழமை தொடக்கம் 19 ஆம் திகதி வரை நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

முதல்நாள்நிகழ்வுநாளை காலை 9 மணிக்கு அதிபர். வி. நந்தீஸ்வரன் தலைமையில் ஆரம்பமாகவுள்ளது.இரண்டாம் நாள் நிகழ்வு நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை நிறுவுனர் நாளும்,பரிசளிப்பு நிகழ்வும் இடம்பெறவுள்ளன. (ஐ-63)

### சாரதிப் பத்திரம் இல்லாதவருக்கு

# உந்துருளி வழங்கியவர் செலுத்தினார் ரூ.25,000

சாவகச்சேரி, ஒக்.16

போக்குவரத்து விதிமுறைகளை மீறிய சாரதிகளுக்கும், சாரதி உரிமப் பத்திரம் இல்லாதவருக்கு உந்துருளியை செலுத்தக் கொடுத்த நபருக்கு சாவகச்சேரி நீதிமன்று 25 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது.

பொலிஸார் இது உட்பட பல வழக்குகளைத் தாக்கல் செய்திருந்தனர். அவை விசாரணைக்கு வந்தபோது குற்றச்சாட்டுக்களைச் சந்தேகநபர்கள் ஏற்றுக்கொண்டனர். அதனையடுத்து தண்டங்கள் விதிக்கப்பட்டன.

போதையில் சாரதி உரிமப் பத்திரம், காப்புறுதிப் பத்திரம் ஆகியனஇன்றி வாகனம் செலுத்திய நீர்வேலி அச்செழுவைச் சேர்ந்த சாரதிக்கு 52 ஆயிரத்து 500 ரூபாவும், சாரதி உரிமப் பத்திரம் புகைப் பரிசோதனை சான்றிதழ் மற்றும் வாகன வரிப் பத்திரம் ஆகியன இன்றி வாகனம் செலுத்திய வரணி இயற்றாலையைச் சேர்ந்த சாரதிக்கு 32ஆயிரத்து 500 ரூபாவும் தண்டம் விதிக்கப்பட்டது. (த-9)

## பரிசளிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக்.16

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு நிகழ்வு நாளை பிற்பகல் 4 மணிக்கு கல்லூரியின் ஒட்லி மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

கல்லூரியின் அதிபர் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினரர்களாக கண்டி திரித்துவக் கல்லூரியின் அதிபர் அன்ரூ போவ்லர் வோட்டும், அவரின் துணைவியர் விவியன்போவ்லர் வோட்டும் கலந்துகொள்வர். (க-104)

### புலம்பெயர் நன்கொடையாளர் நிதியில்

# மறு சீரமைக்கப்படும் தும்பளை தெருமூடி மடம்

யாழ்ப்பாணம், ஒக்.16

பருத்தித்துறை நகரத்தில் தும்பளை வீதியில் அமைந்துள்ள தமிழர்களின் தொன்மை மரபை பிரதிபலிக்கும் தெருமூடிமடம் யாழ்ப்பாணம் தொல்லியல் திணைக்களத்தால் சீரமைக்கப்பட்டு வருகிறது.

இதனால் பருத்தித்துறை தும்பளை வீதியில் தெருமுடிமடம் ஊடான சகல போக்குவரத்தும் தடை செய்யப்பட்டுள்ளது.

தும்பளைக்குப் பயணிப்போர் தும்பளை வீதியில் இரண்டாம் குறுக்குத்தெரு, மூன்றாம் சந்திகளுக்குட்பட்ட வீதியை பயன்படுத்த வேண்டாம் என்று யாழ் தொல்லியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

அதற்குப் பதிலாக மாற்று வீதிகளைப் பயன்படுத்துமாறு கோரப்பட்டுள்ளது.

கடந்த 4 மாதங்களுக்கு முன்பு தெருமூடிமடத்துக்கு ஊடாக பயணித்த கனரக வாகனங்கள் இருதடவைகள் மடத்தின் கூரைப்பகுதி [illegible] தெருமூடி மடம் சேதமடைந்திருந்தது.

சேதமடைந்த தெருமூடி மடத்தைச் சீரமைக்க தம்மிடம் போதிய நிதி இல்லை என்று தொல்லியல் திணைக்களம் தெரிவித்திருந்தது.

இந்த நிலையில் பருத்தித்துறை சமூக அமைப்புக்களின் முயற்சியால், சுவிஸ் - பருத்தித்துறை ஒன்றியம் சீரமைப்புக்கான நிதியை வழங்கியதுடன், சேதமடைந்த தெருமூடி மடம் முன்னர் இருந்தது போன்று வடிவமைக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியிருந்தது.

அதற்கான பணிகள் தற்போது துரிதகதியில் நடைபெற்று வருகின்றன. (க-173)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோத்தா, மகிந்தவுடன் சுமந்திரன் நடத்தியிருந்த பேச்சுக்கள் தோல்வி

## ஆங்கில ஊடகம் தகவல்

கொழும்பு, ஒக். 16

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்சவுக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரனுக்கும் இடையில் கொழும்பில் இடம்பெற்ற பேச்சுக்கள் தோல்வியில் முடிந்துள்ளதாக கொழும்பு ஆங்கில நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தச் சந்திப்பின் போது, வடக்கு, கிழக்கு மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வை முன்வைக்குமாறு தமிழ்தேசிய கூட்டமைப்பால் கோத்தபாய ராஜபக்சவிடம் கோரப்பட்டிருந்தது.

எனினும், இந்தப் பேச்சுக்களில் பங்கேற்றிருந்த மகிந்த ராஜபக்ச, இடையில் தலையிட்டு, தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை விட தெற்கிலுள்ள மக்கள் பெரிய பிரச்சினைகளை எதிர்கொள்கிறார்கள் என்று தெரிவித்துள்ளார்.

அத்துடன் வடக்கு, கிழக்கிலுள்ள மக்கள் எதிர்கொள்ளும் பெரும்பாலான பிரச்சினைகள், தெற்கிலுள்ள மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை ஒத்தவைதான் என்றும், மகிந்த ராஜபக்சவும் கோத்தபாய ராஜபக்சவும் தெரிவித்துள்ளனர்.

பேச்சுக்களின் முடிவில், தமது எதிர்கால அரசில், வடக்கு, கிழக்கில் உள்ள தமிழர்களுக்குத் தீர்வுகளை வழங்க முடியும் என்று நம்புவதாக மகிந்த ராஜபக்சவும் கோத்தபாய ராஜபக்சவும், கூறியிருந்தனர்.

இந்தப் பேச்சு தொடர்பான அறிக்கையை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனிடம் முன்வைத்த சுமந்திரன், இந்தப் பேச்சுக்கள் குறித்து அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

இதையடுத்து, கோத்தபாய ராஜபக்சவுடன் வடக்கு, கிழக்குப் பிரச்சினைக்கான தீர்வுகள் குறித்து மேலும் விவாதிப்பதில் எந்த அர்த்தமும் இல்லை என்றும், ஏனெனில் ராஜபக்சவினரிடம் இருந்து தமிழ் மக்களால் ஒருபோதும் தமது உரிமைகளை வெல்லவோ அல்லது எந்த உதவியையும் பெறவோ முடியாது என்றும் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார் என்றும் அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது. இது தொடர்பில் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரனின் கருத்தை அறிய முற்பட்ட போதும் அவர் அலைபேசி அழைப்புக்கு பதிலளிக்கவில்லை. (ஒ,5)

# சுதந்திரக் கட்சியை மைத்திரி காட்டிக் கொடுத்துவிட்டார்

## சந்திரிக்கா குற்றச்சாட்டு



கொழும்பு, ஒக். 16

தனிப்பட்ட நலன்களுக்காக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, சிறிலங்கா சுதந்திரக் கட்சியைக் காட்டிக் கொடுத்து விட்டார் என்று கட்சியின் முன்னாள் தலைவியான சந்திரிகா குமாரதுங்க குற்றம்சாட்டியுள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆதரவாளர்களுக்கு அனுப்பியுள்ள பகிரங்கக் கடிதத்திலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் அதில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நாட்டின் அரச தலைவர் உள்ளிட்ட சந்தர்ப்பவாத தலைவர்கள், கட்சியின் 95 வீதமான அமைப்பாளர்களின் கருத்துக்களை நிராகரித்து, தனிப்பட்ட இலாபத்துக்காக சதிகாரர்களுடன் ஓர் உடன்பாட்டுக்குச் சென்றுள்ளனர்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி. ஜனநாயகத்தை மதித்து ஆதரித்த ஒரு கட்சியாக இருந்து வருகிறது. எங்கள் கட்சி கொலைகாரர்கள், மோசடி செய்பவர்கள் மற்றும் ஊழல்வாதிகளுக்கு இடமளிக்கவில்லை. மீண்டும் அநீதி ஆட்சி செய்வதற்குச் சிறிலங்கா சுதந்திரக் கட்சி அனுமதிக்காது.

அரச தலைவர் தேர்தலில் எமது கட்சி வேட்பாளர் ஒருவரை முன்னிறுத்தாமல் போனது வரலாற்றில் இதுவே முதல்முறை.

நாங்கள் அரச தலைவர்களை, தலைமை அமைச்சர்களை உருவாக்கியிருக்கிறோம். சுதந்திரக் கட்சிக்கு நேர்ந்த கதியைப் பார்த்து என் இதயம் அழுகிறது.

இத்தகைய உடன்பாடுகள், சிறிலங்கா சுதந்திரக் கட்சியை அழிக்க வழிவகுக்கும். சுதந்திரக் கட்சி ஆதரவாளர்கள் அனைவரும், எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் அதிக கவனத்துடன் இருக்க வேண்டும். இந்தக் கட்சியை அழிக்க எடுக்கும் முயற்சிகளுக்கு எதிராக நாம் எழ வேண்டும்.

கட்சியையும் அதன் கொள்கைகளையும் பாதுகாப்பதற்கான போராட்டத்தைத் தொடங்கியவர்களுக்கு எனது உறுதியான ஆதரவை வழங்குகிறேன்- என்றும் அவர் கூறியுள்ளார். (ஒ,5)

# ஆற்று மணல் அகழ்வுக்கு எதிராக மக்கள் கவனவீர்ப்பு



செங்கலடி, ஒக். 16

ஆற்று மணல் அகழ்வதற்கு அனுமதி வழங்கக்கூடாது என்று வலியுறுத்தி, மட்டக்களப்பு மயிலவெட்டுவானில், நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டம் நடைபெற்றது. மயிலவெட்டுவான் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் மயிலவெட்டுவான் உப்போடை வீதியில் நடைபெற்ற கவனவீர்ப்பில், பாடசாலை மாணவர்கள், கிராம மக்கள் கலந்து கொண்டனர்.

அங்கு ஆற்று மணல் அகழ்வதற்கு வெளிமாவட்டத்தைச் சேர்ந்த பெரும்பான்மை இனத்தவர் 10 பேர் உட்பட 25 பேருக்கு அனுமதி வழங்கவதற்கான பெயர் விவரங்களை நீர்ப்பாசனத் திணைக்கள மட்டக்களப்பு மாவட்டப் பணிப்பாளர் எந்திரி எஸ்.எம். வீ.எம்.அஸார் கடந்த 2ஆம் திகதி புவிச்சரிதவியல் அளவை, சுரங்கங்கள் பணியக மட்டக்களப்பு மாவட்டப் பொறியியலாளருக்கு அனுப்பிவைத்துள்ளார்.

விவசாய, நீர்ப்பாசன மற்றும் கிராமிய பொருளாதார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் எம்.எஸ். எஸ்.அமீர்அலியின் பரிந்துரையின் அடிப்படையில் 8 பேருக்குத் தலா 5ஆயிரம் கியூப் வீதமும், தமிழ் ஐக்கிய சுதந்திர முன்னணி தலைவர் வி.முரளிதரனின் பரிந்துரையின் அடிப்படையில் 7 பேருக்கு 20ஆயிரம் கியூப், மற்றும் அரசதலைவர் செயலக திட்டப் பணிப்பாளரின் பரிந்துரையின் அடிப்படையில் 10 பேருக்கு 37ஆயிரத்து 500 கியூப் என்று த 25 பேருக்கும் 97ஆயிரத்து 500 கியூப் ஆற்று மணல் அகழ்வதற்கு அனுமதி வழங்க பரிந்துரை செய்யப்பட்டுள்ளது என்று மக்கள் தெரிவிக்கின்றனர்.

“மயிலவெட்டுவான் கிராமம் ஒவ்வொரு வருடமும் மார்கழி வெள்ளத்தால் பாதிக்கப்படுகின்றது. கிராம மக்கள் மேட்டுப் பகுதிகளுக்கு இடம் பெயர்வார்கள். வெள்ளத்தில் இதுவரை இரண்டு வீடுகள் அடித்துச் செல்லப்பட்டுள்ளன. ஆற்றில் மணல் அகழ்வதால் மண் அரிப்பு ஏற்பட்டு கிராமம் ஆற்றுக்குள் போகும் நிலை ஏற்பட்டுள்ளது. மாரி காலத்தில் ஆற்றில் நீர்மட்டம் அதிகரிக்கும் போது அருகிலுள்ள மயானத்தில் மணல் அகழப்படுகிறது” என்று மக்கள் தெரிவித்தனர். (நு)

# குருப்பெயர்ச்சி சிறப்பு வழிபாடுகள்

கொழும்பு,ஒக்.16

குருப்பெயர்ச்சியை முன்னிட்டு கொழும்பு கொம்பனித்தெரு அருள்மிகு சிவசுப்பிரமணிய ஆலயத்தில் எதிர்வரும் 28ஆம் திகதி இரவு சிறப்பு வழிபாடுகள் இடம்பெறவுள்ளன. இரவு 9 மணியளவில் தட்ஷணாமூர்த்திக்கும், நவக்கிரகங்களுக்கு சிறப்பு திரவிய ஹோமம் அபிசேகம், பூசை என்பன இடம்பெறும் என்று ஆலயத்தினர் அறிவித்துள்ளனர். (ஐ)

# பொலிஸ் பாதுகாப்புக்கு மத்தியில் வாக்குச்சீட்டுகள் அச்சிடப்படுகின்றன

## பெயர்களில் தவறுகளுள்ளன என்றும் தெரிவிப்பு

பதுளை, ஒக். 16

அரசதலைவர் தேர்தலுக்காக வாக்குச்சீட்டு அச்சிடும் நடவடிக்கை கடும் பொலிஸ் பாதுகாப்புக்கு மத்தியில் அரச அச்சகத் திணைக்களத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

சுமார் ஒரு கோடியே ஐம்பது லட்சத்துக்கும் அதிகமான வாக்குச் சீட்டுக்கள் அச்சிடப்படுகின்றன என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவிக்கின்றது.

இலங்கையில் இதுவரை நடைபெற்ற 7 அரசதலைவர் தேர்தல்களிலும் இல்லாத அளவுக்கு இந்த முறை நடைபெறவுள்ள அரசதலைவர் தேர்தலில் அதிக நீளமான வாக்குச்சீட்டுக்கள் அச்சிடப்படவுள்ளன.

குறித்த வாக்குச்சீட்டுக்கள் 2 அடி 26 அங்கும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவிக்கின்றது.

அச்சிடப்படுகின்ற வாக்குச் சீட்டின் மாதிரி வடிவம் தற்போது வெளியாகியுள்ள நிலையில், அதில் பிழைகள் காணப்படுவது தொடர்பில் கண்டறியப்பட்டது.

வாக்குச்சீட்டில் தமிழ் பிழைகள் காணப்படுகின்றமையை அவதானிக்க முடிகின்றது.

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரசதலைவர் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்சவின் பெயர் தமிழ் மொழியில் தவறுதலாக அச்சிடப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பில் முன்னாள் அரசதலைவர் மகிந்த ராஜபக்சவின் கவனத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டது. அவர் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரியவின் கவனத்துக்குக் கொண்டுசெல்வார் என்று தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறே பியசிறி விஜேநாயக்க என அச்சிடப்படுவதற்குப் பதிலாக பியசிறி நிஜேநாயக்க என அச்சிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (நு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வில்லுப்பாட்டில் முதலிடம் மாணவர்கள் மதிப்பளிப்பு



2019 ஆம் ஆண்டு தேசிய மட்ட தமிழ்த்தின வில்லுப்பாட்டுப் போட்டியில் முதலிடம் பெற்ற வற்றாப்பளை மகா வித்தியாலய மாணவர்கள் நேற்று முன்தினம் மதிப்பளிக்கப்பட்டனர். நிகழ்வில் வில்லிசைப் போட்டியில் தேசிய மட்டத்தில் சாதனைபடைத்த மாணவர்கள், அதிபர், ஆசிரியர்களின் படங்கள் தாங்கிய பதாகையை வடமாகாண ஆளுனர் ஒருங்கிணைப்புச் செயலாளர் கே.செவ்வேள் திரை நீக்கம் செய்து வைத்தார். தொடர்ந்து தேசிய மட்டத்தில் வெற்றிபெற்ற மாணவர்களும், வழிநடத்திய ஆசிரியர்களும் மதிப்பளிக்கப்பட்டுடனர். அதேவேளை வில்லிசை மாணவர்களை நெறியாள்கை செய்த ஆசிரியரான சாந்தகுமாரி கமலகாந்தன் முல்லை இசைப்பேரொழி எனும் விருது வழங்கி மதிப்பளிக்கப்பட்டார். வற்றாப்பளை மங்கலேஸ்வரா விளையாட்டு க்கழகத்தின் ஏற்பாட்டில், கழக ஆலோசகர் அ.அரசண்ணா தலைமையில் நிகழ்வு நடைபெற்றது.

நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாகக் கரைதுறைப்பற்று கோட்டக்கல்வி அதிகாரி ரி.ஸ்ரீபுஸ்பநாதன், ஒய்வுநிலை அதிபரும் வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய பரிபாலனசபைத் தலைவருமான எம்.குகதாசன் ஆகியோர் கலந்து கொண்டனர். (க-ரி3)

# கைப்பொம்மையாக இருக்கவே மாட்டேன்

## சஜித் திட்டவட்டம்

கொழும்பு, ஒக். 16

ஒருபோதும் கைப்பொம்மை அரச தலைவராக நான் இருக்கப்போவதில்லை என்று புதிய ஜனநாயக முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

தெரணியகல நகரில் நேற்று செவ்வாய்கிழமை இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வேறொருவரின் அதிகாரத்தின் கீழ், பிறிதொருவரின் ஆதிக்கத்துக்கு உட்பட்டு செயற்படக்கூடிய கைப்பொம்மை அரச தலைவர் வேட்பாளர் நான் இல்லை.

இந்த நாட்டின் அரச தலைவர் மக்களால் தெரிவு செய்யப்படும் போது என்னைக் கட்டுப்படுத்தக்கூடிய, என்மீது ஆதிக்கம் செலுத்தக்கூடிய வல்லமை சாதாரண மக்களாகிய உங்களுக்கு மாத்திரமே இருக்கின்றது. நாட்டை ஆட்சி செய்யும் குடும்பத்தின் பிள்ளைகளுக்கு ஒரு சட்டமும், சாதாரண மக்களின் பிள்ளைகளுக்கு வேறொரு சட்டமும் இருக்க முடியாது.

அவ்வாறானதொரு யுகம் கடந்த காலங்களில் காணப்பட்டது. ஆனால் என்னை நீங்கள் இந்த நாட்டின் அரச தலைவராக்கும் போது நாட்டின் ஆட்சியாளராவது நீங்களேயன்றி வேறெவரும் அல்ல என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள் - என்றார். (ஒ,5)

## 5 துப்பாக்கிகளுடன் பெண் கைதானார்

கொழும்பு, ஒக். 16

ஐந்து துப்பாக்கிகள் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் பெண் ஒருவரை நேற்றுக் கைதுசெய்துள்ளோம் என்று ரிதிமாலியத்த பொலிஸார் தெரிவித்தனர்.

பதுளைப் பகுதியின் ரிதிமாலியத்த பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ரொசான் எஸ். பந்துசேனவுக்குக் கிடைக்கப்பெற்ற தகவலொன்றையடுத்து ரிதிமாலியத்த பொலிஸார் ரிதிமாலியத்தையை அண்மித்த பகுதி வீடொன்றைச் சுற்றிவளைத்துத் தேடுதல் நடத்தியபோது படுக்கை அறை கட்டிலொன்றின் கீழ் அவை காணப்பட்டன. பசளைப் பையொன்றால் பொதியிட்ட நிலையில் அது மீட்கப்பட்டது. பெண் கைது செய்யப்பட்டார்.

குறித்த துப்பாக்கிகள் அனைத்துமே சட்டவிரோதமா னவை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட பெண், விசாரணையின் பின்னர், மகியங்கனை நீதிவான் மன்றில் முற்படுத்தப்படுவார் என்று பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ரொசான் எஸ்.பந்துசேன கூறினார். (த)

## தேக்கம் குற்றிகள் கடத்தல்; சந்தேகத்தில் சாரதி கைது

கிளிநொச்சி, ஒக்.16

மணலுக்குள் மறைத்து தேக்கம் குற்றிகள் கடத்திய குற்றச்சாட்டில் டிப்பர் வாகனச் சாரதி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடத்திச் செல்லப்பட்ட 21 தேக்கம் குற்றிகளும், டிப்பர் ரக வாகனமும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டது. கிளிநொச்சி பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட எழுதுமட்டுவாள் பொலிஸ் சோதனை சாவடியில் வைத்து கடந்த இரு நாள்களுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது மேற்படி கடத்தல் கண்டுபிடிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சந்தேக நபருக்கு பொலிஸ் பிணை வழங்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-6)



## நடமாடும் சேவையில் நூல்கள் காட்சிப்படுத்தல்

சாவகச்சேரி, ஒக்.16

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு சாவகச்சேரி பிரதேச சபையின் சரசாலைப் பொது நூலகத்தால் நடமாடும் சேவையூடாக நூல்கள் காட்சிப்படுத்தப்பட்டு வருகின்றன. நூலக எல்லைக்குட்பட்ட முன்பள்ளிகளில் சிறுவர்களுக்கான நூல்கள் காட்சிப்படுத்தப்பட்டு வருகின்றன. அதனடிப்படையில் மட்டுவில் மாதுமை முன்பள்ளியில் சிறுவர் நூல்கள் நேற்று முன்தினம் காட்சிப்படுத்தப்பட்டன. அத்துடன் சிறார்களுக்கான மகிழ்வூட்டும் நிகழ்வுகளும் நடத்தப்பட்டன. (க -9)

## மாகாணமட்ட மதிப்பளிப்பு



யாழ்ப்பாணம், ஒக். 16

இலங்கை பாதுகாப்புச் சபையின் மாகாண மட்ட மதிப்பளிப்பு நிகழ்வுகள் நேற்று யாழ்ப்பாணத்தில் பெருமெடுப்பில் இடம்பெற்றன.

இந்த நிகழ்வு இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் யாழ்ப்பாண மாவட்ட சமூகப் பாதுகாப்புத் திணைக்களத்தின் ஏற்பாட்டில், யாழ்ப்பாண மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

சமூக பாதுகாப்புச் சபையின் யாழ்ப்பாண மாவட்ட இணைப்பாளர் எஸ். பிரதீபன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக இலங்கை பாதுகாப்புச் சபையின் தலைவர் கலந்துகொண்டார். அவருடன் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஒவ்வொரு மாவட்டத்தின் செயலர்களும் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் கடந்த ஆண்டு இடம்பெற்ற க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் வடக்கு மாகாணத்தில் அதி கூடிய புள்ளி களைப் பெற்ற மாணவர்களுக்கு 10 ஆயிரம் ரூபா புலமைப்பரிசில்களும், பாடசாலை உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

வடக்கு மாகாணத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 12 ஓய்வுதியப் பயனாளிகளுக்கு ஓய்வூதிய கொடுப்பனவுகளும் வழங்கி வைக்கப்பட்டன.

அத்துடன் இலங்கைப் பாதுகாப்புச் சபையால் நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டங்களுக்கு செயல்வடிவம் கொடுத்த, மாவட்டச் செயலர்கள், பிரதேச செயலர்கள் மதிப்பளிக்கப்பட்டனர். அவர்களுக்கான நினைவுச் சின்னங்களும் வழங்கி வைக்கப்பட்டன. (ஐ-105,106)

## குழப்பம் விளைவித்தரென நான்கு பேர் கைதாகினர்

வவுனியா, ஒக். 16

மருத்துவமனையில் குழுப்பம் விளைவித்த னரென்ற குற்றச்சாட்டில் அங்கு நின்ற இருவரும் மருத்துவமனைக்கு வெளியே இருவரும் நேற்றுமுன்தினமிரவு கைது செய்யப்பட்டுள்ளனர் என்று புளியங்குளம் பொலிஸார் தெரிவித்தனர். வுவுனியாவில் பொது இடமொன்றில் இளைஞர்கள் தங்களுக்குள் முரண்ப ட்டுள்ளனர் என்றும் ஒருவர் போத்தலால் தனது கையை தாக்கி காயப்படுத்தினார் என்றும் அவரை ஏனைய இளைஞர்கள் புளியங்குளம் பிரதேச மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்த்துள்ளனர்.

மருத்துவமனையில் சிகிச்சை மேற்கொண்ட மருத்துவருக்கும் குறித்த இளைஞர்களுக்குமிடையில் முரண்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் புளியங்குளம் பொலிஸ் நிலையத்துக்கு முறை ப்பாடு செய்யப்பட்டது. அங்குசென்ற பொலிஸார் அங்கு நின்ற இளைஞர்கள் இருவரைக் கைதுசெய்தனர்.

அதனுடன் தொடர்புடையவர்களென மேலும் இருவர் கைதுசெய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கைதுசெய்யப்பட்டவர்களைப் பார்ப்பதற்காக இளைஞர்களின் உறவினர்கள் புளியங்குளம்பொலிஸ்நிலையத்துக்குச் சென்றனர் என்றும் பொ லிஸார் தம்மை உள்ளே செல்ல அனுமதிக்கவில்லை என்றும், தமது பிள்ளைகளைப் பொலிஸார் கடுமையாகத் தாக்கினர் என்றும் இளைஞர்களின் உறவினர்கள் குற்றஞ்சாட்டினர்.

கைதுசெய்யபட்டவர்கள் மது போதையில் இருந்தனர் என்று பொலிஸார் கூறுகின்றனர். விசாரணையின் பின்னர் மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த-110)



## பாதுகாப்பற்ற தொடருந்துக் கடவைக்கு பாதுகாப்பு வேலி

வவுனியா, ஓக்.16

வவுனியா ஓமந்தை, பனிக்கநீரவியடி பகுதியில் அமைந்துள்ள பாதுகாப்பற்ற தொடருந்துக் கடவைக்கு பாதுகாப்பு வேலி அமைத்து திறந்து வைக்கப்பட்டுள்ளது.

வவுனியா பனிக்கநீராவியடி பகுதியிலிருந்து பெரியமடு கிராமத்துக்கு செல்லும் முதன்மை வீதியிலேயே குறித்த பாதுகாப்பு வேலி அமைக்கப்பட்டது. (ஐ)

## கார்த்திகை உற்சவம்

யாழ்ப்பாணம், ஒக்.16

நீர்வேலி கந்தசுவாமி ஆலயத்தில் திருக்கார்த்திகை உற்சவம் இன்று புதன்கிழமை நடைபெறும். பிற்பகல் 4 மணிக்கு சிறப்பு அபிசேகம் பூசை வழிபாடுகள் இடம்பெற்று கார்த்திகைத் திருவிழா நடைபெறும். (க-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
@UthayanPrint
ஒக்ரோபர்16, 2019
புதன் பொய்கை





# வடக்கு மாகாண பண்பாட்டு விழா





பா.குமுதன்

வடக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் பண்பாட்டுப் பெருவிழா நிகழ்வுகள் வவுனியா நகரசபை மண்டபத்தில் கடந்த வெள்ளி மற்றும் சனி ஆகிய தினங்களில் சிறப்புற இடம்பெற்றன.

வடமாகாணத்தில் இருக்கும் பிரதேச செயலகங்கள் மற்றும் மாவட்டச் செயலகங்கள் போன்றவற்றில் கலை, கலாசார பண்பாட்டு விழுமியங்களை மேம்படுத்தும் நோக்குடன் பண்பாட்டுப் பெருவிழா நிகழ்வு வருடாந்தம் நடைபெற்று வருகின்றது. குறித்த நிகழ்வு இம்முறை வவுனியாவில் இடம்பெற்றது.

## முதல்நாள் நிகழ்வுகள்

அந்த வகையில் பொன் பூலோகசிங்கம் அரங்கில் இடம்பெற்ற முதல்நாள் நிகழ்வில் பேராசியர் நா.சண்முகலிங்கத்தின் தலைமையில் பண்பாட்டு மேம்பாட்டுக்கான கலைகளின் இருப்பும் எதிர்பார்ப்பும்' எனும் தலைப்பில் ஆய்வரங்கம் இடம்பெற்றது.

'தமிழர்களுக்கான தனித்துவ ஆடல் வடிவம், ஆக்க செயன்முறையும் சவால்களும்' எனும் தலைப்பில் கலைஞர் வேல் ஆனந்தனும், 'கிராமிய வாழ்வின் நிலை பேற்றிற்கான நாட்டார் கலைகள் மரபும் மாற்றமும்' எனும் தலைப்பில் மன்னார் அமுதனும், 'வாழ்வியல் மேம்பாட்டில் பாரம்பரிய கலைகளின் இடம்' எனும் தலைப்பில் தமிழ்மணி அகளங்கனும், 'கைவினைக் கலைகள்' எனும் தலைப்பில் இராஜேஸ்கண்ணனும், 'அடங்காப்பற்று வன்னி தொல்லியல் வழியான வெளிப்பாடுகள்' எனும் தலைப்பில் அருணா செல்லத்துரையும், 'நவீன நாடகங்களின் மரபின் நீட்சியும் எதிர்கொள்ளும் சவால்களும்' எனும் தலைப்பில் கலாநிதி க.ரதிதரனும், 'பறை வாத்தியத்தினை' மையமாகக் கொண்ட ஆய்வினை தர்மினி ரயீபனும், 'சமய சடங்குகளோடு இசைந்த கலைகள்' எனும் தலைப்பில் சிவ, முகுந்தனும் ஆய்வுரைகளை வழங்கியிருந்தனர்.

முதலாம் நாள் மாலை நிகழ்வுகளாக பரதநாட்டியம், புத்தாக்க நடனம், றபான் நடனம், சிங்கள நடனம், நாட்டுக்கூத்து, 'இளம் கலைஞர்' விருது வழங்கல் ஆகிய நிகழ்வுகள் இடம்பெற்றன.

## இரண்டாம் நாள் நிகழ்வுகள்

இரண்டாம் நாள் நிகழ்வுகள் விபுலரத்தின இபுல்கஸ்வெள அரங்கில் இடம்பெற்றன. நிகழ்வில் தமிழருவி த.சிவகுமாரன் தலைமயில் 'இன்றைய இளைஞர் சமுதாயத்தை நெறிப்படுத்துவதில் பெரிதும் முன்னிற்பது இராமாயணமா, மகாபாரதமா' எனும் தலைப்பில் பட்டிமன்றம் இடம்பெற்றிருந்தது.

இராமாயணம் எனும் தலைப்பில் க.மேழிக்குமரன், வே.நந்தகுமார், சி.சிவனேசன் ஆகியோரும், மகாபாரதம் எனும் தலைப்பில் வே.தீபன், மகாதர்ம குமாரக்குருக்கள், எஸ்.வாசன் ஆகியோரும் வாதங்களை முன்வைத்திருந்தனர்.

அதனைத் தொடர்ந்து 'மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்' எனும் தலைப்பில் கவிஅரங்கம் இடம்பெற்றது. கவிஞர் ஜெயசீலனைத் தலைமையாக கொண்டு ஜெ.கோபிநாத், சு.முரளிதரன், செ.மதுரகன், ச.முகுந்தன் ஆகியோர் கவி பாடியிருந்தனர்.

இரண்டாம் நாள் மாலை நிகழ்வுகளில் விசேடமாக கலை பண்பாட்டு அம்சங்கள் தாங்கிய 'பண்பாட்டு ஊர்வலம்' வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்துக்கு முன் ஆரம்பிக்கப்பட்டு வவுனியா தொடருந்து நிலைய வீதி ஊடாக வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தை வந்தடைந்தது. அதனைத் தொடர்ந்து அரங்க நிகழ்வுகள் இடம்பெற்றன.

அரங்க நிகழ்வுகளாக இசைக்கச்சேரி, நடனம், நாட்டுக்கூத்து ஆகியவற்றுடன் 'வடந்தை' நூல் வெளியிட்டு வைக்கப்பட்டதுடன் சிறந்த நூற்பரிசு வழங்கல், 'கலைக்குரிசில்' விருதுகள் வழங்கும் நிகழ்வுகள் இடம்பெற்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org












**விருதுகள்**

வடமாகாணத்தின் உயர் விருதான 'கலைக்குரிசில்' விருதினை இசை நாடகம் ஐயாத்துரை வசந்தா, வாத்தியக் கருவி உருவாக்கம் சின்னதம்பி தில்லைநாதன், வாத்திய கலை விஜயலட்சுமி சண்முகராஜா, நடனம் பத்மினி செல்வேந்திரகுமார், தென்மோடி கூத்து சின்னத்தம்பி இராமச்சந்திரன், கிராமியக் கலை இராசையா சிறிதரன், சிற்பம் நடராசா சற்குருநாதன், நாவல் குருசுமுத்து இராயப்பு, நாடக எழுத்துரு யோசப் ஆரோக்கியம் குரூஸ், கவிதை இலக்கியம் முத்துகுமார் தணிகாசலம், சிறுகதை சிவப்பிரகாசம் யோகேஸ்வரி, இசைத்துறை முருகேசு நவரத்தினம், ஓவியம் கோபாலபிள்ளை கைலாசநாதன், நாவல் நீக்கிலஸ் மரியதாஸ் பாலசந்திரன் ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

வடக்கு மாகாண 'இளங்கலைஞர்' விருதினை சிற்பம் க.சிறீகந்தமூர்த்தி, ஊடகம் மற்றும் திரைத்துறை தி.சுதாகரன், ஊடகத்துறை இ.விஜேந்திரன், கைப்பணி கவியழகன், நாடகம் ச.நிமலன், கவிதை ற.தர்மினி, நடனம் ரெ.சஜீத், வாய்ப்பாட்டு அ.இரவீந்திரன், ஒளிப்படம் த.பரமசிவம், சிறுகதை பெ.சிறீகந்தநேசன், ஓவியம் பெ.ஜெனிவர், மிருதங்கம் ந.சதீஸ்குமார், நாட்டுகூத்து செ.லசன்பேச் ஆகியோர் பெற்றுகொண்டனர். இந்த நிகழ்வுகளில் வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன், வடக்கு கல்வி அமைச்சின் செயலர் இளங்கோவன், வவுனியா மாவட்டச் செயலர் எம்.கனீபா, மேலதிக மாவட்டச் செயலர் தி.திரேஸ்குமார் பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் உதவிப்பணிப்பாளர் சுஜீபா சிவதாஸ் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.













காரைநகர் பிரதேச கலாசார பெருவிழா காரைநகர் இந்துக் கல்லூரியின் முதன்மை மண்டபத்தில் கடந்த வியாழக் கிழமை இடம்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருத்தோலை அழுவதேன்?

தேவநாயகம் தேவானந்த்

'எழுதப்படாத நாடக வரலாறு' என்ற எண்ணக்கரு தொடர்பான விவாதத்துக்கான முன்மொழிவுகளை இந்தத் தொடர் ஆரம்பமான போதே குறிப்பிட்டிருந்தோம். அவை பற்றிய பல விவாதங்கள் ஆங்காங்கே நடைபெறுவது மகிழ்ச்சியளிக்கிறது. இங்கு முதன்மையாக எழுகின்ற விடயம் எதைப்பதிவது என்பது தான். நாடகம் ஒரு கல்விநெறியாக வந்திருக்கிறது. பல்கலைக்கழகக் கற்கையாக விரிவடைந்து தத்துவமாணி மற்றும் கலாநிதிப்பட்ட ஆய்வுகள் வரை நீண்டிருக்கிறது. இந்த வளர்ச்சி வியக்க வைக்கின்ற ஒன்று என்பது யாவரும் அறிந்ததே. ஆனால் தற்போது பல்கலைக்கழக நாடகத் துறை விரிவுரையாளர்களே இந்த வளர்ச்சியால் பயனேதும் இல்லை என்று புலம்ப ஆரம்பித்திருக்கிறார்கள். நியமமற்ற ஒரு வகையில் சீரொழுங்கற்ற நிலையில் இருக்கக்கூடிய ஒரு துறையை சீரொழுங்குக்குக் கொண்டுவருவதற்கு அதனைக் கற்கைத் துறையாகக் கொண்டு வரவேண்டும் என்பதுதான் உலகம் முழுவதும் கைகொள்ளப்படும் கல்வி நடைமுறை. அதன் வழி அந்தத்துறை மேலும் வளர்ச்சிபெற்று முதிர்ச்சி பெறும் என்று நம்பப்படுகிறது. அது பல துறைகளுக்குச் சாதகமான பயன்களைத் தந்திருப்பதைக் காணமுடிகிறது. அனுபவம் அறிவாகின்றபோதும் அறிவு அனுபவமாகின்றபோதும் ஒரு துறை மகோன்னத நிலைக்குச் செல்லும் என்பதுதான் வரலாறு. ஆனால் அவ்வாறான ஒரு படிமுறையால் நியமமற்ற நிலையிலிருந்து நியமத்துக்கு வந்திருக்கக்கூடிய நாடகத்துறை ஒரு வகை தறுக்கணிப்புக்கு உள்ளாகியிருக்கிறது என்பதுதான் தற்போதுள்ள பிரச்சினை. அதற்குப் பரிகாரம் மீண்டும் நியமமற்ற முறைக்கு நாடகத்துறை செல்வதுதான் என்று நாடகம் நியமமானதால் பயனடைந்தவர்கள் சொல்ல முனைவது வேடிக்கையானது. வினோதமானது.

++++

நியமமற்றதில் இருந்து நியமத்துக்கு நாடகத் துறை வந்தது பிழையானது. எங்கோ தவறு நடந்து விட்டது. மீண்டும் பின்னோக்கி நகர்வது தான் நாடகத்துறையை மேம்படுத்த ஒரேவழி என்று சகட்டு மேனிக்குச் சொல்வது சரியா? அதுவும் நாடக விரிவுரையாளர்கள் தங்கள் முன்னே மௌனமாக இருக்கும் மாணவர் முன்னே மீண்டும் மீண்டும் வலியுறுத்துவது சரியானதா? இது ஒரு திறந்த விவாதத்துக்கான திறவுகோலென்றால் அது நாடகத்துறைக்கு ஆரோக்கியமானது எனலாம். ஆனால் அது அவ்வாறு இல்லை என்பதை இந்த வகை உரையாடல் களங்கள் உணர்த்துகின்றன. ஒரு கருத்தியலை வைத்து விவாதிக்கும் பண்பு அது சார்ந்த காய்தல் உவத்தலற்ற கருத்துப்பகிர்வு என்று எதுவும் நடைபெறாது. அல்லது அதற்கான வாய்ப்புக்கள் வழங்கப்படாமல் மௌனப் பூச்சிகளாக இருக்கின்ற மாணவர்களுக்கு தாம் நினைத்ததை கூறி தாமே அதன் மேதாவிகள் எங்களைப்பற்றி மட்டுமே படித்தால் போதும், அதையே வரலாறாக எழுதி விடுங்கள் என்ற தீராத அழுகுரல்களால் என்ன பயன்?.

மாணவர்கள் பாவம். அவர்களின் கண்களைக் கட்டி ஒருமுகப் பார்வையை மட்டுமே பெறுங்கள் என்று கட்டிவைத்து அடிக்கிறார்கள். திறந்த பார்வைக்கு வாய்ப்பில்லை. வெவ்வேறு கருத்தியலுக்கான திறந்த விவாதங்கள் இல்லை. நடைபெற்ற, நடைபெறுகின்ற, நாடகச் செயற்பாடுகளை 'போஸ்மோட்டம்' செய்து எதனால் இது நடந்தது என்று பார்க்கின்ற பக்குவம் இல்லை. சுய புலம்பல்களால் பயனென்ன? ஒரே காலப்பகுதியில் சமாந்திரமாக வெவ்வேறு புவியியல் பகுதிகளில் என்ன நடந்தது? என்பதுபற்றி அறிய ஆவலாக இல்லாமல் இருப்பது தான் பல்கலைக்கழக நாடக கருத்தாடல்களின் கோளாறாக இருக்கிறது.

இங்கு ஒரு காலகட்டத்தில், நாடகத் துறைசார் கல்வியாளர்களால், கோட்பாட்டாளர்களால் சிறுவர் அரங்கு தொடர்பாக முன்வைக் கப்பட்ட கருத்து நிலைக்கு எதிராக முன்வைக்கப்பட்ட ஒரு கருத்துநிலை அதற்குப் பதில்சொல்ல முடியாமல் ஒதுங்கிக்கொண்ட சூழ்நிலைபற்றி பார்க்க முனைகிறோம்.

++++

1995ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஈழப்போர் தீவிரமடைகிறது. இராணுவம் யாழ்ப்பாணத்தின் மீது சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையை ஆரம்பிக்கிறது. இதனால் வரலாற்று நிகழ்வாக பெரிய இடம்பெயர்வு யாழ்ப்பாணத்தில் நடக்கிறது. சாவகச்சேரியிலும் வன்னியிலும் மக்கள் இடம்பெயர்ந்து வாழ்கிறார்கள். சிறுவர்கள் சொல்ல முடியாத துயரத்துக்குள் வாழவேண்டிய சூழல். இந்த நிலமையில் போர் பற்றியும் அதன் கொடுமைகள் பற்றியும் சிறுவர்கள் பேசமுடியும், பேசவேண்டும் என்ற கருத்தை முன்வைத்து நாடக முயற்சியொன்றை புதுவை அன்பன் ஆரம்பிக்கிறார். இது ஏலவே இருக்கின்ற சிறுவர் அரங்க எண்ணக்கருவுக்கு முரணானது என்ற விமர்சனங்கள் நாடகத் துறைசார் கல்வியாளர்களால் முன்வைக்கப்படுகின்றது. சிறுவர் அரங்கு வன்முறைக் கருத்துக்களைக் கொண்டிருக்க முடியாது. அதில் எல்லாம் வெளிப்படையானதாக அமையவேண்டும். மகிழ்வளிப்பு பண்பு மிக்கதாக இருக்க வேண்டும். சிறுவர்களின் மகிழ்ச்சிதான் அதன் அடிநாதம் என்ற மேற்கத்தேய கோட்பாடுகளின் அடிப்படையில் இது வரையறுக்கப்படுகின்றது.

ஆனால் அந்தக் கோட்பாட்டை நிராகரித்து திணிக்கப்பட்ட போர்ச் சூழலில் வாழும் சிறுவன் அந்தச் சூழ்நிலையில் தான் வாழ்வதற்குப் போர் பற்றியும் போர்க் கொடுமை பற்றியும் அறிந்திருக்க வேண்டும். தன் மீதான போரில் இருந்து தப்பிப்பதற்கான வழியைக் கண்டுகொள்வதற்கு இந்தப் புரிதல் அவசியம் என்ற கருத்தியலோடு 'குருத்தோலை அழுகிறது' என்ற நாடகத்தை சிறுவர்களை வைத்தே புதுவை அன்பன் ஆரம்பிக்கிறார். இவரது இந்தக் கருத்துக்காக எந்த ஆரோக்கியமான விவாதங்களும் நாடகக் கோட்பாட்டாளர்களால் முன்வைக்கப்படவில்லை. இந்தச் சூழலிலிருந்து நாடகக் கோட்பாட்டாளர்கள் தப்பித்துக் கொண்டார்கள் எனலாம்.

++++

எமது மத்தியில் காவோலை விழ குருத்தோலை சிரிக்கிறது என்று ஒரு பழமொழி உண்டு. இது இயற்கை நியதியை விளக்கும் ஒரு பழமொழி ஆகும். முதுமையின் இறப்பும் இளமையின் எழுச்சியுமாக இது குறிப்பிடப்படுகிறது. பனை மரத்தில் இருந்து காவோலை விழ குருத்தோலை சிரிக்கிறது என்பார்கள். அதன் அர்த்தம் காய்ந்த ஓலை தனது பருவம் முடிந்ததும் மரத்தில் இருந்து கீழே விழும். அதனைப் பார்த்த குருத்தோலையின் நினைப்பு வியப்பானது. எப்போதும் அப்படியே தான் மரத்தில் இருப்பேன் என்ற நினைப்பு அதற்கு. தானும் ஒருநாள் இதே ஓலைபோல் காய்ந்தவுடன் மரத்தில் இருந்து கீழே விழுவேன் என்று அதற்கு அப்போது புரியாது. அதனால் அது விழுகின்ற ஓலையைப் பார்த்து சிரிக்கிறது. இது வாழ்க்கைச் சக்கரத்தில் நடக்கின்ற விடயம் என்பதை விளக்குவதற்கு இந்தப் பழமொழியைப் பயன்படுத்துவார்கள். இயற்கையாக நடக்கின்ற ஒரு விடயம் என்பதை அழுத்துவதற்கானதும் கூட. ஆனால் போர்க்காலத்தில் காவோலைகள் எல்லாம் இயற்கையின் நியதி காரணமாக விழவில்லை, இதனால் குருத்தோலைகள் சிரிப்பதற்குப் பதில் அழுகின்றன. தங்களின் எதிர்காலத்தை ஏங்கி அழுகின்றன. தமக்கு இனியார் வழிகாட்டிகள்? எவ்வாறு வாழப்போகிறோம் என்பதாக அழுகிறார்கள். இதனை விளக்குவதாகக் 'குருத்தோலைகள் அழுகின்றன' என்ற நாடகம் புதுவை அன்பனால் தயாரிக்கப்பட்டு மேடையேற்றப்படுகின்றது. சிறுவர் உரிமைச் சாசனங்களை விழுங்கியவர்களுக்கும் சிறுவர் அரங்கு பற்றிய கோட்பாட்டாளர்களுக்கும் புதுவை அன்பன் புதியதொரு எதிர்க்கருத்தை முன்வைக்கின்றார்.



எழுதப்படாத நாடக வரலாறு
24

இது வீதி நாடகப்பாணியில் மேடையேற்றப்பட்ட நாடகம், நாடகத் தொடக்கத்தில் நடிகர்களான சிறுவர்கள் சவப்பெட்டியை சுமந்து ஒரு பாடலுடன் ஆடுகளத்திற்கு வருகிறார்கள்.

பாடல்,

சாவினை சுமக்குது எதிர்காலம் இளம்
சந்ததிக் கேனிந்த துயர் கோலம்
பாவம் புரியாத சமுதாயம் இந்தப்
பாரத்தை சுமப்பது என்ன நியாயம்
மடியில் மகிழ்ந்திருக்கும் பருவத்திலே–துன்ப
மலையைச் சுமக்குது தன் தலைமேலே
கூடு கலைந்து வந்த குருவிகளே–தெருப்
புழுதியில் உறங்குது பாருங்களேன்.

இந்த ஆரம்பப் பாடலே நாடகத்தின் கருப்பொருளை விளக்கி நிக்கிறது போலும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி வானதி போஷ்

# லண்டனில் இடம்பெற்ற பரத நாட்டிய நிகழ்வு

லண்டன் நேரு நிலையத்தில் ரசிகர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்திய சாயி சுப்பிரியா ஸ்ரீகுமாரின் பரத நாட்டிய நிகழ்ச்சி அண்மையில் இடம்பெற்றது. சாயி சுப்பிரியா ஒரு விறுவிறுப்பான பரதநாட்டிய விருந்தினை வழங்கினார். குரு திருமதி கீதா ஸ்ரீதரின் நெறியாள்கையில் நிகழ்ச்சி மிகச் சிறப்பாக நடைபெற்றது.

அந்த இனிய மாலை நிகழ்ச்சியின் முதல் அம்சமாக பிரபல மிருதங்க வித்துவான் ஷஷவிஸ்வ கலா பாரதி காரைக்குடி கிருஷ்ணமூர்த்தியின் ஹிந்தோள இராகத்தில் அமைக்கப்பட்ட புஷ்பாஞ்சலியுடன் நிகழ்வு மிகவும் நேர்த்தியாகவும் விறுவிறுப்பாகவும் இடம்பெற்றது. நிகழ்ச்சி, அதன் பின்வரும் உருப்படிகளுக்கு கட்டியம் கூறுவது போலும் இரசிகர்களின் கரகோசமும் சேர்ந்து அந்த சபை நிரம்பிய மண்டபத்தை அதிர வைத்தது. இதனைத் தொடர்ந்து திஸ்ர அலாரிப்பு மிகவும் கச்சிதமாக அமைந்தது.

நிகழ்ச்சியின் மையமாக அமைந்தது மதுரை சேதுராமனால், வாசஸ்பதி இராகத்தில் இயற்றப்பட்ட தமிழ் பதவர்ணம் ஷஷவேலனிடம் போய் சொல்லடி||. இவ்வர்ணத்தில், நாயகன் முருகப் பெருமானைத் தேடி, ஒன்று கூட விரும்பிய நாயகியின் மனநிலையை மிகவும் நேர்த்தியான முக பாவத்தாலும் அபிநயத்தாலும், மேலும் வேறுபாடான பல சஞ்சரி பாவங்களால் வெளிப்படுத்தி ரசிகர்களைத் தன் வசப்படுத்தினார் சாயி சுப்பிரியா.





ஒரு நடன நிகழ்ச்சிக்கு ஜீவனாக இருப்பது பாடுபவரின் குரல் வளமும் அவரின் ஈடுபாடும். நடன நிகழ்ச்சியைத் தனது பாவமான பாட்டின் மூலம் எல்லோரையும் கவர்ந்து தனது சகோதரியின் நாட்டியத்துக்கு மேலும் மெருகூட்டினார் செல்வன் அகிலேஷ் ஸ்ரீகுமார்.

விறுவிறுப்பான விரல்கள் மிருதங்கத்தில் விளையாட ஜதிக் கோர்வைகள் யாவற்றையும் கச்சிதமாக, குருவின் தாளத்திற்கேற்ப மிகவும் அழகாகவும், சபையோரின் கரகோசத்துக்கும், நர்த்தகியின் நாட்டியத்திற்கும் உயிர் கொடுத்தார் அபிராம் சகாதேவன். வயலின் இசை ஜலதரன் சிதம்பரநாதன். அனுபவப்பட்ட கலைஞர். இராக பாவமான வாசிப்பு. பாடகருக்கு மிகவும் அனுசரனையாக வாசித்து சபையோரின் பாராட்டுக்களைப் பெற்றார்.

கச்சேரியின் பிற்பகுதியில் பெருமை பெற்ற தமிழ் மொழியில் பாரதிதாசனால் இயற்றப்பட்ட ஷஷதுன்பம் நேர்கையில்|| என்ற உருப்படியும், பின் உலகில் அவதரித்த மகான்கள் எடுத்துச் சொல்லும் செய்தியான அன்பு, பண்பு, சாந்தம், சகோதரத்துவம், ஐக்கியத்துவத்தை எடுத்துக்காட்டும் சக்ரவாகத்தில் அமைந்த சாயி பஜனும் இறுதியில் கேதார கௌளைராகத்தில் அமைந்த தில்லானாவும் இந்த நிகழ்ச்சியை முழுமையான நிகழ்ச்சியாக நிறைவுசெய்தார்.

# 'தமிழ் பாரம்பரிய கலைகள்' நூல் வவுனியாவில் வெளியீடு











'தமிழ் பாரம்பரிய கலைகள்' எனும் நூல் வெளியீட்டு நிகழ்வு வவுனியாவில் உள்ள தனியார் மண்டபமொன்றில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. வவுனியாவை சேர்ந்த அ.நிலா எழுதிய குறித்த நூலைத் தமிழியல் வித்தகர் கலாநிதி அகளங்கன் முதன்மை விருந்தினராகவும், வவுனியா தெற்கு பிரதேச சபை செயலர் சுகந்தி கிஷோர் மதிப்புறு விருந்தினராகவும் கலந்து கொண்டு நூலை வெளியிட்டு வைத்தார்.

அழிந்து வரும் தமிழ்ப் பாரம்பரிய கலைகளை ஆவணப்படுத்தும் நோக்குடனும், அந்தக் கலைகள் தொடர்பில் தற்போதுள்ள சந்ததியினர் அறிந்து கொள்ள வேண்டும் எனும் நோக்குடனேயே இந்த நூலைத் தொகுத்துள்ளேன். முதல் பாகமாகவே இந்த நூலைத் தற்போது வெளியிட்டுள்ளேன், மிக விரைவில் அடுத்த பாகத்தை வெளியீடு செய்வதற்கும் முயற்சிகளை முன்னேடுத்துள்ளேன். அழிந்து வரும் கலைகளை ஆவணப்படுத்துவது மாத்திரம் எனது நோக்கில்லை. அழிந்து வரும் கலைகளை அழிவில் இருந்து காப்பதுமே. அதற்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் கலைஞர்களுடன் உரையாடல்களை தொடங்கியுள்ளேன் என நூலாசிரியரான அ.நிலா தெரிவித்தார்.



வவுனியா ரஜீவனின் கவி வரியில் உருவான 'செஞ்சோலையின் வலிகள்' என்னும் பாடல் வெளியீட்டு விழா கடந்த ஞாயிறுக்கிழமை கிளிநொச்சி பாரதி புரத்தில் அமைந்துள்ள செஞ்சோலை மாதிரிக் கிராமத்தில் இடம்பெற்றது.



யாழ்ப்பாணம் தேசிய கலை இலக்கியப் பேரவையில் கடந்த 5ஆம் திகதி கவிஞர் மாவை வரோதயனின் 'தாயகம்' சிறப்பிதழ் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கியத்தில் தடம் பதித்தவர் இணுவையூர் திருச்செந்திநாதன்!

கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன்



நாடகம், நாவல், சிறுகதை எனும் வடிவங்களூடாக இலக்கியத் தடம் பதித்த இணுவையூர் சிதம்பர திருச்செந்தி நாதன் ஒரு பத்திரிகை ஆசிரியராக, பத்திரிகை எழுத்துக்கள் ஊடாக பல்வேறு விமர்சகர், ஆய்வாளர் என்ற வகையில் கருத்துக்களை புதிய வாசகர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தவர். சிதம்பரநடராஜன், தி.இராஜநாயகி, நடராஜன் மைந்தன், இணுவிலான் எனப் பல புனைபெயர்களுடன் தனது பதிவுகளை மேற்கொண்டு, இளைய படைப்பாளிகளை அரவணைத்தும், வழிகாட்டியும் நின்ற பக்குவம் பல இளைய தலைமுறை எழுத்தாளர்களால் இன்றும் போற்றப்படுகின்றது.

இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் 1978ஆம் ஆண்டில் பாடசாலை மாணவனாக இருந்த காலத்தில்;, தந்தையார் சிதம்பரநாதபிள்ளையின் கலைப்பணியால் உற்சாகம் பெற்றும் அக்காலத்து முன்னணி எழுத்தாளர்களின் படைப்புக்களினால் உந்தப் பெற்றும் சிறுகதை உலகில் பிரவேசித்தார். மித்திரன், வீரகேசரி எனத் தொடங்கி பின்னாளில் உதயன், ஈழநாடு, ஈழமுரசு, முரசொலி, ஈழநாதம், தினக்குரல் எனப் பல்வேறு பத்திரிகைகளிலும் மல்லிகை, அமிர்தகங்கை, செய்திக்கதிர், வெளிச்சம், ஆதாரம், உள்ளம், எனப்பல ஈழத்து சஞ்சிகைகளிலும் எழுதி முன்னணி எழுத்தாளராகப் பரிணமித்தார்.

திருச்செந்திநாதன் எண்பதுகளின் ஆரம்பத்தில் இணுவில் கலை இலக்கிய வட்டத்தின் செயற்பாடுகளோடு தன்னைப் பிணைத்துக் கொண்டு தலைவராகவும் பணி ஆற்றியதோடு 1998ஆம் ஆண்டில் 'என்றாவது ஒரு நாள்?' என்னும் குறுநாவலை இணுவில் கலை இலக்கிய வட்டத்தின் நிகழ்வொன்றில் வெளியிட்டார். தொடர்ந்து 1988ஆம் ஆண்டில் மீரா வெளியீடாக வந்த 'முடிவல்ல ஆரம்பம்' எனும் நாவல் போராட்ட காலத்தைப் பகைப்புலமாகக் கொண்டு சீதனம், சாதி என யாழ்ப்பாண நிலைமைகளை படம் பிடித்தது. 1991ஆம் ஆண்டில் மீரா வெளியீடாக வெளிவந்த அடுத்த நாவல் 'முள்முடி மன்னர்கள்' குடும்பச் சுமையுடன் கல்வி, வேலைவாய்ப்பு என அலையும் யாழ்ப்பாண இளைஞர்களின் வாழ்வியலை எடுத்துக் காட்டும் படைப்பாக காணப்படுகின்றது. 1992ஆம் ஆண்டில் மீரா வெளியீடாகவே பிரசுரிக்கப்பட்ட 'மீண்டும் புதிதாய்ப் பிறப்போம்' எனும் நாவலில் போரின் பாதிப்புக்கள், பெண்களின் இக்கட்டான சூழ்நிலை, இடப்பெயர்வு என்பன சித்திரிக்கப்படுகின்றன.

'தேவயானி', 'சுக்கிராச்சாரியார்', 'அரங்கேற்றம்' போன்ற நாடகங்களூடாக ஊர் மக்கள் மத்தியில் பிரபல்யம் பெற்றிருந்த திருச்செந்திநாதன் தமது சிறுகதைகள் ஊடாக குறிப்பாக வீரகேசரி வார மலரில் வெளிவந்த கதைகள் ஊடாக நாடளாவிய ரீதியில் புகழ் ஈட்டியிருந்தார். 150க்கும் மேற்பட்ட சிறுகதைகளை எழுதி வெளியிட்ட திருச்செந்திநாதன் அவர்கள் 4 சிறுகதைத் தொகுதிகளையும் இலக்கிய உலகிற்கு அளித்துள்ளார். வெட்டுமுகம் (1973), என்னுடையதும் அம்மாவினதும் (1998), மணல்வெளி அரங்கு (2002) என்பன தேசிய கலை இலக்கியப் பேரவை வெளியீடுகள் ஆகவும்; 'மருத்துவர்களின் மரணம்' (2016), எழுகலை இலக்கியப் பேரவையின் வெளியீடாகவும் வெளிவந்துள்ளன. யாழ்ப்பாண மத்தியதர வர்க்கத்து வாழ்நிலைகள், போர், இடப்பெயர்வு, நெருக்கடிகள் என்பவற்றோடு போர்க்காலத்து இளைஞர் அவலங்கள் என்பன சிறுகதைகளின் கருப்பொருள்களாக அடையாளம் கண்டுகொண்டுள்ளார்.

இடப்பெயர்வு காலத்தில் தாம் வாழ்ந்த சூழலிலும் வன்னி இலக்கிய இளவல்களுக்கு ஒரு வழிகாட்டியாக இருந்து எழுகலை இலக்கியப் பேரவையை உருவாக்கினார். புதுக்குடியிருப்பில் எழுகலை இலக்கியப் பேரவையை உருவாக்க திருச்செந்திநாதனுடன் தோளுக்கு தோளாக நின்றவர் போரின் உக்கிரத்தில் மறைந்த பத்திரிகையாளர் அமரர் சத்தியமூர்த்தி. 'தளவாசல்' என்னும் புதிய சஞ்சிகையின் 4 இதழ்களை தமது இலக்கிய இளம் நண்பர்களான கை.சரவணன், நிசாகரன், மயூரரூபன் ஆகியோரோடு இணைந்து வெளியிட்டிருந்தார்.

'தளவாசல்' சஞ்சிகை ஒரு இலக்கிய இதழாக பரிணமித்து வந்த வேளையில் நோயின் கடுந்தாக்கத்தினால் தம்முயிரை நீத்து புகழுடல் எய்தினார். தெல்லிப்பளை பிரதேச செயலகத்தின் நிர்வாக உத்தியோகத்தராக கடமையாற்றி ஓய்வு நிலையைக் பெற்றிருந்தார். தனது வாழ்க்கைத் துணைவியை இழந்ததிலிருந்து உற்சாகம் குன்றியிருந்த நண்பர் திருச்செந்திநாதன் தனது இரு ஆண்பிள்ளைகளையும் இரு பெண் பிள்ளைகளையும் தவிக்கவிட்டு 2018 ஒக்டோபரில் மறைந்து விட்டமை ஈழத்து இலக்கிய உலகிற்கு ஒரு பெரும் இழப்பு ஆகும். அன்னாரின் ஆத்ம சாந்திக்காக நாமும் பிரார்த்திப்போம்.

# ஏற்றுக்கொண்ட பதவிக்கெல்லாம் பெருமை சேர்த்தவர் செல்வராஜா



தான் ஏற்றுக்கொண்ட பதவிக்கெல்லாம் பெருமை சேர்த்த கோவிந்தசாமி செல்வராஜா. இவர் கிளிநொச்சிக் கல்வி வலயப்பிரதிக் கல்விப் பணிப்பாளராகவும், இரத்தோட்டை இந்துக்கல்லூரியில் ஆசிரியராகவும், கரவெட்டித்திடல் நாகேஸ்வரா வித்தியாலயம் மற்றும் இராமநாதபுரம் மகா வித்தியாலயம், கண்டாவளை மகா வித்தியாலயம், தர்மபுரம் மகா வித்தியாலயம், வட்டக்கட்சி மகா வித்தியாலயம் போன்ற பாடசாலைகளில் அதிபராகவும் கடமையாற்றி ஓகஸ்ட் மாதம் முப்பதாம் திகதி வாகன விபத்தொன்றில் அகாலச் சாவடைந்தார்.

அன்னார் நெடுந்தீவைப் பிறப்பிடமாகக் கொண்ட கோவிந்தசாமி தம்பதிகளின் பிள்ளையாக 1964ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15ஆம் திகதி இராமநாதபுரத்தில் பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை இராமநாதபுரம் மகாவித்தியாலயத்திலும் இடைநிலைக் கல்வியைச் சாவகச்சேரி இந்துக்கல்லூரியிலும் கற்று 1976ஆம் ஆண்டு கொழும்புப் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுப் பொருளியல் சிறப்புப் பட்டம் பெற்றார்.

இந்தக் காலத்தில் அவருக்குத் தபால் அதிபர் பதவியும் கிடைத்தது. தபால் அதிபராக 1981 வரை கொழும்பு தொலைத்தொடர்பு மத்திய நிலையத்தில் பணியாற்றினார். நல்ல சேவையாளர் என்ற பெயரைப் பெற்றார். 1984ஆம் ஆண்டுபட்டதாரி ஆசிரிய நியமனம் பெற்றதும் இரத்தோட்டை இந்துக் கல்லூரியில் தமது பணியைத் தொடர்ந்தார். போர்க் காலத்தில் மிகவும் பாதிப்படைந்திருந்த வன்னியின் கல்வி வளர்ச்சியில் அக்கறை காட்டிய அவர் கிளிநொச்சிக்கான இடமாற்றத்தைத் தானே கேட்டுப் பெற்றுக் கொண்டார். அத்துடன் அந்தப் பிராந்தியத்தின் பல்வேறு பாடசாலைகளில் அதிபராகப் பணியாற்றி அங்குள்ள மாணவர்களை சிறந்த முறையில் துலங்கச் செய்தார். போரினால் சின்னாபின்னம் அடைந்திருந்த பாடசாலைளைத் திருத்தி அமைத்தார்.

குறிப்பாக வட்டக்கச்சி மகாவித்தியாலயம், அக்காலத்தில் முற்றாகச் சீர்குலைவடைந்திருந்தது. இந்தக்காலத்தில் யாழ்ப்பாணத்தின் போர் நிலை காரணமாகப் பல்வேறுபட்ட மாணவர்கள் கிளிநொச்சியை நோக்கி இடம்பெயர்ந்திருந்தனர். அவர்களை வட்டக்கட்சி மகா வித்தியாலயத்தில் உள்ளடக்கும் நோக்கத்துடன் பாடசாலையில் பெரிய கொட்டகை அமைத்துத் தளபாடங்கள் போட்டு அதை இயங்கச் செய்தார். அதற்கான எந்தக் கொடுப்பனவையும் கல்வித் திணைக்களத்திடமிருந்து பெற்றுக்கொள்ளவில்லை.

இவரது கற்றல் புலமையை இக்காலத்தில் அவர் வளர்த்துக் கொண்டார். கல்வி டிப்ளோமா பட்டப்பின் படிப்பைக் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் நிறைவு செய்த அவர் கல்வி முகாமைத்துவ டிப்ளோமாப் பட்டப்பின் படிப்பைத் தேசிய கல்வி நிறுவகத்திலும் இறுதியாக முதுகலைமாணிப் பட்டப்படிப்பை 2005ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் கற்றுத்தேறினார். இவரது கல்விப் புலமையையும் சேவையின் ஆற்றலையும் அவதானித்த கல்வித்திணைக்களம் 2005ஆம் ஆண்டு வலயக் கல்விப் பிரதிக் கல்விப்பணிப்பாளராக்கியது.

2009ஆம் ஆண்டு கிளிநொச்சி கல்வி வலயத்தில் தேசிய கல்வி நிறுவகத்தின் கல்விமாணிப் பட்டப்படிப்பு மத்திய நிலையத்தின், பிராந்திய நிலையத்தின் துணை இணைப்பாளராக இணைந்தார். அங்குள்ள பயிற்றப்பட்ட ஆசிரியர்களின் துன்ப நிலையைக் கவனத்தில் எடுத்து அவர்களை அவதானமாகக் கற்றலில் ஈடுபடவைத்தார்.

இத்தகைய செயற்பாட்டால் முன்னூறுக்கு மேற்பட்ட ஆசிரிய மாணவர்களைப் பட்டதாரிகளாக்கி கிளிநொச்சி மாவட்டத்தின் கல்வி நிலையை உயர்த்தினார். இத்தகைய எல்லாச் சிறப்புக்களையும் தன்னகத்தே தன்னடக்கத்துடன் பேணிக் கொண்ட செல்வராசா இன்று எம்முடன் இல்லை என்ற துயரைத் தந்து மீளா உறக்கத்தில் ஆழ்ந்திருக்கும் அவரது ஆத்மா நித்தியத்தில் இளைப்பாற வேண்டுமென்று இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**மா.கணபதிப்பிள்ளை**
*ஓய்வுநிலை பிரதி அதிபர்*
*கொழும்பு றோயல் கல்லூரி*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துருக்கி மீது தடை அமெரிக்கா அதிரடி

வோஷிங்டன்,ஒக்.16
வடக்குச் சிரியாவில் குர்திஷ் ஆயுததாரிகள் மீது துருக்கி மேற்கொள்ளும் இராணுவ நடவடிக்கைக்குப் பதிலடியாகத் துருக்கியின் இரண்டு அமைச்சகங்களுக்கும், மூத்த அரச அதிகாரிகள் மூவருக்கும் அமெரிக்கா தடைவிதித்தது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது:

வடக்குச் சிரியப் பகுதியில் குர்திஷ் படைகளுடன் இணைந்து செயற்பட்டு ஐ.எஸ்.ஐ.எஸ். ஆயுததாரிகளை ஒடுக்கியது அமெரிக்கப் படை. அங்கிருந்த அமெரிக்கப் படையைத் திரும்பப் பெற்றார் அமெரிக்க அதிபர் ட்ரம்ப். வடகிழக்குச் சிரியாவைத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துள்ள குர்திஷ் ஆயுததாரிகளை அழிக்கும் நோக்கத்துடன் துருக்கி தனது எல்லைப்புறத்தில் இருந்து சிரியா மீது தாக்குதல் தொடுத்தது. ஐ.எஸ். ஆயுததாரிகளை அழிப்பதற்குக் குர்திஷ்களின் உதவியைப் பெற்றுவந்த அமெரிக்கா, துருக்கியோடு நேரடி மோதலைத் தவிர்ப்பதற்காகவே அங்கிருந்த தனது படைகளைத் திரும்பப் பெற்றது என்று குர்திஷ்களின் தரப்பில் குற்றம் சாட்டப்படுகிறது.



இந்த நிலையில் துருக்கியின் படைகளை எதிர்கொள்வதற்குச் சிரியாவின் அரச படைகளோடு இணக்கத்தை எட்டும் நடவடிக்கைகளில் குர்திஷ்கள் ஈடுபட்டுள்ளனர்.

நிலமை இவ்வாறிருக்க, துருக்கி மீது தடைகளை விதித்துள்ளது அமெரிக்கா. துருக்கி அதிபர் ரிசெப் தாயிப் எர்டோகனோடு தொலைபேசியில் பேசிய அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப், தாக்குதலை உடனடியாக நிறுத்த வேண்டும் எனக் கோரியதாக அமெரிக்கத் துணை அதிபர் மைக் பென்ஸ் தெரிவித்தார்.

அந்தப் பிராந்தியத்துக்கு மிக விரைவில் தான் பயணம் மேற்கொள்ள இருப்பதாகவும் பென்ஸ் மேலும் தெரிவித்தார்.

துருக்கியின் தாக்குதலுக்கு அமெரிக்கா, பிரான்ஸ் ஆகிய நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்திருந்தமையும், போர் நடவடிக்கைகளை நிறுத்தாவிடில், துருக்கியின் பொருளாதாரம் அழிக்கப்படும் என்று ட்ரம்ப், துருக்கிக்கு எச்சரிக்கை விடுத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## மெக்சிக்கோவில் தாக்குதல் 14 பொலிஸார் சாவு

மெக்சிக்கோ சிற்றி,ஒக்.16
ஆயுததாரிகள் நடத்திய தாக்குதலில் மெக்சிக்கோவில் பொலிஸார் 14 பேர் சாவடைந்தனர்.

இதுகுறித்து மேலும் தெரியவருவதாவது:

நீதிமன்ற உத்தரவையடுத்து போதைப்பொருள் கடத்தல் குழுவைப் பிடிப்பதற்காக மெக்சிக்கோவின் அகுலியா நகரிலுள்ள பிரதேசம் ஒன்றுக்குப் பொலிஸார் சென்றனர். அப்போது அவர்கள் மீது ஆயுததாரிகள் சரமாரியாகத் தாக்குதல் நடத்தினர். இதில் 14 பொலிஸார் கொல்லப்பட்டனர். 3 பேர் படுகாயம் அடைந்தனர். இந்தத் தாக்குதல் தொடர்பாக விசாரணை நடந்து வருவதாகவும், பழிவாங்கும் நோக்கில் இந்தத் தாக்குதலைக் குறித்த கடத்தல் குழு நடத்தியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பொலிஸார் சுட்டுக் கொல்லப்பட்ட இந்தச் சம்பவம் மெக்சிக்கோ மக்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. மெக்சிக்கோவில் கடந்த சில வருடங்களாக போதைப்பொருள் கடத்தல் கும்பலுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை அந்த நாட்டு அரசு முடுக்கிவிட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

## ‘ஹகிபிஸ்’ தாக்கம் சாவுகள் அதிகரிப்பு

டோக்கியோ,ஒக்.16
ஜப்பானைத் தாக்கிய ‘ஹகிபிஸ்’ புயல் காரணமாகச் சாவடைந்தவர்களின் எண்ணிக்கை 67 ஆக அதிகரித்தது. ஜப்பானில் வரலாறு காணாத பாதிப்பை இந்தப் புயல் ஏற்படுத்தியுள்ளது. 15 பேர் காணாமல் போயுள்ளனர். 200க்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர். அதிகளவான சாவுகள் ஜப்பானின் வடக்குப் பகுதியில் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## ‘பிரெக்சிட்’டை நிறைவேற்ற முன்னுரிமை

### பிரிட்டன் மகாராணி தெரிவிப்பு

லண்டன்,ஒக்.16
இந்த மாதம் 31ஆம் திகதிக்குள் ‘பிரெக்சிட்’டை நிறைவேற்றுவதற்கு முன்னுரிமை வழங்கப்படும் என்று பிரிட்டனின் ராணி இரண்டாம் எலிசபெத் தெரிவித்தார். பிரிட்டனின் நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:



எதிர்வரும் 31ஆம் திகதிக்குள் ‘பிரெக்சிட்’டை நிறைவேற்றுவதற்கு முன்னுரிமை வழங்கப்படும். ‘பிரெக்சிட்’டை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு அரசு எப்போதுமே முன்னுரிமை அளிக்கும் என்றார்.

**பின்னணி**

ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிட்டன் வெளியேறும் ‘பிரெக்சிட்’ நடவடிக்கைக்கான [illegible] எதிர்வரும் 31ஆம் [illegible] வடைகிறது. ‘பிரெக்சிட்’ ஒப்பந்தத்தைப் பிரிட்டனின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்ந்து நிராகரித்து வருவதால் நாடாளுமன்றத்தை முடக்குவதற்குப் பிரிட்டனின் தலைமை அமைச்சர் போரிஸ் ஜோன்சன் திட்டமிட்டார். இதற்கு எலிசபேத் மகாராணியும் அனுமதியளித்தார். ஆனால், நாடாளுமன்றத்தை முடக்குவது சட்ட மீறல் என்று பிரிட்டனின் நீதிமன்றம் எச்சரித்தது. இதனால் எலிசபேத் மகாராணி குறித்து விமர்சனங்கள் [illegible]. இந்த நிலையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



## இன்றைய நாள்

**மேடம்:** இனிய அணுகுமுறையால் கூடுதல் நற்பலன் பெறுவீர்கள். உறவினர், நண்பர் பாராட்டுவர். தொழிலில் உற்பத்தி, விற்பனையின் அளவு அதிகரிக்கும். உபரி பண வரவில் சேமிப்பு உயரும். இஷ்ட தெய்வ வழிபாடு நிறைவேற்றுவீர்கள்.

**இடபம்:** சில பணிகளை நிறைவேற்ற கட்டாய சூழ்நிலை ஏற்படலாம். நண்பரின் உதவி ஓரளவு கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் அளவான பணவரவு கிடைக்கும். தியானம், தெய்வ வழிபாடு மனம் அமைதி பெற உதவும்.

**மிதுனம்:** உங்கள் பேச்சில் மங்கல தன்மை நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி பணி நிறைவேறும். பணம் கொடுக்கல், வாங்கல் சீராகும்.

**கடகம்:** எவரிடமும் உயர்வு, தாழ்வு கருதாமல் பழகுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பெற புதிய வாய்ப்பு வரும். உபரி பணவரவு கிடைக்கும். புத்திரர் விரும்பிய பொருள் வாங்கி தருவீர்கள்.

**சிம்மம்:** உங்களின் நற்செயலை சிலர் பரிகாசம் செய்து பேசுவர். தொழில், வியாபாரத்தில் நிலுவை பணி நிறைவேற்றுவது நல்லது. சராசரி அளவில் பணவரவு கிடைக்கும்.

**கன்னி:** மனதில் இனம் புரியாத குழப்பம் ஏற்படலாம். உங்கள் நலம் விரும்புபவரின் ஆலோசனை நல்வழி தரும். தொழில், வியாபாரம் சராசரி அளவில் இயங்கும். பண செலவில் இயன்ற அளவு சிக்கனம் பின்பற்றுவீர்கள்.

**துலாம்:** குடும்ப உறுப்பினர்கள் உதவுவர். தொழில், வியாபார வளர்ச்சியில் புதிய பரிமாணம் ஏற்படும். பண பரிவர்த்தனையில் முன்னேற்றம் உண்டு. அரசியல்வாதிகளுக்கு பதவி கிடைக்க அனுகூலம் உருவாகும்.

**விருச்சிகம்:** நண்பரிடம் சொந்த விஷயம் பேசுவீர்கள். மனதில் மகிழ்ச்சியும், உற்சாகமும் நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி பலன் உண்டு. பண பரிவர்த்தனை திருப்திகரமாகும்.

**தனுசு:** சிறிய வேலைக்கும் அதிக முயற்சி தேவைப்படலாம். இனிய அணுகுமுறை நற்பலன் தரும். தொழில், வியாபாரத்தில் உள்ள மந்த நிலையை சரி செய்வது நல்லது.

**மகரம்:** சிலரது பேச்சு உங்கள் மனதை பாதிக்கலாம். தொழில், வியாபாரத்தில் நிலுவை பணி நிறைவேற்றுவது நல்லது. குடும்ப செலவுக்கு கூடுதல் பணம் தேவைப்படும்.

**கும்பம்:** எவருக்கும் தகுந்த மரியாதை தருவீர்கள். இஷ்ட தெய்வ அருள் பலம் துணை நின்று உதவும். பணவரவும் நன்மையும் அதிகரிக்கும்.

**மீனம்:** முக்கியமான செயல் நிறைவேற மாற்று உபாயம் பலன் தரும். தொழில், வியாபாரம் சராசரி அளவில் இருக்கும். சேமிப்பு பணம் குடும்ப செலவுகளுக்கு பயன்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளை மீளுருவாக்க முயற்சித்தோரே கைது

## மலேசிய தலைமை அமைச்சர்

கொழும்பு, ஒக். 16

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை மீளுருவாக்கம் செய்ய முயற்சித்த குற்றச்சாட்டில் மலேசியாவில் கைதான 12 பேரும் பொலிஸாரின் நியாயமான காரணங்களின் அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ளதாக மலேசிய தலைமை அமைச்சர் மஹதீர் மொஹமட் தெரிவித்துள்ளார்.

பன்னாட்டு பொருளாதார மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமீழீழ விடுதலைப்புலிகள் அமைப்பை மீள உருவாக்க முயற்சித்ததாக தெரிவித்து, அவர்கள் கைது செய்யப்பட்டமைக்கு மலேசியாவில் தொடர்ச்சியாக ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கைது செய்யப்பட்டவர்களது தொலைபேசி, அவர்கள் தங்கியிருந்த இடம் என்பவற்றை மலேசிய பயங்கரவாத தடுப்பு பிரிவினர் சோதனைக்கு உட்படுத்தியுள்ளனர்.

இதன்போது தமீழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் தொடர்புடைய தகவல்களுடன், சுவரொட்டிகள், அச்சுப்படங்கள் உள்ளிட்ட பொருள்கள் மீட்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

அவர்கள் கைது செய்யப்பட்டமை தொடர்பாக எமது பொலிஸார் விளக்கமளித்துள்ளனர். அவை ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களே - என்றார். (ஒ,5)

### வேட்பாளர்கள்...

என்று அரச தலைவர் ஊடகப் பிரிவு நேற்றிரவு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-22)

### ஐ.நா. தீர்மானத்தை...

அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ச கொழும்பில் நேற்று உள்நாட்டு, வெளிநாட்டுச் செய்தியாளர்களைச் சந்தித்தார். அவர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இந்தச் செய்தியாளர் சந்திப்பில் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் தலைவர் மகிந்த ராஜபக்ச, சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் கூட்டணிக் கட்சிகளின் தலைவர்கள் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

அவரிடம் கேட்கப்பட்ட கேள்விகளும் அவர் அளித்த பதில்களும் வருமாறு:-

கேள்வி: 2015 ஆம் ஆண்டு இலங்கை அரசு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் முன்வைத்த தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கியுள்ளது. உங்களின் அரசு அமைக்கப்பட்டால் இதனை நீங்கள் முன்னெடுத்துச் செல்வீர்களா?

பதில்: நாம் எப்போதும் ஐக்கிய நாடுகளுடன் இணைந்து செயற்பட்டு வருகின்றோம். ஆனால் எங்கள் மத்தியில் மாறுபட்ட நிலைப்பாடுகளே உள்ளன. இப்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள தீர்மானம் சட்டபூர்வமானதில்லை என்பதே எனது தனிப்பட்ட கருத்தாகும். ஆனால் நாம் தொடர்ந்தும் ஐக்கிய நாடுகள் சபையுடனும் மனித உரிமைகள் சபையுடன் இணைந்து செயற்படத் தயராகவுள்ளோம். ஏதேனும் முரண்பாடுகள் இருந்தால் கலந்துரையாடி தீர்வுகளை எட்ட நாம் தயராகவே உள்ளோம்.

**கேள்வி:** ஒரு இராச்சியமாக நீங்கள் தீர்மானத்தை அங்கீகரிக்கவில்லையா?

**பதில்:** இந்தத் தீர்மானத்தைக் கட்சியாக நாம் ஏற்கனவே நிராகரித்துவிட்டோம். மக்களும் அதை நிராகரித்துள்ளனர். இந்த விவாகரத்தில் எமது கொள்கைத் திட்டமும் நடைமுறை அரசின் கொள்கைத்திட்டமும் வேறுபட்டது.

**கேள்வி:** வெள்ளை வான் கடத்தல், இராணுவ ஆக்கிரமிப்பு உங்களின் ஆட்சியில் ஏற்படும் எனக் கூறும் குற்றச்சாட்டுக்கள் குறித்து உங்களின் கருத்து என்ன?

**பதில்:** வெள்ளை வான் கடத்தல் கலாசாரம் நான் உருவாக்கிய ஒன்றல்ல. பலருக்கும் 1989ஆம் ஆண்டு காலம் மறந்துவிட்டது. வெள்ளை வான் அப்போது இருக்கவில்லை. வெள்ளை லொறிதான் சென்றது. வதை முகாம்கள் இருந்தன. விமானங்களில் கடத்தி கடலில் வீசிய காலமும் இருந்தது. நான் அவ்வாறு எதனையும் செய்யவில்லை.

**கேள்வி:** நல்லிணக்கத்தை உருவாக்க நீங்கள் கையாளும் கொள்கைத்திட்டம் என்ன?

**பதில்:** எனது கொள்கைத் திட்டம், இந்த நாட்டில் ஒரு மனிதர் வாழக்கூடிய சூழல், கண்ணியமாக அமைதியாக வாழக்கூடிய வாய்ப்புக்கள் சகல தரப்பினருக்கும் உருவாக்கிக்கொடுக்க வேண்டும் என்பதே. அதில் சிறந்த கல்வி, சிறந்த வாழ்வாதாரம், சிறந்த இருப்பிடம் அனைவருக்கும் கொடுக்க வேண்டும். சகலரையும் மதிக்கும் கொள்கையை உருவாக்க வேண்டும். முப்பது ஆண்டு காலப் போரால் சில பகுதிகளில் வாழ்வோர் இன்றும் பின்தங்கியுள்ளனர். ஏனையவர்களுடன் ஒப்பிடுகையில் அவர்கள் பின்னடைவில் உள்ளனர். அவர்களை முன்னேற்ற வேண்டும். 90 வீதமான நிலங்களை நாம் விடுவித்தோம். இராணுவ வசமிருந்த பொதுமக்களின் நிலங்களை நாம் விடுவித்தோம் - என்றார். (எ-22)

### கூட்டமைப்புடன்...

வேட்பாளராகக் கோத்தபாய ராஜபக்ச அறிவிக்கப்பட்ட பின்னர் முதல் தடவையாக நேற்று கொழும்பு ஷங்ரிலா நட்சத்திர விடுதியில் உள்நாட்டு, வெளிநாட்டு ஊடகவியாளர்களை அவர் சந்தித்தார். அதில் மகிந்த ராஜபக்சவும் கலந்துகொண்டார். அங்கு கருத்துத் தெரிவித்தபோதே இவ்வாறு குறிப்பிட்டார். "தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்முடன் இதுவரை பேச்சுகளை முன்னெடுக்க வரவில்லை" எனவும் அவர் குறிப்பிட்டார்.

அனைத்துத் தரப்பினருடைய தேர்தல் விஞ்ஞாபனம் மற்றும் அவர்களது கொள்கைள் அறிவிக்கப்பட்ட பின்னரே ஆதரவு தொடர்பாகத் தீர்மானிப்போம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்திருந்தனர். சிங்கப்பூரிலிருந்து நாடு திரும்பிய பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சு நடத்தப்படும் என கோத்தபாய ராஜபக்ச முன்னர் தெரிவித்திருந்தார். (எ-22)

### காணாமல் ஆக்கப்பட்டோர்...

பவர்களின் உடல்கள் அவர்களின் உறவுகளுக்குக் கிடைக்காமல் போவதன் காரணத்தால்தான் அவ்வாறு கூறுவார்கள் என்று புதிய விளக்கம் அளித்திருந்த நிலையில், அவருக்காகப் யாழ்ப்பாணத்தில் பரப்புரைகளை மேற்கொண்டுவரும் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்சவுக்கு ஆதரவாக நாமல் ராஜபக்ச யாழ்ப்பாணத்தில் பரப்புரைக் கூட்டங்களை நடத்தி வருகின்றார். மானிப்பாய், ஆனைக்கோட்டையில் நேற்று நடந்த கூட்டம் ஒன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது கடந்த ஆட்சியில் வடக்கு மக்களுக்குப் பல அபிவிருத்திகளைச் செய்தோம். அதனால்தான் இன்று யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கான பயணம் இலகுவாக அமைகின்றது. பாடசாலை அபிவிருத்தி போன்ற பல அபிவிருத்திகளைச் செய்தோம். இன்று எல்லாம் தலைகீழாக நடக்கிறது.

சம்பந்தன் ஐயாவை நான் மதிக்கிறேன். அவர் ஒரு சிறந்த கல்வியாளர் வயதில் மூத்தவர் என்பதால் நான் மதிக்கிறேன். ஆனால் அவர்கள் மக்களை ஏமாற்றி கொண்டு இருக்கிறார்கள். இந்த தீபாவளிக்குள், அடுத்த தீபாவளிக்குள் தீர்வு வரும் வரும் என்று சொல்லி கொண்டே இருக்கிறார். ஆனால் இன்னமும் அவருக்கு இந்த நான்கு வருடத்தில் தீபாவளி வரவில்லை போல இருக்கிறது. சம்பந்தன் போன்று நாம் பொய் சொல்ல மாட்டோம். நாம் ஆட்சிக்கு வந்து இரண்டு வருடங்களுக்குள் இதற்கான தீர்வை தருவோம்.

இரணைமடு தண்ணீர், பலாலி வானூர்தி நிலையம் போன்ற அபிவிருத்தி நடவடிக்கைகள் எம்மாலேயே ஆரம்பிக்கப்பட்டன. இன்று பலாலி விமான நிலையம் அபிவிருத்தி செய்ய படுகிறது. அது வரவேற்க தக்கது. அதைவிடத் தண்ணீர் பிரச்சினை எமக்கு முக்கியம். நாம் ஆட்சிக்கு வந்து [illegible] இந்த தண்ணீர் பிரச்சினைக்கு தீர்வு [illegible] இந்த தேர்தலில் வெல்வது உறுதி. அதற்கு நீங்கள் பலம் சேருங்கள் - என்றார். (எ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 41 ஆண்டுகளுக்கு...

கத் தரமுயர்த்தப்பட்டுள்ளது. நாளை வானூர்தி நிலையம் திறந்து வைக்கப்படவுள்ள நிலையில் நேற்று இந்திய விமானம் வானூர்தித் தளத்தில் தரையிறங்கியது.

72 ஆசனங்களைக் கொண்ட அந்த இந்தியன் எயார் லைன் வானூர்தியில் இந்தியாவின் விமானக் கட்டுப்பாட்டு அதிகாரிகள், பொறியியலாளர்கள், தொலைத்தொடர்பு இயக்குநர்கள், விமான நிலைய இயக்குநர்கள், ராடர் இயக்குநர்கள் என இந்திய அதிகாரிகள் 30பேர் வந்தனர். அவர்களை யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதரக அதிகாரிகள் வரவேற்றனர். விமானத்தில் வந்த குழு யாழ்ப்பாணம் பன்னாட்டு வானூர்தித் தளத்தின் தரத்தையும், தொழில்நுட்பப் பணிகளையும் மதிப்பீடு செய்தனர். ஓடு தளமும் அவர்களால் தர மதிப்பீடு செய்யப்பட்டது. நாளை வானூர்தித் தளம் திறந்து வைக்கப்படவுள்ள நிலையில் நாளையும் இந்திய வானூர்தி ஒன்று தரையிறங்கும் என்று தெரியவருகின்றது. அந்த விமானத்தில் இந்திய அதிகாரிகள் பலர் வருவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-105,26)

### குடிவரவு....

ளுக்கு உட்படுத்தப்பட்டனர்.

அவர்களின் கடவுச்சீட்டுக்களில் நுழைவிசைவு, அனுமதி முத்திரை குத்தப்பட்டது டன், மாலை இந்தியா திரும்பியபோது வெளியேறியமைக்கான முத்திரை கடவுச் சீட்டுக்களில் பொறிக்கப்பட்டது. இதன்மூலம் யாழ்ப்பாணம் பன்னாட்டு வானூர்தி நிலையத்தில் நேற்றுமுதல் குடிவரவு குடியகல்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதேவேளை, வானூர்தித் தளத்தின் பயணிகள் சேவைக்கு ஏற்ற தகுதி நிலமைகள் தொடர்பாக இந்திய அதிகாரிகள் திருப்தி அடைந்துள்ளனர் என்று கூறப்படுகின்றது. கட்டடங்கள், மின்சார வசதிகள், கட்டுமானப் பணிகள் இன்னமும் நிறைவு செய்யப்படவில்லை. அவற்றை நிறைவு செய்யும் நடவடிக்கைகள் முழுவீச்சில் நடைபெறுகின்றன. சுமார் 10 தினங்களில் அவை நிறைவடையும் என்று கூறப்படுகின்றது. (எ-105)

### காணி....

மையாளர்கள் கோரிக்கை விடுத்து ள்ளனர்.

பலாலி வானூர்தி நிலையம் சீரமைக்க ப்பட்டு யாழ்ப்பாணம் பன்னாட்டு வானூர்தி நிலையமாகத் தரமுயர்த்தப்பட்டுள்ளது. இந்த வானூர்தி நிலையம் நாளை திறக்கப்படவுள்ள நிலையில், அங்கு வரி விலக்கு விற்பனை நிலையங்கள், பன்னாட்டுப் பொருள் விற்பனைக் கூடங்கள், நாணமாற்று நிலையம் உட்படப் பல விற்பனைக் கூடங்கள் அமைக்கப்படவுள் ளன.

இவற்றைத் தெற்கில் உள்ள செல்வந்த வர்த்தகர்களுக்கு வழங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று அறிகின்றோம் என்று தெரிவித்துள்ள நில உரிமையாளர்கள், நில உரிமையாளர்களை அடையாளம் கண்டு அவர்களுக்கு இந்தச் சந்தர்ப்பத்தை வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

நிலங்களின் உரிமையாளர்களான எமது சம்மதம் இன்றி ஏனைய நடவடிக்கைகளுக்கு எமது நிலங்களை வழங்குவதை நாம் விரும்பவில்லை. நாங்கள் வீடுகள் காணிகளை இழந்து வாடகை வீடுகளில் குடியிருந்து, அலைகின்றோம். எமது காணிகளைப் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் படையினர் கையகப்படுத்தியுள்ளனர்.

பலாலிப் பிரதேசத்தில் உள்ள நில உரிமையாளர்களை அடையாளம் கண்டு, அவர்கள் அங்கு வர்த்தக நிலையத் தொகுதிகளை அமைப்பதற்கு மாவட்டச் செயலரும், பிரதேச சபையும் ஆவண செய்ய வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-105)

### கோடரியால்...

இந்தச் சம்பவம் நேற்று மாலை நடந்துள்ளது.

கலஸ்ரனுக்கும், கொழும்புத்துறையில் உள்ள ஒருவருக்கும் இடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது. அது முற்றி கைலப்பாகியுள்ளது. அதன்போது கலஸ்ரன் கோடாரியால் தலைப் பகுதியில் தாக்கப்பட்டுள்ளார். சம்பவ இடத்திலேயே கலஸ்ரன் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை யாழ்ப்பாணம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். உயிரிழந்தவரின் உடல் யாழ்ப்பாணம் போதனா மருத்து வமனையில் வைக்கப்பட்டுள்ளது. (எ-105)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம் ஒக்.16
உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் அரையிறுதியாட்டம் இன்று புதன்கிழமை மாலை 4 மணிக்கு திருக்குமரன் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இதில் குருநகர் பாடுமீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (23)

------

யாழ்ப்பாணம் ஒக்.16
வடமராட்சி கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் மனோகரா விளையாட்டுக்கழகம் நடத்தும் அணிக்கு 11 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் மனோகரா விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.
இதில் இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென்.சேவியர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நியூட்டன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சக்திவேல் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உடுப்பிட்டி யுத் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (23)




# கே.ஸி.ஸி.ஸி. வி.க. கிண்ணம் வென்றது

யாழ்ப்பாணம்,ஒக்.16
திருநெல்வேலி காளி கோவிலடி சனசமூக நிலையத்தின் 75ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட 10 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கடினப்பந்துத் தொடரில் கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழக அணி கிண்ணம் வென்றது.
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்ற இறுதியாட்டத்தில் கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அணி மோதியது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அணி களத்தடுப்பைத் தீர்மானித்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக்கழக அணி நிர்ணயிக்கப்பட்ட 10 பந்துப் பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து 103 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஜெயறூபன் 39ஓட்டங்களையும், யனுதாஸ் 26 ஓட்டங்களையும், சத்தியன் 14 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் வாமணன் 3 இலக்குகளையும், பிரசன்னா, கோபிராம் ஆகியோர் தலா ஒவ்வொரு இலக்கையும் வீழ்த்தினர்.
பதிலுக்குக் களமிறங்கிய ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணி நிர்ணயிக்கப்பட்ட 10 பந்துப் பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து 72 ஓட்டங்களை மட்டுமே பெற்று 31 ஓட்டங்களால் வெற்றியைத் தவறி விட்டது. அணி சார்பில் நுக்ஸ்மன் 20 ஓட்டங்களையும், கிரிசாந் 16 ஓட்டங்களையும், சோபன் 10ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் பிரதீஸ்,நிமலதாஸ்,நிருசிகன் ஆகியோர் தலா 2 இலக்குகளை வீழ்த்தினர்.
ஆட்டநாயகன் மற்றும் சிறந்த துடுப்பாட்ட வீரராக கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக்கழக அணி வீரர் ஜெயறூபன் தெரிவானார். சிறந்த பந்து வீச்சாளராக ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அணி வீரர் வாமணன் தெரிவானார். சகலதுறை ஆட்டநாயகனாக கே.ஸி.ஸி விளையாட்டுக்கழக அணி வீரர் பிரதீஸ் தெரிவானார். தொடராட்ட நாயகனாக ஹட்லியைஸ் விளையாட்டுக்கழக அணி வீரர் பிரசாந் தெரிவானார்.
இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினர்களாக இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சோ.சேனாதிராசாவும், மதிப்புறு விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட துடுப்பாட்டச் சங்கத் தலைவர் எ.எஸ்.நிசாந்தன் சிறப்பு விருந்தினராக முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் சுந்தரலிங்கம் சுகிர்தன், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி முதல்வர் எஸ்.கே எழில்வேந்தன், லங்கா எல்.ஓ.சி பி.எல்.சியின் உதவி முகமையாளர் வி.சுதர்சனன் ஆகியோர் கலந்து கொண்டனர். (23)

## சதுரங்க போட்டிக்கான விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம்,ஒக்.16
இலங்கை சதுரங்க சம்மேளனத்தால் நடத்தப்படும் இளையோருக்கான சதுரங்கச் சுற்றுப் போட்டி-2019, யாழ்ப்பாண மாவட்டத்தில் இந்த மாதம் 18,19,20ஆம் திகதிகளில் கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெற உள்ளது.
இந்தப் போட்டி 18 ஆம் திகதி பி.ப. 3 மணிக்கு ஆரம்பமாகும். இதில் கலந்து கொள்ளவுள்ள போட்டியாளர்கள் சதுரங்க பலகையுடன் வருகை தர வேண்டும்.
மேற்படி போட்டியில் பங்குபற்ற விரும்பும் போட்டியாளர்கள் போட்டிக்கான பதிவுகளை 17ஆம் திகதி பி.ப 2.30 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியில் மேற்கொள்ள முடியும்.

## மகுடம் சூடியது நேதாஜி அணி

யாழ்ப்பாணம்,ஒக்.16
வல்வை தீருவில் விளையாட்டுக் கழகம் நடத்திய வல்வைக்குட்பட்ட கழகங்களுடையிலான அணிக்கு 9 வீரர்கள் பங்குபற்றிய கால்பந்தாட்டச் சுற்றுத் தொடரில் நேதாஜி அணி கிண்ணம் வென்றது.
தீருவில் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் நேதாஜி விளையாட்டுக் கழக அணியைஎதிர்த்துசைனிங்ஸ் அணி மோதியது. முற்பாதியாட்டம் எந்தவித கோல்களும் பெறப்படாது முடிவுற்றது.
இரண்டாம் பாதியாட்டத்தில் இரு அணிகளும் தமது அணிக்காக கோல்களைப் பெற்றுக் கொள்வதற்கு கடும் முயற்சிகளை மேற்கொண்டனர். இரு அணிகளினதும் ஆட்டம் மேலும் விறுவிறுப்படைய ஆட்டத்தின் முதலாவது கோலை சைனிங்ஸ் அணி போட பதிலுக்கு நேதாஜி அணியும் ஓர் கோலைப் பதிவு செய்தது. போட்டியின் இறுதி நேரத்தில் நேதாஜி அணி 2ஆவது கோலை பதிவு செய்து வெற்றி வாய்ப்பை உறுதிப்படுத்தியது. ஆட்ட நேரமுடிவில் நேதாஜி அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது.
ஆட்டநாயகனாக நேதாஜி விளையாட்டுக் கழக அணி வீரர் ஞா.ரசிகரன் தெரிவானார். தொடராட்ட நாயகனாக சைனிங்ஸ் விளையாட்டுக் கழக அணி வீரர் பிரசாந் தெரிவானார், சிறந்த பின்கள வீரராக நேதாஜி விளையாட்டுக் கழக அணி வீரர் சி.தர்சன் தெரிவானார்,சிறந்த கோல்காப்பாளராக நேதாஜி விளையாட்டுக் கழக அணியின் கோல் காப்பாளர் ஜெ.பிரகதீஸ்வரன் தெரிவானார். (23)

## கலைமதி - நண்பர்கள் இறுதியில் பலப்பரீட்சை

55ஆவது இராணுவ படைப் பிரிவினர் நடத்திய கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம் இன்று புதன்கிழமை யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் மாலை 4மணிக்கு இடம் பெறவுள்ளது.
இறுதியாட்டத்தில் நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (23)







## தேசிய கபடி அணியில் தமிழ் வீராங்கனைகள்

யாழ்ப்பாணம்,ஒக்.16
தெற்காசிய கபடி போட்டியில் பங்குபற்ற இருக்கும் இலங்கை பெண்கள் தேசிய கபடி அணியின் 12 பேர் கொண்ட குழாமில் இ.பரியவர்ணா,வி.டிலக்சனா ஆகிய 2 தமிழ் வீராங்கனைகள் உள்வாங்கப்பட்டுள்ளனர். (23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீசாலை விக்னேஸ்வரா ம.வி. மாணவி ஜாதவிக்கு தங்கம்

யாழ்ப்பாணம்,ஒக்.16



தேசிய மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட பளுதூக்கல் போட்டியில்மீசாலைவிக்னேஸ்வரா மகா வித்தியாலய மாணவி ஜெ.ஜாதவி தங்கப் பதக்கத்தைச் சுவீகரித்தார்.
தேசிய மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான பளுதூக்கும் போட்டி நேற்றுமுன்தினம் பொலநறுவை றோயல் கல்லூரி உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்றது.
இதில் பெண்களுக்கான 45 கிலோ எடைப் பிரிவில் மீசாலை விக்னேஸ்வரா மகா வித்தியாலயத்தைப் பிரதிநிதித்துவம் செய்த ஜெ.ஜாதவி சினெச் முறையில் 37 கிலோ பளுவையும், கிளின் அன் ஜக் முறையில் 45 கிலோ பளுவையும் ஒட்டுமொத்தமாக 82 கிலோ பளுவைத் தூக்கி தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார். (422-159)



# கபடிப் போட்டியில் கிளி. இந்து சம்பியன்

கிளிநொச்சி, ஒக்.16
தேசிய மட்ட பாடசாலைகளுக்கிடையிலான 20 வயதுக்குட்பட்ட பிரிவு பெண்களுக்கான கபடிப் போட்டியில் கிளிநொச்சி இந்துக் கல்லூரி பெண்கள் அணி தங்கப் பதக்கத்தை சுவீகரித்தனர்.
கிளிநொச்சி இந்துக்கல்லூரி அணியை எதிர்த்து நெல்லியடி மத்திய கல்லூரி அணி மோதியது. இதில் கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணி 44:18 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றி கிண்ணம் வென்றது.
சிறந்த வீராங்கனையாக கிளிநொச்சி இந்துக் கல்லூரி மாணவி வி.நிதுஷா தெரிவு செய்யப்பட்டார். இவர்களுக்கான மதிப்பளிப்பு நிகழ்வு பாடசாலையில் இன்று இடம்பெறவுள்ளது.(159)

முல்லைத்தீவு

## தண்டுவான் அ.த.க.பாடசாலை மாணவி செ.ரிசபாவுக்கு தங்கம்



யாழ்ப்பாணம்,ஒக்.16
தேசிய மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான பளுதூக்கல் போட்டி பொலநறுவை றோயல் கல்லூரியில்நடைபெற்று வருகின்றது. இதில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற போட்டியில் 59 கிலோ எடைப்பிரிவு போட்டியில் முல்லைத்தீவு தண்டுவான் அ.த.க.பாடசாலை மாணவி செ.ரிசபா முதலிடத்தைப் பெற்று தங்கம் வென்றார். இதனால் அவர் இந்த வெற்றியின் மூலம் அந்தப் பாடசாலைக்கும் முல்லைத்தீவு மாவட்டத்துக்கும் பெருமை சேர்த்துள்ளார். (222)



சர்ச்சைக்குரிய

## சுப்பர் ஓவர் விதியை மாற்றியது ஐ.சி.சி

சுப்பர் பந்துப் பரிமாற்றத்தில் கடைபிடிக்கப்பட்டு வந்த விதிமுறைகளை தற்போது ஐ.சி.சி. மாற்றியமைத்துள்ளது.
12ஆவது உலகக் கிண்ணத் தொடர் கடந்த ஜூலை மாதம் முடிவுடைந்தது. இந்தத் தொடரில் இங்கிலாந்து அணி கிண்ணம் வென்றது.
பரபரப்பாக நடைபெற்ற இறுதிப் போட்டியில் இங்கிலாந்து மற்றும் நியூசிலாந்து அணிகள் தலா 241 ஓட்டங்களை குவித்தன. இதனையடுத்து யார் வெற்றியாளர் என்று தீர்மானிக்க சுப்பர் பந்துப் பரிமாற்ற முறை கடைப்பிடிக்கப்பட்டது.
இந்த சுப்பர் பந்துப் பரிமாற்றத்திலும் இரு அணிகளும் தலா 15 ஓட்டங்கள் எடுத்தன. இதனைத் தொடர்ந்து இந்தப் போட்டியில் அதிக நான்கு ஓட்டங்கள் அடித்த அணி [illegible] உலகக் கிண்ணத்தை வென்றது.
எனினும் இதன் பின்னர் இந்தப் போட்டியின் முடிவு பல சர்ச்சைகளை ஏற்படுத்தியது. இந்த முடிவை மாற்ற வேண்டும் எனப் பலர் கோரிக்கை வைத்தனர்.
இந்த நிலையில் ஐ.சி.சி. அதனை மாற்றி நடவடிக்கை எடுத்தது. அதன்படி பன்னாட்டு கிரிக்கெட் தொடர்களில் ஒரு போட்டி சமநிலையில் முடிந்தால், போட்டியின் வெற்றியாளரை தீர்மானிக்க சுப்பர் பந்துப் பரிமாற்ற முறை பயன்படுத்தப்படும். இந்த சுப்பர் பந்துப் பரிமாற்றத்திலும் இரு அணிகளும் ஒரே ஓட்டங்களை எடுக்கும் பட்சத்தில் முடிவு கிடைக்கும் வரை சுப்பர் பந்துப் பரிமாற்ற முறை பயன்படுத்தப்படும் என்று ஐ.சி.சி. அறிவித்துள்ளது. அத்தோடு இந்தப் புதிய விதிகள் ஐ.சி.சி.யின் ரி- 20 தொடர்களில் பயன்படுத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.



## முல். மாவட்ட செயலக அணி இறுதியாட்டத்துக்கு முன்னேற்றம்

முல்லைத்தீவு மாவட்ட அரச திணைக்களங்களுக்கு இடையிலான மாவட்ட செயலர் வெற்றிக் கிண்ணத்துக்கான ஆண்களுக்கான கால்பந்தாட்டத் தொடரில் முல்லைத்தீவு மாவட்டச் செயலக அணி வெற்றி பெற்று இறுதிக்கு முன்னேறியது.
புதுகுடியிருப்பு இரணைப்பாலை மைதானத்தில் இடம்பெற்ற ஆண்களுக்கான அரையிறுதியாட்டத்தில் முல்லைத்தீவு மாவட்டச் செயலக அணியை எதிர்த்து புதுகுடியிருப்பு பிரதேச செயலக அணி மோதியது. இதில் இரு அணிகளும் எந்த வித கோல்களையும் பதிவு செய்யாது போக ஆட்டம் சம நிலையில் முடிவடைந்தது. வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக சமநிலை தகர்ப்பு உதை வழங்கப்பட்டது. இதில் முல்லைத்தீவு மாவட்டச் செயலக அணி [illegible] கில் வெற்றி பெ[illegible] தகுதி பெற்றது.

## அஸ்வினை மாற்றும் செயற்பாடு கைவிடப்பட்டது

கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியின் தலைவராக செயற்பட்ட ரவிச்சந்திரன் அஸ்வினை அந்த அணி டெல்லி கப்பிட்ல்ஸ் அணிக்கு விற்க இருந்த முடிவை மாற்றியுள்ளது.
இந்திய டெஸ்ட் கிரிக்கெட் அணியின் முன்னணி சுழற்பந்து வீச்சாளராக திகழ்பவர் அஸ்வின். இவர்ஐ.பி.எல்லில் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணிக்காக விளையாடி வருகிறார். கடந்த இரண்டு தொடர்களிலும் அவர் அந்த அணியின் தலைவராகச் செயற்பட்டார்.
இவரை டெல்லி கப்பிட்டல்ஸ் அணிக்கு விற்க கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி முடிவு செய்தது. இதுகுறித்து பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருப்பதாக தகவல்கள் வெளியாகியிருந்தன.
இந்த நிலையில் அந்த முயற்சி கைவிடப்பட்டு கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியிலேயே அஸ்வின் இருப்பார் என அந்த அணியின் உரிமையாளர்களில் ஒருவரான நெஸ் வாடியா தெரிவித்தார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;
கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியின் நிர்வாகம் மறுபரிசீலனை செய்து, அணியின் ஓர் அங்கமாக அஸ்வினை வைத்துக்கொள்ள முடிவு செய்துள்ளது. டெல்லி கப்பிட்டல்ஸ் அணியுடன் பேச்சுவார்த்தைகள் நடந்தமை உண்மை தான். ஆனால், அதில் நல்ல முடிவு எட்டப்படவில்லை-என் றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரொனால்டோ 700 கோல்கள்

கால்பந்து வாழ்க்கையில் தனது 700 ஆவது கோலை பதிவு செய்தார் கிறிஸ்டியானோ ரொனால்டோ.

கால்பந்து போட்டியில் தலைசிறந்த வீரராக திகழ்பவர் போர்த்துக்கல் நாட்டைச் சேர்ந்த கிறிஸ்டியானோ ரொனால்டோ. நேற்றுமுன்தினம் உக்ரைனுக்கு எதிரான ஆட்டத்தில் ஓர் கோல் அடித்ததன் மூலம் தனது 700 ஆவது கோலை பதிவு செய்து உலகளவில் 700ஆவது கோல் அடித்த 7ஆவது வீரர் என்ற பெருமையை அவர் பெற்றார்.

இந்தச் சாதனை குறித்து அவர் தெரிவிக்கையில்;

சாதனைகள் வருவது வழக்கமானது. நான் அதை எதிர்பார்த்து இருப்பதில்லை. அது என்னை நோக்கி வரும். அணி வீரர்கள், பயிற்சியாளர்கள், சக வீரர்கள் இல்லாமல் இந்தச் சாதனையை எட்ட இயலாது. அவர்களுக்கு நன்றி சொல்லியாக வேண்டும். என்னுடைய கால்பந்து வாழ்க்கையில் இது சிறப்பானதுதான். என்றாலும், உக்ரைனுக்கு எதிராக 1:2 எனத் தோல்வியடைந்ததால், கசப்பான இனிப்பு- என்றார்.

கிறிஸ்டியானோ ரொனால்டோ சாம்பியன்ஸ் லீக்கில் 127 கோல்கள் அடித்தார். தனது முதல் கழக அணியான ஸ்போர்ட்டிங் அணிக்காக 2002, 2003இல் ஐந்து கோல்கள் அடித்துள்ளார். மான்செஸ்டர் யுனைடெட் அணிக்காக 232 போட்டிகளில் 118 கோல்கள் அடித்தார்.

அதன்பின் ரியல் மாட்ரிட் அணிக்காக 438 போட்டிகளில் 450 கோல்கள் அடித்தார். தற்போது விளையாடி வரும் யுவான்டஸ் அணிக்காக 51 போட்டிகளில் 32 கோல்கள் அடித்துள்ளார். போர்த்துக்கல் அணிக்காக 95 கோல்கள் அடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

**J.C.B விற்பனைக்கு**

மிகக்குறைந்த விலையில் J.C.B விற்பனைக்குண்டு.



**077 603 0507**

**காணி விற்பனைக்கு**

12/1, வில்வந்தெரு, அரியாலையில் 1¼ பரப்பு வீட்டுடன் காணி விற்பனைக்குண்டு. (புங்கங்குளம் புகையிரத நிலையத்திற்கு அருகாமை)

**077 087 2431**

**வீடு வாடகைக்கு**

இல. 75, ஈச்சமோட்டை வீதி, சுண்டுக்குளியில் உள்ள 7 அறைகளைக் கொண்ட சகல வசதிகளையும் கொண்ட மாடிவீடு வாடகைக்கு விடப்படும். அரச, தனியார் நிறுவனங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**தொடர்பு: 077 772 9207**

**அமெரிக்க லொத்தர் இலவச விசா**

பதிவுகள் ஆரம்பமாகிவிட்டன

2021ல் நீங்களும் அமெரிக்காவில்..

18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்

**0768226241**

**V2 Travels**

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் 0768226243 | கிளிநொச்சி 0768226240 |
| நெல்லியடி 0776699892 | சாவகச்சேரி 0768226242 |
| திருகோணமலை 0768226237 | மானிப்பாய் 0768226238 |
| சுன்னாகம் 0764550670 | கொடிகாமம் 0764550675 |
| புதுக்குடியிருப்பு 0764550673 | மருதங்கேணி 0764550671 |
| பருத்தித்துறை 0768226230 | வல்வெட்டித்துறை 0776697960 |

உச்சிப்பிள்ளையார் துணை

## தென்னிந்திய ஆலய தரிசனம்

**தமிழ்நாடு, ஆந்திரா, பாண்டிச்சேரி ஊடான ஆலய தரிசனம்**

**நாள்கள் :-12 ஆரம்பம் :- 03.12.2019**

**தரிசிக்கும் இடங்கள்:-** திருப்பதி, பஞ்சபூதத் தலங்கள் 5, ஆறுபடை முருகன் ஆலயங்கள் 6, நவக்கிரக ஆலயங்கள் 9, தனித்தனியாக, மேல்மருவத்தூர், காஞ்சிபுரம், இராமேஸ்வரம், மகாபலிபுரம், மதுரை மீனாட்சி, உச்சிப்பிள்ளையார், வேறு சுற்றுலா இடங்களும் வரும். விருப்பமுடையவர்கள் பதிவு செய்யவும். சென்னையில் ஒருநாள் சொப்பிங்

**வட இந்திய, காசி சிவாலய தரிசனம்**

**நாள்கள் :-10 ஆரம்பம் :- 23.11.2019**

**தரிசிக்கும் இடங்கள்:-** காசி விஸ்வநாதர், காசிவிசாலாட்சி - காளபைரவர், டெல்லி தாஜ்மகால், அலகாபாத், கங்கா ஜமுனா சரஸ்வதி சங்கமம்-கயா, புத்தகயா, இராமேஸ்வரம், உத்திர கோச மங்கை மதுரை மீனாட்சி, காசியில் 15 இடங்கள், தரிசிக்கலாம். விருப்பமுடையவர்கள் பதிவு செய்யவும். அனைத்துச் செலவுகளும் உட்பட கட்டணம் சென்னையில் ஒருநாள் சொப்பிங்.

**சிங்கப்பூர், மலேசியா சுற்றுலா**

**நாள்கள் :-06 ஆரம்பம் :- 06.01.2020**

பயணிகள் 10 பேர் விவரங்களைக் கேட்டறியவும். விருப்பமுடையவர்கள் முன்பதிவு செய்க.

**சீரடி மந்திராலய தரிசனம்**

**நாள்கள் :-07 ஆரம்பம் :- 23.12.2019**

**செல்லுமிடங்கள் சுருக்கமாக:-** சீரடி பண்டரிபுரம், நாராயணர், மந்திராலயம் ஸ்ரீசைலம், சனிசிங்கனாப்பூர், பாபாவின், வேறு இடங்களும் தரிசிக்கலாம். சென்னையில் ஒருநாள் சொப்பிங். பதிவு செய்க.

மு.க.மேல் குறிப்பிட்டுள்ள அனைத்து தரிசனம் சுற்றுலாக்களுக்கும் விமான ரிக்கற்றுகள், 3வேளை உணவு, தங்குமிடங்கள், AC வாகன வசதிகள், காப்பி, ரீ, குடிநீர், படகுக் கட்டணங்கள் அனைத்தும் எமது கட்டணத்துடன் அடங்கும். விவரங்களை கேட்டறிந்து பதிவு செய்யக.

**கலாநிதி.T.ஸ்ரீரெங்கநாதன் மகன் - ராஜன்**

**59, 3/6 செட்டியார் தெரு, கொழும்பு - 11**

**077 736 2154, 077 768 0102**

Email:- sriranganathan2601@gmail.com



# ஆர்ஜென்ரீனா அபார வெற்றி

ஆர்ஜென்ரீனா - ஈக்குவாடோர் அணிகளுக்கிடையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற நட்பு ரீதியிலான ஆட்டத்தில் ஆர்ஜென்ரீனா அணி 6:1 என்ற கணக்கில் அபார வெற்றி பெற்றது.

இரு அணிகளுக்கிடையிலான முதல் பாதி ஆட்டத்தின் 20ஆவது நிமிடத்தில் ஆர்ஜென்ரீனா வீரர் லூகாஸ் அலாரியோ முதல் கோலைப் போட்டு கணக்கை ஆரம்பித்து வைத்தார். அடுத்த 7ஆவது நிமிடத்தில் அந்த அணியின் வீரர் லிசாகுயிற்றோ அடுத்த கோலைப் போட்டார். 32ஆவது நிமிடத்தில் அந்த அணிக்கு பெனால்ட்டி முறையில் பரிடஸ் ஒரு கோலைப் பெற்றுக் கொடுக்க முதல் பாதி ஆட்டத்தில் 3:0 என்ற கணக்கில் ஆர்ஜென்ரீனா அணி முன்னிலையில் காணப்பட்டது.

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பித்த 4ஆவது நிமிடத்தில் ஆர்ஜென்ரீனா அணிக்கு பதிலடி கொடுக்கும் விதமாக ஈக்குவாடோர் அணி வீரர் ஏஞ்சல் மெனா ஒரு கோலைப் போட்டார். அடுத்த 66ஆவது நிமிடத்தில் ஆர்ஜென்ரீனா அணி வீரர் ஜேர்மன் பெசிலா ஒரு கோலைப் போட்டார். அதன் பின்னர் 82, 86ஆவது நிமிடங்களில் ஆர்ஜென்ரீனா வீரர்கள் அடுத்தடுத்து கோல்களைப் போட அந்த அணி இறுதியில் 6:1 என்ற கணக்கில் ஈக்குவாடோர் அணியை வீழ்த்தி அபார வெற்றி பெற்றது.

# திலங்க சுமதிபாலவுக்கு தடை



இலங்கை அணியின் முன்னாள் தலைவர் திலங்க சுமதிபால எதிர்காலத்தில் இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் நிர்வாகத்தில் எந்தவித பதவிகளையும் வகிக்க முடியாதென இலங்கை விளையாட்டுத்துறை அமைச்சர் ஹரின் பெர்ணான்டோ உத்தியோகபூர்வமாக அறிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

திலங்க சுமதிபால எந்தக் குழுவினதும், எந்தக் கூட்டத்திலும் கலந்து கொள்வதை தவிர்க்கவும்.

அவர் வாக்களிப்பதையும் கடந்த கால தலைவர் என்ற அடிப்படையில் செயற்படுவதையும் இலங்கை கிரிக்கெட்டை பிரதிநிதித்துவம் செய்வதையும் தடைசெய்யுங்கள் - என்றார்.

அமைச்சர் ஹரின் பெர்ணான்டோ தான் நியமித்த குழுவின் அறிக்கை வெளியாகும் முன்னர் திலங்க சுமதிபாலவுக்கு தடை விதித்திருந்தார். தற்போது குழுவின் அறிக்கை வெளியாகியுள்ளதை தொடர்ந்து உத்தியோகபூர்வமாக தடையை விதித்துள்ளார்.

இதேவேளை, இந்தத் தடை குறித்து தான் இன்னமும் அறியவில்லை என தெரிவித்துள்ள திலங்க சுமதிபால எனக்கு அறிவிப்பதற்கு முன்னர் அமைச்சர் ஊடகங்களுக்கு தெரிவித்து விட்டார் - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 16.10.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.